بسم الله الرحمن الرحيم

(நபியே!) மூஸாவுக்குப்பின் இஸ்ரவேல் மக்களின் தலைவர்களை நீர் கவனித்தீரா? அவர்கள் தம் நபியிடம்,'நாங்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதற்காக ஓர் அரசனை ஏற்படுத்துங்கள்'' என்று கூறியபோது, அவர், ''போர் செய்தல் உங்கள் மீது கடமையாக்கப்பட்டால், நீங்கள் போரிடாமல் இருந்துவிடுவீர்களா?'' என்று கேட்டார். அதற்கவர்கள், ''எங்கள் மக்களையும், எங்கள் வீடுகளையும் விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபின், அல்லாஹ்வின் பாதையில் நாங்கள் போரிடாமல் இருக்க எங்களுக்கு என்ன வந்தது?'' எனக்கூறினார்கள்; எனினும் போரிடுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டபோதோ அவர்களில் ஒருசிலரைத் தவிர மற்றெல்லோரும் புறமுதுகுக் காட்டித் திரும்பிவிட்டனர். (இவ்வாறு) அக்கிரமம் செய்வோரை அல்லாஹ் நன்கறிவான்.(அல்குர்ஆன் 2:246)


**மால்கம் - முஹம்மது அலி நட்பு** 04

**ஆப்கானிஸ்தானில் ஆறுமாத கால ஆட்சி - ஒரு வரலாற்றுப் பார்வை!** 08

**இந்தியாவில் இஸ்லாமோ போபியா - 2021** 18

**கலைஞர் அன்று மத மாற்றங்களை பற்றி..** 24

- முதல் சிலுவைப்போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) 28
- ஆரவாரமில்லாமல் ஓர் ஆட்சிக்கவிழ்ப்பு 34
- சிலுவைப்போர் 2.0 38
- மக்களின் குறையை நிறைவுபடுத்திய கலீஃபா உமர்(ரலி) ஆட்சி 42
- இந்திய ஆலிம்கள் எழுதிக்குவித்த அரபு நூல்கள் 46
- பெண்களை வதைக்கும் தைராய்டு தொல்லை! - மருத்துவம் 50
- வெயிலை விரட்டும் வழிகள் 56
- கோடையும் குழந்தைகளும்! குழந்தை வளர்ப்பு 58
- "ஹிஜாப்" எங்கள் இறைவன் எங்களுக்கு கொடுத்த கட்டளை 60

**ஐமான் ஐக்கிய அமீரக நிறுவனர் அப்துல் வஹாப் மறைந்தார்** 36



மார்ச் 2022 - ரஜப் - ஷஃபான் 1443

# வைகறை வெளிச்சம்



ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



தனி இதழ்: ரூ.20 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.300 / வெளி நாடு: ரூ.3000.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



# மால்கம் - முஹம்மது அலி நட்பு

1962 - கேசியஸ் கிளே என்று அறியப்பட்டுக் கொண்டிருந்த முஹம்மது அலிக்கு வயது 20. இரண்டு முறை தேசிய அளவிலான தங்க கையுறை (Golden glove title) பட்டத்தையும் ஒரு ஒலிம்பிக் கோல்டு மெடலையும் வென்றிருந்தார் அவர். அமெரிக்காவில் நிலவிவந்த நிறவெறி கொள்கைக்கு எதிராக சமூக உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கங்கள் துடிப்புடன் அப்பொழுது இயங்கி வந்தாலும், பொதுவெளியில் கிளே மிக கவனமுடன் பேச வேண்டும். இல்லையென்றால் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிய கதையாகிவிடும்.

கருப்பின மக்களின் இயக்கமான நேசன் ஆஃப் இஸ்லாம்(NOI) வழியாகத்தான் இஸ்லாம் பற்றி அறிந்து கொண்டிருந்தார் கிளே. கருப்பின வெள்ளையின மக்களின் ஒருங்கிணைப்பில் நம்பிக்கை இல்லாத இயக்கம் அது. மியாமி, புளோரிடா குத்துசண்டை பயிற்சி மையங்களுக்கு அருகே வசிக்கும் NOI - அமைச்சர்கள் வழியாகவும், அதன் தலைவர் எலிஜா முஹம்மதுவின் வழியாகவுமே இஸ்லாத்தை அறிந்து கொண்டிருந்தார் கிளே .

## முதல் சந்திப்பு

*1962* ஜூனில் எலிஜா முஹம்மது உரையை நேரில் கேட்பதற்காக சாம் சேக்சனுடன் டெட்ராயிட் சென்று கொண்டிருந்தார் கிளே. கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்னதாக கிளேயை மால்கமிடம் அறிமுகப்படுத்தினார் சேக்சன்.

ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகத்தில் வலிகளையும் அவமானங்களையும் சுமந்து வாழும் ஒவ்வொருவரின் கவனத்தையும் மால்கம் எக்ஸின் உரை ஈர்த்தது. அவருடைய பேச்சில் இருந்த சீற்றத்தைக்கண்டு வியந்து போனார் கிளே.

எப்படி ஒரு கருப்பின மனிதன் அரசாங்கத்தையும், வெள்ளை இனத்தவர்களை குறித்துப் பேசிட முடிகிறது, தைரியமாக செயல் பட்டிட முடிகிறது, எப்படி அவரை விட்டு வைத்துள்ளனர் என்ற எண்ணம் தான் முதலில் கிளேவிற்கு ஏற்பட்டது.

அவரிடத்தில் பயம் துளியளவும் இல்லை. என்னை அது மிகவும் ஈர்த்தது என்று பின்னாட்களில் நினைவு கூர்ந்தார் கிளே.

## அலியின் வளர்ச்சிக்கு உதவிய மால்கம்

நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்தில் முஹம்மது அலியின் ஈடுபாடு அதிகரிப்பதை கண்டு மால்கம் X உற்சாகம் அடைந்ததாகவும், பொது சமூகத்தில் கிளேயின் செயல்பாடு அதிகரித்து வந்த நேரத்திலும் அவருடைய தனிப்பட்ட வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டார் மால்கம் X என குறிப்பிடுகின்றார் அவருடைய மனைவி பெட்ரி சபாஷ் (Muhammad Ali: His life and Times).

மால்கம் X இன் மகளான அத்தல்லாஹ் சபாஷ் இப்படி குறிப்பிடுகின்றார். நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்திற்கு ஆட்களை இணைக்கும் நபர் என்ற அடிப்படையில் முஹம்மது அலியுடன் மால்கம் X உறவாடிட வில்லை. தன்னுடைய சகோதரரை போன்று கிளேவை நேசித்தார்.

கிளேவின் தினசரி அலுவல்களை கவனிப்பதற்காக ராபின்சன் என்ற உதவியாளர் ஒருவரையும் மால்கம் எக்ஸ் நியமித்தார். அதன் பின்பு கிளேவின் கருத்துகளில் முன்னேற்றம் காணப்பட்டது.

*1963* மார்ச்சில் டக் ஜோன்சை வென்ற பின், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டுபவன் நான் அல்ல. கண்ணுக்கு கண் என்பதே என் பாணி என்றார் கிளே. அடிமைப்பட்டு கிடந்த, அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த குரல் அது.

அதே நேரத்தில் ஒரு கட்டத்தில் பிரிக்க முடியாத அளவிற்கு இருந்த எலிஜா முஹம்மது - மால்கம் X நட்பில் பிணக்கு ஏற்பட்டது. *1962* ஏப்ரலில் லாஸ் ஏஞ்சல்ஸில் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்தை சேர்ந்தவர்கள் பலியானார்கள். இதற்கு பெரிய அளவில் எலிஜா முஹம்மது எதிர்வினை ஆற்றாதது மால்கம் Xஐ வெறுப்பில் ஆழ்த்தியது. அடுத்து, எலிஜா முஹம்மதுவின் தவறான நடத்தையை பற்றி வந்த அறிக்கைகளை கண்டு உடைந்து போனார் மால்கம் .

*1963* நவம்பரில் ஜான் எஃப் கென்னடி படுகொலை செய்யப்பட்டார். இதை குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கக்கூடாது என்ற எலிஜா முஹம்மதுவின் கட்டளையை மீறி இப்படி கருத்து தெரிவித்தார் மால்கம் எக்ஸ். "chickens coming home to roost." அதாவது வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்றார். (மற்ற நாடுகளில் அமெரிக்கா செய்த செயல் அமெரிக்காவிற்கு திரும்ப ஏற்பட்டது என்ற பொருளில்).

*90* நாட்கள் வரை பொதுக்கூட்டங்களில் உரையாற்றக்கூடாது என்று மால்கம் X இற்கு கட்டளையிட்டார் எலிஜா முஹம்மது. ஆனால் *1964* இல் எல்லா பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டார் அவர்.

வீழ்த்த முடியாதவராக வலம் வந்த சன்னி லிஸ்டனுடன் மோதி ஹெவி வெயிட் சேம்பியன் பட்டத்திற்காக தன்னை தயார் படுத்திக் கொண்டிருந்தார் கேசியஸ் கிளே.

அவரை சந்திப்பதற்காகவும் அவருடைய பயிற்சிகளை பார்வையிடுவதற்காகவும் *1964* ஜனவரியில் தனது மனைவி மகள்களுடன் மியாமி-க்கு வந்தார் மால்கம்.

தனது வாழ்க்கையில் முக்கியமான ஆட்டத்தை எதிர்கொள்ளவிருந்த கிளேவிற்கு நம்பிக்கை அளிக்கும் விதமாகவே மால்கம் அங்கு வந்தார். அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை உடையவர் கிளே, ஆதலால் நிச்சயமாக அவர்

போட்டியில் வெல்வார் என்று திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருந்தார் மால்கம். இதன் மூலம் எலிஜா முஹம்மதுக்கு இன்னொன்றையும் உணர்த்தினார் மால்கம். கிளேவை போன்ற பிரபலமானவர்கள் தன் பக்கம் இருப்பதாக எலிஜா முஹம்மது காட்டிக்கொண்டாலும் நேசன் ஆஃப் இஸ்லாமிலிருந்து தன்னை அவ்வளவு எளிதில் ஓரங்கட்டி விட முடியாது என்று (Blood brothers).

மால்கம் எக்ஸின் வருகை அப்போட்டியை நடத்தவிருந்த பில் மெக்டொனால்டை எரிச்சலூட்டியது. கருப்பின முஸ்லிம்களின் இயக்கத்தில் கிளே தன்னை ஈடுபடுத்தி கொண்டிருக்கிறார் என்ற செய்தி பரவினால் பார்வையாளர்கள் அச்சம் அடைவார்கள், எனவே போட்டியை நிறுத்தி விடுவேன் என்று மிரட்டினார் மெக்டொனால்ட். இதன் காரணமாக இன்னொரு ஒருங்கிணைப் பாளரான ஹெரால்டு கர்னெட் இதில் தலையிட்டு மால்கம் எக்ஸ் ஐ அந்த நகரத்தி லிருந்து வெளியேற சம்மதிக்கச் செய்தார். எனினும் போட்டி நடக்கும் சரியான நேரத்தில் திரும்பி வருவேன் என்று மால்கம் கூறினார். கூறியபடியே 1964 பிப்ரவரி 5 ஆம் தேதி நடந்த லிஸ்டன் - கிளே போட்டியை காண வந்தார்.

### நட்பில் விரிசல்

சேம்பியன் பட்டத்தை வென்றபின், அடுத்து வந்த இரண்டு நாட்களில் செய்தியாளர்கள் சந்திப்பில் கிளே அளித்த பேட்டி அவர் நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதையும் வெள்ளை இன, கருப்பின மக்களின் ஒருங்கிணைப்பில் அவருக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் வெளிப்படுத்தியது. "நான் எங்கே செல்கிறேன் என்பது எனக்கு தெரியும்,உண்மை எதுவென்றும் எனக்குத் தெரியும், நீ என்னை எவ்வாறு காண விரும்புகிறாயோ அதே போன்று நான் இருக்க வேண்டிய தில்லை" என்றும் ஒரு கட்டத்தில் அறிவித்தார்.

மால்கம் X - கேசியஸ் கிளே நட்பு முடிவுக்கு வந்துவிட்டதை குறிக்கும் வண்ணமாக அக்கருத்துகள் அமைந்தன. எலிஜா முஹம்மது - மால்கம் X இடையே கருத்து வேற்றுமை நிலவுவது கிளேவிற்கு நன்றாக தெரியும். மால்கம் X இடமிருந்து விலகி இருக்குமாறு கிளேவை எச்சரித்தார் எலிஜா முஹம்மது. சேம்பியன் பட்டத்தை வென்ற அடுத்த வாரத்தில் மால்கம் X உடன் இணைந்து நியூயார்க் நகரத்திற்கு வெற்றிப் பயணம் மேற்கொண்டார் கிளே. மீண்டும் மார்ச் 6 ஆம் தேதி கிளேவிற்கு தன்னுடைய கட்டளையை ஞாபக மூட்டினார் எலிஜா முஹம்மது. அதே நாள் மாலை நேரத்தில்,

"அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு என்னை பின்பற்றி நடக்கும் வரை முஹம்மது அலி என்ற பெயரையே நான் கிளேவிற்கு வழங்கி இருக்கிறேன்" என்று ரேடியோ வழியாக அறிவித்தார் எலிஜா முஹம்மது. அதன் பின், இருவரும் சந்தித்துக்கொண்டது குறைவு. அத்தோடு அவர்களுக்கு இடையே இருந்த நட்பு முடிவுக்கு வந்தது.

அவர்கள் இருவரும் தனித்தனியே ஆப்பிரிக்கா சென்று ஹோட்டலில் தங்கி இருந்தபோது வெளி உலகிற்கும் இது புரிந்தது. வாஞ்சை யுடன் தன்னுடைய மாணவரை வரவேற்ற ஆசானுக்கு அதே வாஞ்சையுடன் பதில் வரவில்லை.

எலிஜா முஹம்மதுவை விட்டு வந்தது தவறு என்று மால்கம் X ஐ கடிந்து கொண்டார் முஹம்மது அலி.

### மால்கம் படுகொலை

ஆன்மீகத் தேடலுக்கு பாதை அமைத்து தந்த சர்ச்சைகளுக்கு உள்ளான இயக்கத்தில் அவர்கள் இருவரும் தொடர்பு வைத்திருந்தாலும் தனித்தனியான பாதையில் சென்றனர்.

தனக்கு எலிஜா முஹம்மதுவினால் போதிக்க பட்டவை தவறானவை என்று வெளிப்படையாக கூறினார் மால்கம். நேசன் ஆஃப் இஸ்லாம் இயக்கத்தை சேர்ந்தவர் களிடமிருந்து அவருக்கு கொலை மிரட்டல்கள் வந்தன.

1965 பிப்ரவரி 21ஆம் தேதி நியூயார்க் நகரில் நடந்த கூட்டத்தில் பேச ஆரம்பிக்கும் போது அவர் சுட்டு கொல்லப் பட்டார்.

மால்கமின் இறப்பு செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்ததாக முஹம்மது அலி கூறினாலும் அவருடைய செயல்கள் அவர் அதனால் வருந்த வில்லை என்பதை போல் காட்டின. மால்கமின் இறுதி சடங்கு அன்று நேசன் ஆஃப் இஸ்லாம் ஆதரவுடன் நடந்த குத்து சண்டை கண்காட்சியில் அவர் கலந்து கொண்டார் .



**மால்கமின் மீது கொண்டிருந்த உண்மையான அன்பு**

படுகொலை செய்யப்பட்ட தன்னுடைய நண்பரின் மீது அன்பு இல்லாதது போல் காட்டிட முனைந்தாலும் , முஹம்மது அலியின் உள்ளார்ந்த உணர்வுகள் வெளிபடத்தான் செய்தன. அது அவரை மால்கமை போன்று அவரும் சன்னி முஸ்லிம் கொள்கையில் இணைக்க செய்தது. இது 1975 இல் எலிஜா முஹம்மது இறந்தபின் நடந்தது.

Soul of a Butterfly என்ற தன்னுடைய வாழ்க்கை குறிப்பை பற்றி எழுதிய புத்தகத்தில் “மால்கம் ஒரு சிறந்த சிந்தனையாளர், மிகச்சிறந்த நண்பர்” என்று குறிப்பிட்டார்.

“மால்கமை விட்டு நான் திரும்பிக் கொண்டது நான் செய்த தவறுகளில் ஒன்று. என் வாழ்கையில் அதை நினைத்து நினைத்து வருந்தியுள்ளேன். பல விஷயங்களில் அவருடைய தேர்வு சரியானதாக இருந்தது. மால்கம், என்னை மன்னித்து விடுங்கள் என்று அவரிடம் நான் கூறியிருக்க வேண்டும் என்று நான் இப்பொழுது விரும்புகிறேன்” என்று எழுதியுள்ளார் முஹம்மது அலி.

உணர்ச்சி பெருக்குடன் பொங்கி எழும் மால்கமின் உரைகள் உண்மையில் அவர் தன்னுடைய சமூகத்துக்கான விடுதலையில் உண்மையான அக்கறை கொண்டிருந்தார் என்பதை வெளிப்படுத்தும்.

அவரை தடுத்து நிறுத்தவில்லை என்றால் அவர் ஒரு சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பி விட்டிருப்பார். அந்த அச்சம் அவருடைய எதிரிகளுக்கும் ஏற்பட்டிருக்கும்.


அவர் படுகொலை செய்யப்பட்ட பின் விடுதலைக் காற்றை சுவாசிக்க விரும்பிய ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்பத்தில் ஒருவர் இறந்ததை போல் உணர்ந்தனர்.

அவர் ஒரு மாவீரர். இறைவன் அவருக்கு ஷஹீத் என்ற உயரிய அந்தஸ்தை வழங்கி விட்டான். அவரை பற்றி படிக்கும்போது ஒரு இலட்சிய சகோதரரை இழந்த தவிப்பு நமக்கு உள்ளும் ஏற்பட்டு விடுகிறது.

அவர் எடுத்துச் சென்ற இலட்சியத்தை பின் தொடர்வதே நாம் அவருக்கு செய்யும் உரிய மரியாதையாக இருக்கும்.


- Biography.com

**அபூ ஹாசின்**



# ஆப்கானிஸ்தானில் ஆறுமாத கால ஆட்சி

## ஒரு வரலாற்றுப் பார்வை!



*ஆப்கானிஸ்தான் பற்றி எட்டு ஆண்டுகளுக்கு முன் நாம் பேசியது ஆகஸ்ட் 15, 2021ல் உலக மக்கள் மன்றத்தில் நிதர்சனமானது. ஆனால் நாம் சொன்னவற்றின் யதார்த்தங்கள் செயலில் வந்தது பிப்ரவரி 29, 2020ல் ஆகும். நாம் படைப்பாளர்களின் மாமன்றத்தில் பேசியது,*

*“விஸ்வரூபம்” முதலான திரைப்படங்களின் வழி நீங்கள் எப்படித்தான் தாலிபான்களை தீவிரவாதிகள் எனச் சித்தரித்தாலும் “அமெரிக்காவின் கப்ருஸ்தான் ஆப்கானிஸ்தானில் தோண்டப்பட்டுவிட்டது.” இன்று நீங்கள் எல்லாம் தீவிரவாதிகள் என சித்தரிக்கும்*

முல்லா உமர் அவர்கள், மன்னித்து அனுப்பினால் அமெரிக்கர்களும், அவர்களுக்கு பக்கத்துணையான செயல்படும் நாட்டின் இராணுவத்தினரும் உயிரோடு திரும்பி வருவார்கள்.

நம் நாட்டில் விடுதலைக்காகப் போராடிய பகத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் இவர்களெல்லாம் நம் நாட்டின் விடுதலைப் போர் வீரர்கள். இவர்களை அன்றைய ஆங்கில அரசு தீவிரவாதிகள் என்றுதான் சித்தரித்தது ஆனால் இன்று விடுதலை அடைந்த நாட்களில் அவர்களையெல்லாம் நாம் "National Heros" தேசிய வீரர்கள் எனப் பாராட்டுகின்றோம். அவர்களின் வீரமல்ல, தியாகமும் நம்மால் போற்றப்படுகின்றது. ஆனால் இதேபோல் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் (உலகின் சொல்லாட்சியில் தாலிபான்கள்) போராடினால் நாம் அவர்களை தீவிரவாதிகள் எனச் சித்தரிக்கின்றோம்.

நமது விடுதலைப் போர்வீரர்கள் காந்திஜியும், நேருவும் நமக்கு எப்படியோ, அதேபோல் தான் முல்லா உமர் போன்றவர்கள் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு. அவர்களுக்கு "விடுதலைப் போர்வீரர்கள்" எனப்படுபவர் முல்லா உமர் போன்ற அல்லாஹ்வின் வழியில் போர் செய்பவர்கள் தாம்.

நீங்கள் எப்படித்தான் சித்தரித்தாலும் ஆப்கானிஸ்தானை அங்கே சென்று ஆக்கிரமித்திருப்பவர்கள், நீங்கள் தீவிரவாதிகள் எனச் சித்தரிப்பவர்கள் மன்னித்து அனுப்பினால் உயிரோடு திரும்ப வருவார்கள்.


விஸ்வரூபம் படத்தை எடுத்த கமலஹாசன் அவர்கள், மிகப்பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகி விட்டார் என்றொரு பிரம்மை உண்டாக்கப் படுகிறது. அதனால் அவர் நாட்டைவிட்டு வேறு நாட்டுக்கு போகப் போவதாகக் கூறுகின்றார் என்றெல்லாம் பம்மாத்துகள் உண்டாக்கப்படுகின்றன.

விஸ்வரூபம் திரைப்படம் "CIA" என்ற அமெரிக்காவின் மத்திய உளவுத்துறையின் திட்டம். தாலிபான்களை தீவிரவாதிகளாக காட்டிட வேண்டும், மக்கள் மனதில் பதியவைத்திட வேண்டும் அதற்கு பாமர மக்கள் எளிதாக நம்பிடும் காட்சி ஊடகங்கள், சினிமாவைப் பயன்படுத்திட வேண்டும் என்பதெல்லாம் CIA-ன் திட்டம்(project) அதற்காக ஏராளமான பணத்தை அள்ளிக் கொட்டுகின்றார்கள். அந்தப் பணம் அன்பர் கமலஹாசனுக்கு தாராளமாக வாரி வழங்கப்பட்டிருக்கும். ஆகவே இதில் நஷ்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மொத்தப் பணமும் முன்பே வழங்கப்பட்டிருக்கும்.

இனி கமலஹாசன் நாட்டு நலனுக்காக வாரி இறைத்துவிட்டு நஷ்டப்படவில்லை, கஷ்டப் படவில்லை. வெளிநாடு செல்வதாக இருந்தால் அதுவும் அவருடைய நன்மைக்காகவே இருக்கும். அதுபற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

ஆப்கானிஸ்தான் மக்களைப் பொருத்தவரை அவர்கள் 1839 முதலே வல்லரசுகளின் ஆக்கிர மிப்புகளையே சந்தித்துக் கொண்டிருப்பவர்கள், ஆங்கிலேயர்கள் இந்த உலகின் ஏகபோக ஆதிக்க சக்தியாக இருந்தபோது, அவர்கள் மூன்று முறை இந்த ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தார்கள். தொடர்ந்து ரஷ்யர்கள், அதைத்தொடர்ந்து அமெரிக்கர்கள் இப்படி வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு, இடைவிடா குண்டு மழைகள் இவற்றையே அந்த மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்கள் இந்த வல்லரசுகளையெல்லாம் பட்டினியும், பசியும் கிடந்துகொண்டே எதிர்த்துப் போர் செய்து வருகின்றார்கள்.

ஆக்கிரமிப்பாளர்கள் பொழியும் குண்டு மழைகளிலிருந்து தப்பிக்க, ஒரு குகையிலிருந்து இன்னொரு குகைக்கு ஓடுவதற்கே அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. இடைவிடா குண்டு மழையில் இடையே புகுந்து தப்பிப்பது மாகவும், குற்றுயிரும் குலை உயிருமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்களை தீவிரவாதிகள் எனச் சித்தரிக்கின்றோமே நமக்கு மனசாட்சியாவது இருக்கின்றதா?




இயற்பியல் பாடம் நடத்தும் தாலிபான் ஆசிரியர்

நல்ல உள்ளமும், நடுவுநிலையான சிந்தனையும் கொண்டவர்கள் வீற்றிருக்கின்ற இந்த அவையில், அந்த மக்களுக்காகவும் வாதாடு பவர்கள் இருக்கின்றார்கள் என்ற வரலாற்றை எதிர்வரும் தலைமுறைக்குப் பதிய வைத்திடவே இதனை இங்கே கூறுகின்றோம்.

யார் எப்படித்தான் சித்தரித்தாலும் அமெரிக்காவின் கப்ருஸ்தான், ஆப்கானிஸ் தானில் தோண்டப்பட்டுவிட்டது.

நாம் அன்று படைப்பாளர்கள் தளத்தில் பேசியவற்றையெல்லாம் அல்லாஹ் உண்மையாக்கி வைத்தான்.

அமெரிக்காவின் கப்ருஸ்தான் ஆப்கானிஸ்தானில் 2021ஆம் ஆண்டு தோண்டப்பட்டு விட்டது. அப்போது அமெரிக்காவுக்கு எதிராகக் குழுமிய ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு தளமும், படைக்களமும், தேவையான வியூகத்தையும் வகுத்துத் தந்த முல்லா உமர்(ரஹ்) அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்.

அவர்கள் அல்லாஹ்வின் மீது வைத்த நம்பிக்கை, அந்த அல்லாஹ்தான் அமெரிக்காவை விட ஆற்றல் மிக்க “சூப்பர் பவர்” என்ற சொற்கள் எல்லாம் ஓர் எழுத்து கூட பொய்யாய் போகாமல் நிதர்சனமானது. அவர்கள் நம்பி நின்ற அல்லாஹ் அவர்களுக்கு அளப்பரிய வெற்றிகளை வழங்கினான். அந்த சூப்பர் பவர் தந்த பெருமைமிகு வெற்றியில், உலகமே அதிசயத்தால் ஆழ்ந்து நிற்கின்றது. "CIA" என்ற அமெரிக்காவின் உளவுத்துறைக்கு மட்டும் தாலிபான்கள் தீவிரவாதிகளா?

இப்படியொரு விவாதம் ஆகஸ்ட் 15, 2021 க்குப்பின் உலக மக்கள் அனைவரின் உள்ளங் களிலும் கொழுந்துவிட்டு எரிந்தது.

உலக அரங்கில், உலக ஊடகங்களால் மக்கள் மன்றத்தில் மிகவும் அதிகமாகப் பதிய வைக்கப்பட்ட கருத்து இது.

தாலிபான்கள் அதன் வழியாக முஸ்லிம்கள் தீவிரவாதிகள்தாம் என்ற கருத்தை ஆழமாகப் பதிய வைத்திட அரங்கேற்றப்பட்ட நாடகமே 9/11 என்ற செப்டம்பர் 11, 2001ஆம் ஆண்டு நிகழ்வு. அதாவது இரட்டைக் கோபுர தாக்குதல், இதில் அமெரிக்காவின் இரண்டு கோபுரங்கள் தாக்கப்பட்டன.

உலகெங்கும் அதிர்வலைகள், அவற்றிலே அல்காயிதா - முஸ்லிம்கள்தாம் இதனைச் செய்தார்கள் என்ற தொலைக்காட்சி ஒளிபரப்புகள்.

என்ன ஆனதோ, ஏது ஆனதோ என அலறியடித்து மக்கள் தொலைக்காட்சிகளின் முன் அமர்ந்தபோது, முஸ்லிம்கள் முழு வில்லன் களாகக் காட்டப்பட்டனர். இதற்குள் ஃபாக்ஸ் நியூஸ் என்ற நிறுவனம் எப்படியெல்லாம், குவைத் நிகழ்வு ஒன்றை இணைத்தது - முஸ்லிம்கள் 9/11 மரணங்களால் மகிழ்ச்சி அடைகின்றார்கள் என்பதை ஏற்கனவே நாம் விரிவாகக் கூறி இருக்கின்றோம், வைகறை வெளிச்சம் செப்டம்பர் 2021, அக்டோபர் 2021 இதழ்களில் வெளியிட்டிருக்கின்றோம்.

இந்தச் சண்ட மாருதத்திற்குப் பின்னால் தான் ஆப்கானிஸ்தானின் மீது "AWE AND SHOCK" அதிர்ச்சியும் அச்சமும் எனப் பேசி ஆக்கிரமிப்பை தொடங்கினார்கள். எந்தக் காரணமுமில்லாமல்,எந்தச் சாட்சியுமில்லாமல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதற்கு ஒசாமா பின்லேடன் தான் காரணம் என்றார்கள்.

இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு முக்கியக் காரணம் ஒசாமா பின்லேடன்(ரஹ்) அவர்கள் தான். ஆகவே ஒசாமா பின்லேடனையும், இன்னும் நாங்கள் கேட்கும் 20பேரையும் எந்த நிபந்தனையுமின்றி எங்களிடம் ஒப்படைத்திட வேண்டும் என முல்லா உமர்(ரஹ்) அவர்களின் தலைமையில் அமைந்திருந்த தாலிபான் அரசைக் கேட்டார்கள்.

தாலிபான்கள் ஒசாமா பின்லேடன் அவர்களோ, நீங்கள் கேட்கும் 20 பேரோ எந்தவகையிலும் இரட்டைக் கோபுரங்கள் தாக்குதலுக்கு காரணமல்ல. அவர்கள் குற்றமற்றவர்கள். அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்க உங்களிடம் உரிய ஆவணங்கள், சாட்சியங்கள் இருந்தால் எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் அவர்களை ஒசாமா பின்லேடன் அவர்களையும், மற்றவர்களையும் ஷரீஆ சட்டங்களின் அடிப்படையில் விசாரிக்கிறோம்.

அவர்கள் குற்றவாளிகள் எனக்கண்டால் நாங்கள் ஒசாமா பின்லேடன் அவர்களையும், மற்றவர்களையும் வன்மையாகக் கண்டிப்போம். எங்கள் ஷரீஆ சட்டங்கள் வழங்கிடும் தண்டனைகள், அதுபோன்ற தவறுகளை இனி செய்திட யாரும் சிந்தித்திடாத அளவுக்கு அச்சத்தைத் தருவதாக இருக்கும். ஆகவே நீங்கள் ஒசாமா பின்லேடன் அவர்களும் மற்றவர்களும் தான் இரட்டைக் கோபுரங்களைத் தாக்கினார்கள் என்பதற்கான ஆதாரங்களைத் தாருங்கள் எனக் கேட்டார்கள்.

இதற்குப் பதில் சொல்லிட வேண்டிய அமெரிக்காவின் அதிபர் ஜார்ஜ் புஷ், ஆதாரங்களைத் தந்திடாமல் ஆணவம் தலைக்கேறி ஆடினார். அடாத சொற்களையும், போர்ப் பிரகடனங்களையும் செய்தாரே அல்லாமல் எந்த சாட்சியங்களையும் தந்திடவில்லை.

போர்! போர்! எனப் போர் பித்தம் தலைக்கேறி ஆடினார் அமெரிக்க அதிபர். தாலிபான்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே தாலிபான்கள் இரண்டாவது நிலைக்கு வந்தார்கள்.

நாங்கள்(தாலிபான்கள்) ஏதேனும் காரணங்களைச் சொல்லி பின்லேடன் அவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடுவோம் என நீங்கள் கருதினால்,ஒரு பொதுவான நாட்டை தேர்ந்தெடுப்போம். அங்கே நாங்கள் பின்லேடன் அவர்களை ஒப்படைக்கின்றோம். நீங்கள் சாட்சியங்களை ஒப்படையுங்கள்.


அங்கே விசாரணை நடக்கட்டும்,குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டிக்கட்டும்.

எந்த நிலையிலும், நாங்கள் ஒசாமா பின்லேடன் அவர்களையும், அவர்களோடு எங்களிடம் தஞ்சம் புகுந்திருப்பவர்களையோ உங்களிடம் ஒப்படைக்க மாட்டோம். காரணம் நீங்கள் அவர்கள் மீது வெறுப்போடும், காட்போடும், கோபத்தோடும் இருக்கின்றீர்கள். அவர்களிடம் நீங்கள் நடுவுநிலையோடு நடந்து கொள்ளவே மாட்டீர்கள். நீதியோடு நடப்பதற்கு வாய்ப்பே கிடையாது. நீங்கள் அவர்களைத் தண்டிப்பதன் மூலம் ஆதாரமில்லாத, சாட்சியங்கள் இல்லாத பொய் பழியை உண்மையாக்குவீர்கள். அதனை உலக அரங்கில் கடைபோட்டு கூவி விற்பீர்கள்.

சுருங்கச் சொன்னால், நீங்கள் உங்கள் உள்ளிருப்பு வேலையாகிய (9/11) இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு அப்பாவிகளை குற்றம் பிடிப்பீர்கள்.

ஒருமுறை அவர்கள் மீது அந்தப் பழியைப் போட்டு தண்டனைகளை பிரகடனப்படுத்தி விடுவீர்கள். அந்தத் தண்டனைகளை கண்ணைப் பொத்திக்கொண்டு நிறைவேற்றி விடுவீர்கள். அந்த அப்பாவிகளையும், அத்தோடு 9/11 குறித்த எல்லா உண்மைகளையும் குழிதோண்டி புதைத்து விடுவீர்கள். அதன்பின் உண்மை உலகுக்குத் தெரியாமலே போய்விடும். அதனால் எந்த நிலையிலும்,எங்களிடம் தஞ்சம் புகுந்தவர்களை உங்களிடம் ஒப்படைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. நீங்கள் ஆதாரங்களை ஒப்படைக்காதவரை நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை. அப்படிச் செய்வது இஸ்லாமிய நெறியுமல்ல. நாங்கள் இஸ்லாமிய இங்கிதங்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு தயாராகவுமில்லை.வருவதை எதிர்கொள்வோம் எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன் எனக் கூறிவிட்டார்.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், அதிர்ச்சியும் அச்சமும் என தனது நடவடிக்கைகளுக்குப் பெயரிட்டு போர் நடவடிக்கைகளைத் தொடங்கினார்.



முல்லா உமர்(ரஹ்)

இந்நிலையில் பலர் முல்லா உமர் அவர்களிடம் வந்து, நீங்கள் ஒசாமா பின் லேடன் அவர்களையும், அவர்களுடைய நண்பர்களையும் அமெரிக்காவிடம் ஒப்படைத்திடுவதே இதற்கிருக்கும் சிறந்த தீர்வு. அப்படி ஒப்படைத்தால், உங்கள் ஆட்சியையும், ஆப்கானிஸ்தான் எதிர்நோக்கும் ஓர் பேரழிவிலிருந்து ஆப்கானிஸ்தானையும் காப்பாற்றிவிடலாம். அமெரிக்காவின் கோபத்தையும், ஆக்ரோஷத்தையும் நீங்கள் வீணாக எதிர்கொள்ள வேண்டியதில்லை. உங்களால் ஒரு பெரும் வல்லரசைத் தாக்குப் பிடிக்க இயலாது என்றெல்லாம், அறிவுரை வழங்கினார்கள்.

இவற்றிற்கெல்லாம் முல்லா உமர் அவர்கள், அமெரிக்கா வல்லரசுதான். அதைவிட மிகப்பெரிய வல்லரசு "அல்லாஹ்." நாங்கள் அல்லாஹ்வை நம்பி நிற்கின்றோம். எங்களுக்கு வேறு நண்பர்களோ, உதவியாளர்களோ உலகில் இல்லை.

இறைவனிடம் வைத்திடும் நம்பிக்கையோடு நாங்கள் அமெரிக்காவை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம், எனக் கூறிவிட்டார்.

இதுகுறித்து முல்லா உமர் அவர்கள் "VOA - VOICE OF AMERICA" என்ற ஊடகத்திற்குத் தந்த விரிவான பேட்டியை செப்டம்பர் 2021 வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டிருந்தோம்.

அதேபோல் அமெரிக்கா இதில் எதிர்கொள்வதற்கு பக்கத்துணையாக NATO நாடுகள் என்ற North Atlantic Treaty Organization என்ற நாடுகளைச் சேர்த்துக்கொண்டது. ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு என்பது, அமெரிக்கா, "தான் ஒரு வல்லரசு நாடு" என்ற அடிப்படையில் மட்டும் மேற்கொண்ட தாக்குதல் அல்ல, மாறாக இன்னும் 51 நாடுகளைப் பக்கத்துணையாகக் கொண்டு மேற்கொண்ட தாக்குதல் ஆகும்.

அக்டோபர் 7, 2001ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த தாக்குதலில், அமெரிக்காவைப்போல் அல்லது அமெரிக்காவை விட தன்னை அதிகமாகப் பிணைத்துக் கொண்ட ஒரு நாடு பிரிட்டன்.

தொடர்ந்து நடந்த வான்வழித்தாக்குதல்களின் வழி ஆப்கானிஸ்தான் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்பட்டார்கள்.

அத்தோடு 2000 அமெரிக்க வீரர்களும் அனைத்து வகை ஆயுதங்களுடனும் அனுப்பப் பட்டார்கள். (The Afghanistan papers - Craig Whitlock)

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு, குழந்தைகளுக்கு, வயதானவர்களுக்கு கூட வாழுமிடமும், வசிக்குமிடமும் இல்லை என்றானது. மரணம் ஒன்றே வழி என்பதே பல நாட்களாக அவர்களுக்கு இருந்த ஒரே வழி!

எடுத்த எடுப்பிலேயே ஆப்கானிஸ்தானில் அழகைக் கூட்டும் மலைகளையும், அவற்றை அடர்ந்து நின்ற தோட்டம் துறவுகளையும் தொடர்ந்து பெய்த குண்டு மழைகளால் தரைமட்டமாக்கி விட்டார்கள்.

இந்த மலைமுகடுகளில் ஏற்றி வைத்திருந்த அகல் விளக்குகளைப் போல் அணிகளாய் அமைந்த அன்றாடம் காய்ச்சிகளின் குடிசைகளையும், வசிக்குமிடங்களையும் தரைமட்டமாக்கினர். அந்த மக்கள் தங்கள் உஜிபனத்திற்காக நட்டு வளர்த்து வைத்திருந்த செடி கொடிகளையும் கருகிப் போயிட செய்தார்கள்.அத்தோடு அந்த மக்களையுந்தான்.

இவையெல்லாம் கணக்கில் வராத மரணங்கள். 2010–2013ஆம் ஆண்டுகளில் "Front Line" என்ற ஆங்கில இதழ் மாதமிருமுறை இறந்தவர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கு துல்லியமாக கணக்குப் பார்த்துச் சொன்னது. அது சராசரியாக நாளொன்றுக்கு 200 குடிமக்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிட்டது.

அந்த மக்களின் அவல நிலையை அப்போது அங்கிருந்துகொண்டு கவனித்து வந்த சாண்டி கால் (Sandy Gall) என்ற எழுத்தாளர் இப்படிக் குறிப்பிடுகின்றார். மாவாட்டும் அரவை மில்லின் உலைக்குள் சிக்கிக்கொண்ட தானியத்திற்கு துகளாவதைத் தவிர வேறுவழி என்ன இருக்க இயலும்?

- As, Quoted by Sandy Gall in his - "War Against The Taliban "- "Why it all went Wrong in Afghanistan"

இப்படி அகப்பட்டுக்கொண்ட நிலையில் தாலிபான்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளவும், தங்கள் மக்களின் உயிர்களைக் காப்பாற்றிடவும் முதலில் அரசை - ஆட்சியை விட்டகன்றார்கள்.

ஆனாலும் குண்டு மழைகளைப் பொழிவதை அமெரிக்காவும் அதற்குப் பக்கபலமாக நின்ற நாடுகளும் நிறுத்திடவில்லை.

தீவிரவாதத்திற்கு எதிரான போர் இது எனப் பிரகடனப்படுத்தினார்கள். அதுவும் (Global war on Terror) தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவியப் போர் என்றார்கள்.

தங்களுக்கு பக்கத் துணையாக நின்ற நேட்டோ நாடுகள் அல்லாமல், இதர உலக

நாடுகளும் தங்கள் அணியில் இணைந்தாக வேண்டும் என்றார்கள்.

Modern Crusade has Started - நவீன சிலுவை யுத்தம் தொடங்கப்பட்டுவிட்டது என்றார் புஷ். அத்தோடு பைபிளின் வசனம் ஒன்றை ஓதிக் காட்டினார். அது If you are not with us, you are against us. அதாவது நீங்கள் எங்களோடு இல்லை என்றால், எங்கள் எதிரிகளோடு இருக்கின்றீர்கள் என்றார் - New Testament.

அதாவது இதில் நடுவுநிலை என்றொன்றில்லை. நீங்கள் எங்களோடு இருந்தே ஆக வேண்டும் என்பதுதான் அந்தக் கூப்பாட்டின் பொருள். ஆக உலக நாடுகள் அனைத்தும் முஸ்லிம் நாடுகள் உட்பட அமெரிக்காவுக்குப் பின் அணிவகுத்தன.

இந்தச் சந்தடி சாக்கில், பாகிஸ்தான் இராணுவ தளங்களைப் பயன்படுத்தி எல்லையிலிருந்த ஆப்கானிஸ்தான் மதரஸாக்களின் மேல் குண்டுகளைப் போட்டு ஒரே இரவில் 800 இளம் மாணவர்களைப் பிணமாக்கினார்கள். (விரிவான தகவல்களை அப்போதே வெளியிட்டுள்ளோம்)

உலகமே அதிர்ந்தது. பாகிஸ்தான் மக்களும் அப்பாவி சிறார்களுக்காக அனுதாபப் பட்டார்கள்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்களைப் போல் லஞ்சம் வாங்கும் ஆட்சியாளர்கள் உலகிலில்லை என்ற அளவுக்கு அசிங்கமானவர்கள். ஆகவே அவர்கள் தங்கள் விமானத் தளங்களை தாராளமாக அமெரிக்கப் போர் விமானங்களுக்குத் தந்தார்கள்.

அதேபோல் அந்த மக்களின் கலாச்சாரத்தைச் சீரழிக்க, வெளிநாடுகளிலிருந்து விபச்சாரிகளை அங்கே கொண்டு வந்தது அமெரிக்கா. விபசாரத்தை ஒரு தொழிலாக அங்கே நிலைநிறுத்தியது. (Front Line Dec 11,2021)

அங்கு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பல ரவுடிக் கும்பல்கள் "CIA" என்ற அமெரிக்க உளவுத்துறையால் தாலிபான்களுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டன. இவர்களுக்கு போதுமான அளவுக்கு ஆயுதங்களையும், பணத்தையும் அள்ளித் தந்தன. இவர்கள் ஆப்கானிஸ்தான் மக்களை ஏராளமாகக் கொன்று குவித்தார்கள்.(The Afghanistan papers - Craig Whitlock )

ஏராளமான பெண்கள் தங்கள் கணவன்மார்களை இழந்தார்கள். நிராதரவான மக்கள் அதிகமாக ஆனார்கள். பல பெண்கள்,இந்த ரவுடிக் கும்பல்களின் கைகளில் சிக்கிக் கொண்டார்கள். இவர்களின் கடைசிப் புகலிடமாக இந்த விபச்சார விடுதிகளே ஆயின.

இப்படி நடந்த கபளீகரங்களுக்கெல்லாம் தாலிபான்களையே குறை சொன்னார்கள். வாயில்லாப் பூச்சிகளாக ஆகிப்போனார்கள் தாலிபான்கள். ஆனால் இந்தப் பழிகளுக்குப் பதில் சொல்லிட ஊடகங்கள் அவர்களிடம் இருக்கவில்லை.

உலகெங்கும் தொடர்ந்து இந்தப் பழிகளையே இயக்கி தாலிபான்களை தீவிரவாதிகள் என காட்டிக் கொண்டே இருந்தார்கள். இதை மொத்த ஊடகங்களும் பயங்கரமாக மக்கள் மனங்களில் பதிய வைத்தன.

முஸ்லிம்கள் மிகவும் பலவீனர்கள்.இதிலிருந்து பல சொல்லாட்சிகளை நாட்டில் புழக்கத்தில் விட்டார்கள். தாலிபானைசேசன் (Talibanization) தாலிபான் மயமாக்கப்பட்ட அதாவது தீவிரமயமாக்கப்பட்ட எனப் பொருள்பட்ட சொற்களைப் புழக்கத்தில் விட்டார்கள்.

இன்றைய நிலையிலிருந்து (2022)திரும்பிப் பார்க்கும்போது எவ்வளவு பெரிய அபாண்டத்தை இவர்கள் கற்பித்திருக்கின்றார்கள் என்பது புலப்படும்.

அன்றே களத்தில் நின்ற அமெரிக்கவீரர்கள் தந்த செய்திகள் "CIA"யின் ஏற்பாட்டில் தயார் செய்யப்பட்ட பல குழுக்கள் - இவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கிகள் - தாலிபான்களின் ஆட்சியை வீழ்த்திவிட்டார்கள்.

தாலிபான்களைப் பொருத்தவரை அவர்கள் எடுத்த எடுப்பிலேயே முஸ்லிம்களைக் கொன்று

குவித்திடும் ஒரு குரூரமான சூழ்நிலையை எதிர் கொண்டார்கள். அதை அவர்கள் தவிர்த்துக் கொண்டார்கள்.

இதில் Northern Alliance வடக்குக் கூட்டு என்பதும் இணைந்து கொண்டது. இந்த Northern Alliance அத்துணை எளிதாக, எதிரிகளுக்கு இஸ்லாத்தின் எதிரிகளின் கைகளில் சிக்கி இருக்காது. "அஹ்மத் ஷா" உயிருடன் இருந்திருந்தால். அவரை CIA என்ற அமெரிக்காவின் உளவுத்துறை பக்குவமாக கொலை செய்துவிட்டது.

எங்கும் முஸ்லிம்களே தங்களுக்கெதிராக ஆயுதந்தரப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்த தாலிபான்கள், தங்கள் கைகளிலிருந்த ஆயுதங்களை முஸ்லிம்களுக் கெதிராக தூக்கிடவில்லை.

பக்குவமாக ஏற்கனவே தாங்கள் முடிவு செய்திருந்த பதுங்குமிடத்திற்குச் சென்று விட்டார்கள்.

### எங்கே அல்காயிதா?

அமெரிக்காவின் தளபதிகள், அமெரிக்க அதிபர்களிடம், இங்கே நீங்கள் எதிரிகளாகச் சித்தரித்தவர்களை எதிர்கொள்ள இயலவில்லை காரணம் இங்கே நமது பணத்திற்கு விலை போனவர்களே இருக்கின்றார்கள். "அல்காயிதா"வினர் என எவரையும் காணவில்லை.

அப்போது அமெரிக்காவில் அமர்ந்துகொண்டு போராட்டங்களை வகுத்தவர்கள், நாம் அல்காயிதாவை மட்டும் ஒழிக்கவரவில்லை. மாறாக நாம் உலகிலுள்ள எல்லா தீவிரவாதி களையும் ஒழிக்க வந்துள்ளோம். ஆகவே அல்காயிதாவையும் சேர்த்தே ஒழித்தாக வேண்டும் என்றார்கள்.

இதற்கும் என்ன அடையாளம் யாரை, தாலிபான்களை எப்படி அடையாளம் காண்பது என்பது அமெரிக்கத் தளபதிகளின் எதிர்கேள்வி.

அத்தோடு அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள், எதிரிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை இங்கே (அமெரிக்காவின்) படைகள் போர் அடிக்கின்றது என்கின்றார்கள்- என பதில் அனுப்பினார்கள்.

அமெரிக்க அதிபர் புஷ், அவருடைய பாதுகாப்புச் செயலாளர் ரம்ஸ் ஃபீல்டு ஆகியோருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

இன்னொரு தளபதி இவர்கள் இருவரையும் நோக்கி இப்படி கேட்டார்;

எங்களை அனுப்பும் போது இன்னொரு 9/11 அமெரிக்காவில் நடக்காமல் இருப்பதற்காகவே நீங்கள் ஆப்கானிஸ்தானுக்கு போகின்றீர்கள், செல்லுங்கள் அல்காயிதாவை வெல்லுங்கள், வாருங்கள் வாகைசூடி என்றே அனுப்பி வைத்தீர்கள். இப்போது இலக்குகளை மாற்றுகின்றீர்கள் என்றார்கள். *(The Afghanistan papers - Craig Whitlock )*

### புஷ்ஷின் வெற்றிப் பிரகடனங்கள்

ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்த அமெரிக்க இராணுவ வீரர்கள் வெற்றிகளைத்தான் ஈட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்று நம்பிய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் வெற்றிப் பிரகடனங்களைப் பண்ணினார்.

"Mission Accomplished" நாங்கள் எதற்காக ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தோமோ அது நடந்துவிட்டது என்றார்.

உலக ஊடகங்கள் இதனை தண்டோரா போட்டு மக்கள் மன்றத்தில் பதிய வைத்தன. அத்தோடு நில்லாமல், தாலிபான்கள் தீவிரவாதிகள்தாம் என்பதை தெளிவுபடுத்தும் செய்திகளையும் உடன்சேர்த்துப் போதித்தன.

இதனை செவிமடுத்த ஆப்கானிஸ்தானில் இருந்த அமெரிக்க இராணுவ வீரர்கள் தளபதி Jeffery Egger இப்படி சில கேள்விகளைக் கேட்டார்கள்.

"Why did we make the Taliban, The enemy when we were attacked by Al Qaeda."

# நார்வேயில் நடந்தது என்ன?

நார்வே சாதாரணமாக, எல்லா விவகாரங்களிலும் ஒரு நடுவரைப் போல் நடந்து கொள்வது வழக்கம். பாலஸ்தீன விவகாரத்தில் நடுவரைப்போல் நடித்து, யாசர் அரஃபாத்தின் போர் குணங்களையெல்லாம் மண்மூடிப் போகச் செய்து, இறுதியில் அவர் எந்த இலக்கையும் அடையாமலே இறந்து போனார்.

இப்போது தாலிபான்களையும், இன்னும் ஏழு நாடுகளையும் அழைத்துப் பேசினார்கள். தாலிபான்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அமெரிக்கா முடக்கி வைத்திருக்கும் தங்கள் நாட்டு சொத்து, பத்து மில்லியன் டாலர்கள் - ஆயிரம் கோடி டாலர்களை மீட்க முனைந்தார்கள்.

ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தவர்கள் பெண்களின் உரிமை, கல்வி என்றெல்லாம் கூப்பாடு போட்டார்கள். இங்கே வந்து பாருங்கள் மீண்டும் எல்லாமே சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. ஆசிரியர்களாகவும், தாதிப் பெண்களாகவும் பணிசெய்து கொண்டிருந்தவர்கள் பணிக்குத் திரும்பிவிட்டார்கள்.

அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் இடித்துப் போட்டப் பள்ளிக்கூடங்கள், தங்கள் படைகளின் பாசறையாகப் பயன்படுத்திய பள்ளிக்கூடங்கள், அதனால் இடிபாடுகளுக்குள்ளான பள்ளிக்கூடங்கள், இவையெல்லாம் ஓரளவுக்கு ஒட்டை உடைசல்கள் சீரமைக்கப் பட்டப் பள்ளிக்கூடங்களில் மாணவிகள் பாடம் பயின்று கொண்டிருக்கின்றார்கள். மாணவர்கள் தனியாக தங்களுக்கென்று நிறுவப்பட்ட பள்ளிக்கூடங்களில் பாடம்

இதன் பொருள், "நாம் ஏன் தாலிபான்களை நமது எதிரிகளாக ஆக்கிட வேண்டும்? நம்மை தாக்கியவர்கள் அல்-காயிதாவைச் சார்ந்தவர்கள் தாமே?" (The Afghanistan papers - Craig Whitlock)

அல்காயிதா அமைப்பு அரபுக்களால் ஆன அமைப்பு. நாம் ஏன் ஆப்கானிஸ்தான் மக்கள் மீது போர் தொடுக்க வேண்டும்.

இந்தக் கேள்விகளை Jeffery Egger என்ற தளபதி கேட்டுக்கொண்டே இருக்கும் போதே, ஆப்கானிஸ்தானுக்குள் அமெரிக்கப் படைகளை அதிகமாக அனுப்பினார் புஷ். இதைப்பற்றி கேட்டபோது, அங்கே ஜனநாயகத்தை நான் நிலைநாட்டிடப் போகின்றேன் என்றார். ஷமித் கரசாய் என்ற அமெரிக்க உளவுத்துறையின் ஆக்கத்தில் வந்தவரை அதிபராக அமரவைத்தார்.

ஆனாலும் களத்தில் நின்ற அமெரிக்கத் தளபதிகள் ஒரு பெரும் கேள்வியை முன் வைத்தார்கள். அது எதிரி யாரென்று தெரியாத இடத்தில் நின்று கொண்டிருக்கின்றோம். அல்காயிதாவினர் யார்? தாலிபான்கள் யார்? என்பதெல்லாம் தெரியவில்லை. எல்லோருமே மக்கள்தாம் தென்படுகின்றார்கள். ஆக இப்போது ஆப்கானிஸ்தானில் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றார்கள்.

இப்படி அமெரிக்க வீரர்கள் எதிரியைத் தேடி அலையும்போது, தாலிபான்கள் தங்களைக் கிராமப்புறத்தில் ஒன்றிணைத்துக் கொண்டிருந்தார்கள்.

அல்காயிதா என்று ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தவர்கள், இப்போது தாலிபான்கள் என்கின்றார்கள். இனி அவர்கள் ஆப்கானிஸ்தான் முழுவதுமாக தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிடப் போகின்றார்கள் என்பதையும் அறிந்தார்கள். ஆகவே இந்த ஆக்கிரமிப்பாளர்களையும், அவர்களுக்கு பக்கத்துணையாக வருபவர்களையும் எதிர்த்துத் தாக்குவது எனத் திட்டமிட்டார்கள்.

2006ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் நேட்டோ(NATO) நாடுகளின் படைகள் ஒரு லட்சம் என உயர்ந்தது. ஆப்கானிஸ்தானின் மொத்த விமானத் தளங்களும் அமெரிக்க - நேட்டோ நாடுகளின் கைகளில் சிக்கியது.

தாலிபான்களுக்கு தங்கள் எதிரிகளை அடையாளம் காண்பதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. அவர்கள் தங்களிடம் இருந்த ஆயுதங்களை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள்.

தங்களை அழிக்க அமெரிக்கர்கள் உருவாக்கிய குழுக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

பயின்று கொண்டிருக்கின்றார்கள் எனக் கூறினார்கள்.

அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் கூட்டுப்படைகளால் மண்மேடாக ஆகிவிட்ட மருத்துவமனைகள், மெல்ல மெல்ல உயிர் பெறுகின்றன. இந்நிலையில் நாங்கள் மிகப் பெரியதொரு பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகி நிற்கின்றோம். ஆகவே அமெரிக்கா தரவேண்டிய பணத்தைத் தரச் சொல்லுங்கள். இது நாங்கள் அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதி. அமெரிக்கா ஒப்பந்தத்தையும் மீறுகின்றது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

அத்தோடு நீங்கள் எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் அதிகம் தலையிட வேண்டாம் என்றார்கள்.

நார்வே பேச்சுவார்த்தைகளில் பார்வையாளர்களாக வந்திருந்தவர்கள் அஷ்ரஃப் கனியின் கையாள்களாக இருந்தவர்கள். அவர்கள், தாலிபான்கள் மிகவும் பிடிவாதமாக இருக்கின்றார்கள் என்று உலக ஊடகங்களுக்குச் செய்திகளைச் சொன்னார்கள்.

அதேபோல் தாலிபான்களின் பிரதிநிதிகள், நார்வேயில் நடத்தப்பட்ட விதம் 17 ஐரோப்பிய நாடுகளும், தாலிபான்களின் இஸ்லாமிய அமீரகத்தை அங்கீகரித்து விட்டன என்றே பொருள் (The de facto recognition) என்றார்.

இது நார்வேயில் தாலிபான்கள் பெற்ற மிகப்பெரிய வெற்றி என்றும் பொறாமைப்பட்டுக் கொண்டார். இப்போது ஆப்கானிஸ்தான் மக்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்கள், ஆனால் ஏழைகளாக இருக்கின்றார்கள்.

**- MGM**

அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

பெரும்பாலான குழுக்கள் தாலிபான்களுடன் இணைந்தார்கள். அவர்கள் அமெரிக்கா தங்களிடம் தந்த ஆயுதங்களை அப்படியே தாலிபான்களிடம் ஒப்படைத்தார்கள்.

இன்னும் பல குழுக்கள், நாங்கள் அமெரிக்கர்களின் திட்டங்களை அறிந்து வந்து உங்களிடம் சொல்லுகின்றோம். அவர்கள் தரும் பணத்தையும் உங்களிடம் ஒப்படைக்கின்றோம்.

நாங்கள் தொடர்ந்து அமெரிக்கர்களின் நண்பர்களாக இருக்கின்றோம், இது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்றார்கள். எந்த நிலையிலும், நாங்கள் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம். எங்களுக்கு என்ன நேர்ந்தாலும், உங்களுக்கு எதிராக நாங்கள் ஆயுதம் தூக்கிட மாட்டோம் என்றார்கள்.

இப்போது தாலிபான்களின் உளவுத்துறை தயாராகிவிட்டது. அத்தோடு அமெரிக்காவின் ஆயுதங்களும் கிடைக்கும் என்ற நிலை உருவானது. கொஞ்சம் பணமும் கிடைக்கும் என்ற நிலை உருவானது.


ஆகவே தாலிபான்களால் தங்கள் எதிரியை எளிதாக அடையாளம் கண்டிட முடிந்தது. அவர்களின் முகாம்களையும், ஆயுதக் கிடங்குகளையும் திடீர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கிட வேண்டும்.

தாங்கள் பெருமளவில் வீரர்களை இழக்கும் போதெல்லாம், விரக்தியடைந்தவர்களாக அப்பாவி மக்களைக் கொலை செய்தார்கள். பின்னர் அதை எண்ணியே மனநோயாளியாக ஆனார்கள்.

தாலிபான்கள் இந்த நிலையைக் கடைசிவரை தக்கவைத்துக் கொண்டார்கள். அதனால் அறுதி வெற்றியை அடைந்தார்கள். அமெரிக்கர்கள் இறுதியில் உயிர்ப்பிச்சைக் கேட்டார்கள். கொடுத்தார்கள். தங்களுடைய ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டார்கள்.

**- MGM**


''ஆப்கானிஸ்தான் வல்லரசுகளின் கப்ரிஸ்தான்'' கல்லறை / சவக் (குழி)




₹140

8072773868

20 வருடங்கள் (2001-2021) ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அங்கிருந்த வளங்களைச் சுரண்டிவிட்டு, அப்பாவி மக்களை [Civilians] லட்சக்கணக்கில் கொன்று குவித்துவிட்டு, ஐந்து லட்சம் குழந்தைகளையும் கொன்றுவிட்டு (இது 2015 வரை உள்ள கணக்கு) மார்த்தட்டியது அமெரிக்கா. ஆனாலும் வீழ்ந்து போனது.

# இந்தியாவில் இஸ்லாமோபோபியா - 2021

## ஓர் பார்வை



கடந்த 2021ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் இஸ்லாமிய வெறுப்பு மனநிலை வளர்ந்து கொண்டே சென்றுள்ளது. முஸ்லிம்கள் தங்களுடைய அடையாளங்களுக்காக குறிவைத்து தாக்கப்படுவது அவர்களுக்கு எதிரான இனவெறி 2021 ஆம் ஆண்டிலும் குறையவில்லை என்பதை எடுத்து காட்டுகின்றது. உலகமெங்கும் குறிப்பாக, முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறி மனநிலையோடு செயல்படுவது யார் என்று பார்த்தால் ஆளும் அதிகார வர்க்கத்தினர் தான். பாரபட்சம் காட்டக் கூடிய சட்டங்களையும் திட்டங்களையும் கடந்த ஆண்டில் வகுத்து இனவெறி மனநிலைக்கு அவர்கள் சேவை செய்துள்ளனர்.

உய்குரில் முஸ்லிம்கள் இனப்படுகொலைகள் செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற போதிலும் சீனா அதனை மறுத்து வருகின்றது. சின்சியாங் வதை முகாம்களில் இருந்து தப்பித்து வந்தவர்களின் வாக்குமூலங்கள் இலண்டனில் நடந்த உய்குர் தீர்ப்பாயத்தின் முன் சமர்ப்பிக்கபட்டன.

முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காக ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரை டிரக் ஏற்றி கொன்ற சம்பவம் கனடாவில் நடந்தது.

பிரான்சில் முஸ்லிம்களை மையப்படுத்தி கொண்டுவரப்பட்ட சட்டங்களின் விளைவாக பொது சமூகத்தில் முஸ்லிம்களை பாரபட்சத்துடன் நடத்தும் செயல்களும், அவர்களுடைய உரிமைகளை பறிக்கும் செயல்களும் குறிப்பாக பெண்களுடைய உரிமைகளை பறிக்கும் செயல்களும் தொடர்ந்து அரங்கேறுகின்றன. அதேபோன்றே ஆஸ்திரிய அரசும் முஸ்லிம் செயற்பாட்டாளர்கள், அமைப்புகள் இவர்களை அச்சுறுத்துவதற்கும் முடக்கி போடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பள்ளிவாசல்கள், முஸ்லிம் அமைப்புகளின் இடங்களை குறிப்பிட்டு அண்மையில் ஆஸ்திரிய அரசு வெளியிட்ட வரைபடம் மிகுந்த சர்ச்சைக்கு உள்ளானது.

ஐக்கிய பேரரசின் (United Kingdom) ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை சார்ந்தவர்கள் (Conservative Party) இஸ்லாமிய வெறுப்பு மனநிலையோடு செயல்படுகின்றார்கள் என்பதற்கான பல உதாரணங்களை முன்வைத்த போதும் அக்கட்சி இவ்விவகாரத்தில் தலையிட்டு அதனை சீர் செய்ய மறுக்கிறது. ஹலால் உணவு, ஹிஜாப் போன்ற முஸ்லிம் அடையாளங்களுக்கு தடைபோடும் சட்டங்களை இயற்றுகின்றன ஐரோப்பிய நாடுகள். இந்தியாவில் முஸ்லிம்கள் லவ் ஜிஹாத், பொருளாதார ஜிஹாதில் ஈடுபடுகின்றனர் என்ற பொய் பிரச்சாரத்தை ஹிந்து தேசியவாதிகள் பரப்பி வருகின்றனர். ட்விட்டர், ஃபேஸ்புக்கில் முஸ்லிம்களை குறித்து வதந்திகளை பரப்பி கலவரங்களுக்கு வித்திட்டுள்ளனர். திரிபுரா, குர்கான், அசாம் ஆகிய மாநிலங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை நடந்துள்ளது.

## 2021ல் இஸ்லாமோஃபோபியா - இந்தியா

கடந்த வருடங்களைப் போலவே 2021ஆம் ஆண்டும் அசாமில் ஆட்சியில் இருக்கும் பிஜேபி அரசு முஸ்லிம்களை கருவருக்கும் வேலையை தொய்வில்லாமல் மேற்கொண்டது. உலகக் கல்வியையும். மார்க்கக் கல்வியையும் சேர்த்து போதிக்கும் அரசாங்கம் நடத்தும் இஸ்லாமிய பாடசாலைகளுக்கு (மதரஸா) தடை விதிக்கப்பட்டது. மார்க்கக் கல்விக்கு தடை விதிக்கப்பட்டு, அப்பாடசாலைகளில் உலக கல்வி மட்டுமே போதிக்க வேண்டும் என்ற நிலை கொண்டுவரப்பட்டது. முஸ்லிம் சமுதாயத்திலிருந்து இமாம்கள் தேவையில்லை மருத்துவர்கள், காவல்துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகளே தேவை என்று கூறினார் அசாம் கல்வி அமைச்சர் ஹிமந்த பிஸ்வ சர்மா. என்ன ஒரு நாடகம். அப்படி மருத்துவர்கள் உருவாகி மக்களுக்கு சேவை செய்தால் கபீல் கானை போன்று சிறையில் அனுப்பி துன்புறுத்துவார்கள்.

நவீன விவசாய திட்டத்திற்கு நிலங்கள் வேண்டும் என்று கூறி 40 வருடங்களாக முஸ்லிம்கள் வாழ்ந்த அவர்களுடைய இடத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றியது அசாம் அரசு. 25,000 ஏக்கர் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டன. இதில் பல முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

எங்களுக்கு கால அவகாசம் வேண்டும் என்ற கோரிக்கையுடன் அப்புறப்படுத்துதல் அறிவிப்புக்கு எதிராக போராட்டம் செய்த முஸ்லிம் கிராமவாசிகளை ஆயுதமேந்திய காவல்துறையை கொண்டு அடக்கி போட்டனர். முஸ்லிம்களுடைய வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, சில தீ வைத்து கொழுத்தப்பட்டன. காவல்துறையின் குண்டு பாய்ந்து இறந்து கிடந்த முஸ்லிம் ஒருவரின் சடலத்தின் மீது ஏறி குதித்து அரக்க குணத்தை வெளிப்படுத்தினான் போட்டோகிராஃபர் பிஜோய் பனியா. இந்த பிணம் திண்ணியின் வீடியோ வைரல் ஆனது. வங்காள மொழி பேசக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமும் அந்நியர் என்று எந்தவித ஆதாரமும் இல்லாமல் முத்திரைக் குத்தப்பட்டனர். பாசிச வாதிகளின் பிரிவினை சதி திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் அந்நியர் என்று தொடர் பிரச்சாரம் செய்யப் படுகின்றனர்.

இந்தியாவை இந்துத்துவ நாடாக மாற்ற முயலும் இவர்கள் மதம் மாறி திருமணம் செய்பவர்களை குறி வைக்கின்றனர். முஸ்லிம் இளைஞர்களுக்கு வேறு வேலையே இல்லை. இந்து பெண்களை காதலித்து கட்டாய மதம் மாற்றி திருமணம் செய்து கொள்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் இந்துக்கள் இந்தியாவில் சிறுபான்மையினராகி விடுவார்கள். எனவே லவ் ஜிஹாத் என்ற பெயரால் நடக்கும் இதுபோன்ற சம்பவங்களை தடுக்க வேண்டும் என்று பொய் பிரச்சாரம் செய்கின்றனர். இவர்களுக்கு வலு சேர்க்கும் வண்ணம், திருமணத்திற்காக வேண்டி நடக்கும் "சட்டத்திற்கு புறம்பான மதமாற்றங்களை" தடுத்திடும் அவசர சட்டம் உத்தர பிரதேசத்தில் கொண்டு வரப்பட்டது. அதன் பின்பு, காவல் துறையுடன் இணைந்து சட்டத்தை தங்கள் கையில் எடுத்து கொண்டு செயல்பட ஆரம்பித்தனர் ஹிந்துத்துவ குண்டர்கள். முஸ்லிம்கள் என்றாலே அச்சத்துடன் பார்க்கப்பட வேண்டியவர்கள் என்ற பிரச்சாரத்தை சமயம் கிடைக்கும் போதெல்லாம் இவர்கள் முடுக்கி விடுவதால் முஸ்லிம்களின் வாழ்வும் பாதுகாப்பும் கேள்விக்குறியாகின்றன.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் மட்டும்தான் இது போன்ற பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள் என்றில்லை. கிருஸ்தவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கடந்த டிசம்பரில் கர்நாடகாவிலும் மதமாற்றதிற்கு எதிரான சட்டம் கொண்டுவரப்பட்டது. சட்டத்திற்கு புறம்பாக பெருமளவில் ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்படுகின்றனர், அதனை தடுத்திடுவதே சட்டத்தின் நோக்கம் என்று பிஜேபி கூறியது. தேவாலயங்கள், கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள், கிறிஸ்துமஸ் திருவிழாக்களில் தாக்குதல் என ஹிந்துத்துவ குண்டர்களின் அட்டகாசம் நடந்தேறுகின்றது. 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் அவர்களின் வழிபாட்டு தலங்களின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களின் எண்ணிக்கை 305. உண்மையான எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கலாம். இந்தியாவில் வாழும் கிறிஸ்தவர்களை ஒடுக்கிவிட்டு இவர்கள் அண்டைநாடுகளில் இருந்துவரும் கிறிஸ்தவர்களுக்கு CAA சட்டத்தின் மூலம் அடைக்கலம் கொடுப்பார்களாம்.

முஸ்லிம்களுடைய அடையாளங்களை அழிப்பதில் கிட்டத்தட்ட சைனாவின் பாணியை இந்தியா பின்பற்றுகிறது. மே 2021ல் உத்தர பிரதேசத்தில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த பள்ளிவாசல் இடிக்கப்பட்டது. உருது மொழி முஸ்லிம்களின் மொழி எனவே அதற்கு இந்தியாவில் இடமில்லை என்று இந்து வலதுசாரி அமைப்புகள் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. முஸ்லிம்கள் எந்த துறைகளில் இருந்தாலும் சரி அவர்கள் இந்தியாவிற்கு விசுவாசம் இல்லாதவர்கள் என்று பரப்புரை செய்ய வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு இந்துத்துவாவினர் செயல் படுவதால் கிரிக்கெட் விளையாட்டில் இந்தியா தோற்றதற்கு முஹம்மது சமியை வசை பாடினார்கள்.

திரிபுராவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற கலவரத்தை குறித்து எழுதியதற்காக இரண்டு பத்திரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு பெயில் கிடைத்தது. இக்கலவரத்தில் பள்ளி வாசல்களும் முஸ்லிம்களின் உடைமைகளும் சூறையாடப்பட்டன. பத்திரிக்கையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடாக மோடியின் இந்தியா செயல்படுகிறது என்று The Nation இணையதளம் கட்டுரை வெளியிட்டது. காஷ்மீரில் நடக்கும் அநியாயங்களை எழுதினால் அவர்களின் மீது தேச விரோத சட்டத்தை பாய்ச்சுகின்றனர்.

1990ல் டெல்லியின் ஒதுக்குப்புறத்தில் நடுத்தர வகுப்பு மக்களுக்காக உருவாக்கப்பட்டது குர்கான் நகரம். முஸ்லிம்கள் தங்களுடைய இடங்களில் பள்ளிவாசல்களை எழுப்புவதற்கு கூட அங்கே எதிர்ப்புகளையும் குரோதங்களையும் சம்பாதித்து வருகின்றனர். கட்டுமான பணிகளில் முஸ்லிம் ஊழியர்கள் பெருமளவில் அங்கே ஈடுபட்டுள்ளனர். தொழுகைக்காக தொலைதூரம் செல்ல முடியாத அவர்கள் திறந்த வெளிகளில் தொழுகை நடத்துகின்றனர். அதற்கான அனுமதியையும் மாவட்ட நிர்வாகத்திடம் இருந்து அவர்கள் பெற்றுள்ளனர். 108 பொது இடங்களில் (திறந்தவெளிகளில்) தொழுகை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிலிருந்து சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயல்படும் ஹிந்துத்துவ குண்டர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தனர். தொழுகை நடத்தவிடாமல் இடையூறு செய்தனர். இதன் காரணமாக 108 இடங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி பின்னர் 37 இடங்கள் என்று சுருங்கியது. கடந்த வருடம் நிலைமை இன்னும் மோசமானது. கைகளில் குண்டாந்தடிகளுடனும், கோடாலிகளுடனும் வாரா வாரம் வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் இடங்களில் கூடி விடுவார்கள் குண்டர்கள். 'துரோகிகளை சுட்டு தள்ளுங்கள்', ஜெய் ஸ்ரீராம் என்று முழக்கம் இடுவார்கள். மாட்டுச் சாணிகளையும் தொழுகை இடங்களில் வைத்தனர்.

கலவரங்கள் பரவுவதற்கு சமூக ஊடகங்களில் விதைக்கப்படும் வெறுப்பு பிரச்சாரங்களும் ஒரு முக்கிய காரணம். வெறுப்பு பேச்சுகள், தவறான தகவல்கள், கலவரத்தை உண்டுபண்ணும் பதிவுகள் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தபோது ஃபேஸ்புக் இந்தியா அதை கண்டுகொள்வதில்லை என குற்றச்சாட்டு எழுந்தது. “இப்பிரச்சனை பல வருடங்களாக தொடர்வது ஃபேஸ்புக் நிறுவனத்திற்கு தெரியும்.

இருந்தபின்பும் அவர்கள் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை” என்பதை அந்நிறுவனத்தில் வேலை செய்த பெண் ஊழியர் பிரான்சிஸ் ஹாகன் அந்நிறுவனத்தை குறித்த தகவல்களை வெளியே கசிய விட்டபோது தெரியவந்தது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் பின்புலமாக, ஆதரவாக இருப்பது பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களே.

இஸ்லாமிய வெறுப்பை விதைப்பதில் அதிகாரத்தில் இருப்பவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

24 மாதங்களில், நான்கு மாநிலங்களில் 12 கூட்டங்களை நடத்தியுள்ளனர் இந்துத்துவ வாதிகள். இதில் முஸ்லிம்களை இனப்படு கொலை செய்யவும், கிறிஸ்தவர்களின் மீது தாக்குதல் நடத்தவும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (Article-14.com).

கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் ஒற்றை கலாச்சாரமாக இந்துத்துவா மட்டுமே கோலோச்சிட வேண்டும் என்ற பாதையில் பயணிக்கிறது இந்தியா.

மத வேறுபாடுகளின் அடிப்படையில் மக்களை பிரித்துபோடுகின்றனர். அதை ஒரு கருவியாக பயன்படுத்தி பெரும்பான்மை மக்களை தங்களுக்கு ஆதரவாக்கி மோடி அரசு செயல்படுகின்றது.

ஆதாரம்:

Bridge Initiative Team

**- அபூஹாசின்**




# வெறுப்பு குற்றங்களை ஆவணபடுத்துவது எப்படி? வேலையை பறித்த ஃபோர்ப்ஸ் நிறுவனம்




*வெறுப்பு குற்றங்களும் வன்முறைகளும் நடந்திடும் சமயத்தில் ஓர் அரசாங்கம் கைகட்டி வேடிக்கை பார்த்திடாமல் அதனை தடுத்திடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பின் அவைகள் குற்றங்களாக கூட பதிவு செய்வது கிடையாது. இங்கே பாசிச ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை குற்றம் இழைக்கப்பட்டவர்கள் மீதே வழக்குகள் புனைந்து நிரூபிக்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் வெறுப்பு குற்றங்களை ஆய்வு செய்து அதனை எப்படி ஆவணப்படுத்திட வேண்டும் என்பதை எழுதினார் ராச்செல் சித்ரா என்ற பத்திரிக்கையாளர்.*

*இதனை ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் இயங்கும் இதழியல் கல்விக்கான ராய்ட்டர் நிறுவனம் 31 ஜனவரி 2022 அன்று வெளியிட்டது. அதனை டிவிட்டரில் பகிரவும் செய்தது. அடுத்த இரண்டு நாட்களில் 2 பிப்ரவரி, 2022 அன்று ஃபோர்ப்ஸ் மீடியாவின் மத்திய கிழக்கு நிறுவனத்தில் ஆசியவுக்கான நிருபராக பணிபுரிந்து கொண்டிருந்த ராச்செல் சித்ராவை பணியில் இருந்து உடனடியாக நீக்கியது அந்நிறுவனம்.*

*2017 இல் தொடங்கி இதுபோன்று இந்தியாவில் வெறுப்பு குற்றங்களை ஆவணப்படுத்திட முயல்பவர்களையும் அந்த முயற்சிகளையும் முடக்கிப்போடுவது மூன்றாவது முறை.*

Hindustan Times, Fact Checker *ஆகிய நிறுவனங்கள் வெறுப்பு குற்றங்களை ஆவணப்படுத்தி வந்ததை நிறுத்திக்கொண்டன.*

*ஐக்கிய அரபு அமீரகத்தின்* (UAE) *ஒரு பகுதியான துபாயில் இயங்குகிறது* Forbes Middle East. *இந்திய அரசுடன் நெருக்கமான உறவை பேணுகிறது ஐக்கிய அரபு அமீரகம். 2019 ஆகஸ்ட் மாதம்* UAE *இன் உயரிய விருதான ஷேக் செய்யத் விருது* (Order of Zayed) *மோடிக்கு வழங்கப்பட்டது.*

*துபாய் ஆட்சியாளர் முஹம்மது பின் ராசித் அல் மக்தூமின் மகள் லதீஃபா முஹம்மத் தப்பி சென்ற சொகுசு கப்பலில் 2018 மார்ச்சில் நுழைந்தது இந்தியாவின் இராணுவ அதிரடிப்படை. தப்பிக்க முயன்றவரை மீண்டும் துபாய்க்கு அனுப்பி வைத்தனர்.*

*இளவரசியின் தோழியும் முக்கிய சாட்சியுமான தியன்னாவின்* (Tiina Jauhiainen) *வாக்குமூலத்தின் படி,*

"என்னை மீண்டும் அங்கு கொண்டு செல்லாதீர்கள், இங்கேயே என்னை கொன்று விடுங்கள், என்னை மீண்டும் அங்கு கொண்டு செல்லாதீர்கள்" என்பதே லதீஃபாவின் வார்த்தையாக இருந்தது.

தி.ஜே-வின் வாக்குமூலத்தின்படி, கப்பலில் இருந்த ஒவ்வொரு பணியாளர்களையும் கேவலமாக நடத்தியது இந்திய படை. பின்னர் அவர்களுக்கு பதிலாக UAE இராணுவம் வந்தது. UAE படை சொகுசு கப்பலில் வந்திறங்க இந்திய கரையோர காவல் படை உதவி செய்தது.

2019 ஏப்ரல் 4இல் மோடிக்கு ஷேக் செய்யத் விருது அறிவிக்கப்பட்டு. ஆகஸ்ட் 24இல் வழங்கப்பட்டது.

பாரதீய ஜனதா மோடி அரசின் கீழ் நடக்கும் கொடுமைகளை ஆவணப்படுத்தினால் எல்லை தாண்டியும் ஆதிக்கம் செலுத்தி பணியில் இருப்பவர்களை நீக்கிட முடியும் என்பதற்கு எடுத்துகாட்டு தான் ராச்செல் சித்ராவின் பணி நீக்கம். எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் பணி நீக்கம் செய்யப்பட்ட அதே நாள் காலையில் தான் ராய்ட்டர் நிறுவனம் வெளியிட்ட ஆவணத்தை டிவிட்டரில் மறுபகிர்வு செய்திருந்தார் உத்தர பிரதேச பிஜேபி அரசால் இரு முறை சிறைக்கு அனுப்பபட்ட கபீல் கான்.

68 லட்சம் பாக்கி பணம் செலுத்தாத காரணத்தால் விநியோகஸ்தர்கள் ஆக்சிஜன் சிலிண்டரை நிறுத்தி வைத்திருந்த நேரத்தில் 10 ஆகஸ்ட் 2017 அன்று ஆக்சிஜன் சிலிண்டரை பாபா ராகவ் தாஸ் மருத்துவ கல்லூரிக்கு ஏற்பாடு செய்ய அங்கும் இங்கும் ஓடி கொண்டிருந்தார் கபீல் கான். தனது சொந்த செலவில் அவற்றை ஏற்பாடும் செய்தார். ஆக்சிஜன் இல்லாததால் இறப்புகள் நடந்தன. இந்த செய்தி வெளியே தெரிந்ததால் உத்தர பிரதேசத்தில் பதவியேற்ற பிஜேபி அரசு அவரை கெடுபிடிகளுக்கு உள்ளாக்கியது.

டிவிட்டரில் ஆவணத்தை மறுபகிர்வு செய்ததற்காக கபீல் கானுக்கு சித்ராவும் "மதிப்பளித் தமைக்கு நன்றி" என்று டிவிட்டரில் பதில் அளித்திருந்தார். அதே நாளின் பிற்பகுதியில் சித்ராவிற்கு மனித வள மேம்பாட்டு துறையில் பணிபுரியும் ஒரு பெண்ணிடமிருந்து (Human Resource team) இருந்து அழைப்பு வந்ததாகவும், எதற்காக உன் பெயர் டிவிட்டரில் பலமுறை குறிப்பிடப்படுகிறது,

கபீல் கான் என்பவர் யார், அவர் தீவிரவாதியா, எதற்காக அவர் சிறை சென்றார் என்றெல்லாம் கேட்டதாக சித்ராவின் நெருங்கிய நண்பர் Article 14




இணைய தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

2021இல் சித்ரா ஆய்விற்காக எடுத்து கொண்டதை ஏன் ராய்ட்டர் நிறுவனம் இப்பொழுது வெளியிட்டது என்றும் அவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

சித்ராவின் அலுவலக இமெயில் கணக்கை முடக்கிவிட்டு, பணி நீக்கம் குறித்த தகவலை அவருடைய தனிப்பட்ட ஜிமெயிலுக்கு அனுப்பியுள்ளனர்.

நிறுவனத்தின் குறிக்கோள்களில் கொண்டு வரப்பட்ட மாற்றத்தினாலும், நிறுவன மறு சீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும் சில பொறுப்புகளை நீக்க முடிவு செய்துள்ளோம். உங்களை நிறுவனத்தின் பணியிலிருந்து நீக்கியுள்ளோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம் என்று மெயிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 3ஆம் தேதி சித்ராவை Forbes Middle East வாட்சப் குழுமத்தில் இருந்தும் நீக்கியுள்ளனர். தலைமை ஆசிரியரை போனில் அழைக்க முயற்சி செய்துள்ளார் சித்ரா. ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

சித்ராவின் ஆய்வு கட்டுரை வெளிவந்த இரண்டு நாட்களில் எதற்காக முன்னறிவிப்பு இன்றி உடனடியாக வேலையை விட்டு நீக்கம் செய்தீர்கள், ஏன் கபீல் கானை குறித்து விசாரித்தீர்கள் போன்ற



article14
Justice. Constitution. Democracy.

SEDITION COVID-19 REPORTAGE RESEARCH REPARTEE VIDEO ABOUT CONTACT

**Two Days After Journalist's Paper On Hate Crime In India Is Published, Forbes Middle East Fires Her**

BETWA SHARMA 11 Feb 2022 10 min read Share

On 31 January 2022, two days after the Oxford University-based Reuters Institute published her research on hate crime in India, and while she was in the middle of daily work, Forbes Middle East—based in Dubai, a monarchy with deep ties to the Indian government—terminated the services of its India correspondent. Two hate-crime databases revealing a spike in such crimes since Narendra Modi took office had previously been shut down.

கேள்விகளை Forbes Middle East இடம் கேட்டுள்ளது Article 14. எதற்கும் பதில் இல்லை.

தன்னுடைய 17 வருட இதழியல் பணி அனுபவத்தில் இது போன்ற இரக்கமற்ற முதலாளியை பார்த்தது இல்லை என்கிறார் சித்ரா. 25 அக்டோபர் 2021 இல் என்னை இந்த வேலைக்கு எடுத்துவிட்டு சில மாதங்களில் எங்களுக்கு அந்த பொறுப்பில் ஆள் தேவையில்லை என்று கூறுவதை புரிந்து கொள்ள கடினமாக இருக்கிறது என்கிறார்.

கபீல் கானுக்கு நன்றி கூறியது சரியே என்று தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்.

### வெறுப்பு குற்றங்களை ஆவணப்படுத்திய இரண்டு இணைய தளங்கள் முடக்கப்பட்டது எப்படி?

மத மோதல் கொலைகள், கும்பல் படுகொலைகள் என்ற துணை தலைப்புகளில் தரவுகளை தேசிய குற்ற ஆவண காப்பகம் 2017ஆம் ஆண்டு வெளியிடுவதாக இருந்தது. ஆனால் அது நடக்கவில்லை.

மதத்தின் அடிப்படையில் நடக்கும் வெறுப்பு குற்றங்கள், குறிப்பாக சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் பிஜேபி ஆட்சிக்கு வந்தபின் சாதாரண நிகழ்வாக மாறிவிட்டன. ஆனால் அதற்கான தரவுகள் இல்லாத காரணத்தினால் தான் பத்திரிக்கையாளர்கள் அதனை ஆவணபடுத்துவது முக்கியம் என்று கருதுகின்றனர்.

வெறுப்பு குற்றங்களை குறித்து எழுதுவது இந்தியாவை பற்றிய எதிர்மறை எண்ணங்களை உருவாக்கும் என்பதாலும், சர்வதேச ஊடகங்களில் வலதுசாரி அமைப்புகளின் செயல்முறைகள் அம்பலப்படுத்தபடுத்தும் என்பதாலும் அவை தவிர்க்கப்படுகின்றன.

செப்டம்பர் 2015லிருந்து நடந்த வெறுப்பு குற்றங்களை ஆவணப்படுத்தும் முயற்சியை ஹிந்துஸ்தான் டைம்ஸ் முதன் முறையாக மேற்கொண்டது. அந்த மாதத்தில் தான் முஹம்மது அஹ்லாக் கொல்லபட்டார். 2017 ஜூலையில் இந்த தளம் செயலில் வந்தது. இந்த ஆவணத் தளம் முடக்கபடுவதற்கு ஒரு மாதம் முன்னதாக அதன் தலைமை ஆசிரியர் அரசின் நிர்பந்தத்தால் வெளியேற்ற பட்டார் என்று நம்பப்படுகிறது.

இரண்டு ஆண்டுக்கு பின், வலது சாரி ஊடகங்களின் அழுத்தத்தினாலும் வசைகளாலும் 2019இல் Fact Checker ஆவண தளம் வெறுப்பு குற்றங்களை பதிவு செய்வதை நிறுத்தி கொண்டது.

பாதிக்கபட்டவர்களை குறித்து யாரும் பேசிடக் கூடாது என்று விரும்புகின்றனர். சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் அநீதிகளை பதிவு செய்யாமல் விட்டுவிட்டால் அப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காததை போன்று காட்டி விடலாம் என எண்ணுகின்றனர். பாதிக்கபட்டவர்கள் மீதே வழக்கு புனைந்து ஒடுக்க நினைக்கின்றனர். எனவே உண்மையை உரக்க சொல்வோம் ஒன்றாய்.

- Article-14.com

**அபூஹாசின்**






# கலைஞர் அன்று மத மாற்றங்கள் பற்றி..

நம் நாட்டு சங்கிகளுக்கு ஒரு வழக்கம். அது தமிழ்நாட்டில் யாரேனும் ஒருவர் இஸ்லாத்திற்கு வந்துவிட்டால் அதற்குப் பல மலிவான காரணங்களை சொல்லுவார்கள். களங்கங்களை கற்பிப்பார்கள். அப்படித்தான் அர்ஜுன் சம்பத் என்பவர் அண்மையில் ஓர் பதிலில் குறிப்பிட்டிருந்தார்.

பின்னர் திராவிடர் கழகத்தையும்,திராவிட முன்னேற்றக் கழகத்தையும் குறை கூறுவார்கள்.

இப்படித்தான் அன்று மீனாட்சிபுரத்தில் பலர் இஸ்லாத்தை ஏற்றபோது நமது "சோ" அவர்கள் திமுகவைக் குறைசொல்லி கட்டுரை ஒன்றை எழுதினார். அதற்கு பொட்டிற் அறைந்தாற்போல் பதில் ஒன்றை கலைஞர் அவர்கள் எழுதினார்கள் "முரசொலி" நாளிதழில்.அதனை அப்படியே இங்கே தருகின்றோம்.

*யாரால்? யாரால்?*

*உடன் பிறப்பே.*

*மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய நிகழ்ச்சிக்கு எத்தனையோ காரணங்கள் கூறப்பட்டன!*

*இந்து மத ஆதிக்கக்காரர்கள் தங்கள் தவறை மறைக்கவும், பன்னெடுங்காலமாகச் சாத்திர சம்பிரதாயங்கள் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத்தேரைகளாய் நடத்திய கொடுமைகளின் கோரம் தாங்க முடியாமல்தான் இத்தகைய மன மாற்றங்கள் ஏற்பட்டன என்ற உண்மையை ஒழித்திடவும் மீனாட்சி புரத்திற்காக கட்டவிழ்த்துவிட்ட காரணங்கள் மிகப்பல.*

இப்போது இதோ ஒரு புதிய காரணத்தை (SUNDAY 11-10-81) "சண்டே" எனும் ஆங்கில இதழில் நண்பர் "சோ" அவர்கள் கண்டுபிடித்து அதனைக் கட்டுரையாகத் தீட்டியுள்ளார்.

மீனாட்சிபுரம் சம்பவத்திற்கு, சாதிவெறித் தன்மை காரணம் இல்லையாம்!

நாய் நடை பயிலலாம்! பன்றி பவனி வரலாம்! பாம்பு ஊர்வலம் நடத்தலாம்! ஆனால் பஞ்சமன் தெருவில் நடக்கக் கூடாது என்றும், அது பாவம் என்றும்-வேதம் ஏற்காது என்றும் மனுஸ்மிருதி மறுக்கிறது என்றும் - ஆண்டவனுக்கு ஆகாது என்றும்-எந்த ஆதிக்கபுரியினர் அன்று தொட்டு இன்றுவரை தடுத்து வந்தார்களோ, அந்த ஆதிக்கக் கோட்டையின் "அதிசய மனிதர் சோ" அவர்கள் இப்போது புதிய காரணம் ஒன்றைத் தனது பொல்லாத மூளையில் தோற்றுவித்துக்கொண்டு அதனை நீண்டதோர் கட்டுரையாக்கி நீட்டி முழக்கியிருக்கிறார்.

"அக்கிரகாரத்து அதிசயமனிதர்" என்று அறிஞர் அண்ணா அவர்கள், வா.ரா, அவர்களைப் புகழ்ந்து எழுதியது உண்டு.புரட்சிகரமான கருத்துக்களை எழுத்தின் வாயிலாக வழங்கி அவ்வண்ணமே வாழ்ந்து காட்டியவர் வா.ரா என்பதால்!

ஆனால் இதோ இந்த அக்கிரகாரத்து அதிசய மனிதர், மீனாட்சிபுரம் சம்பவங்களுக்குக் காரணமாக விளங்கும் மதவெறி,ஆதிக்கவெறி-மனுஸ்மிருதி - வர்ணாஸ்ரம தர்மம் அனைத்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தோடு தனது புதுக்கண்டுபிடிப்பை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார். இதோ "சண்டே" ஆங்கில ஏட்டில் அவர் வெளியிட்டுள்ள விஷயங்களை (விஷங்களை என்பதே பொருந்துமென்க) உடன் பிறப்பே, உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*1)தி.மு.கவும், திராவிடர் கழகமும் செய்த அழிவு வேலையின் அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் சம்பவம்!*

*2.ஈ.வெ.ராமசாமி நாயக்கர், பிரிட்டிஸ் புகழ் பாடிகளான ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசு! தி.க.வின் நிறுவனர்! ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை எடுத்துக்கொண்டார். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்து மத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்றார். பிராமண ஒழிப்பையும்,*




*இந்து மத ஒழிப்பையும் ஒன்றெனக் கருதினார்!*

*3.இப்போது ஏற்பட்ட மீனாட்சிபுர அறுவடைக்கு அப்போதுதான் நிலம் உழவு செய்யப்பட்டது!*

*4) சி.என்.அண்ணாதுரையால் துவக்கப்பட்ட தி.மு.கழகம் இந்தப் பாவத்திலிருந்து பிறந்தது!*

*5) உணர்ச்சிகளைக் கொல்லும் சினிமாவை தி.மு.க. நாத்திகப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியது. கோயில்களையும், பூசாரி களையும் கொடுமையாளர்களாக சித்தரித்து சந்நியாசிகளைத் தீயவர்களாகத் தீட்டிக்காட்டி, சினிமா பார்க்கிற ஒவ்வொருவரையும் இந்து மதத்தைக் கண்டிக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டது.*

*6) தமிழ்நாட்டு மக்கள் ஒருவித அசிங்கமான நாத்திகத்திற்கு பலியானதன் விளைவுதான் மீனாட்சிபுரம்!*



மீனாட்சிபுரம் மத்ரஸா புகைப்படங்கள்

7) இந்து மதக் கடவுள்கள் மீது ஈ.வெ.ரா. மழையாகப் பொழிந்த ஆபாச அர்ச்சனை

இந்து மதத்தின் மீது சி. என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள்,

முதலமைச்சராகக் கருணாநிதி பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரபூர்வமாகக் கட்டவிழ்த்துவிட்ட அவதூறுடன் கூடிய ஏளனம், இவைகளுக்குப் பிறகும் தமிழர்கள் அமைதியோடு இருக்கிறார்கள் என்றால் இது தமிழனின் பொறுமைக்கு அடையாளமா? சாதிவெறிக்கு அடையாளமா?உடன்பிறப்பே, இத்தனையும் "சோ" பொழிந்துள்ள சொன்மாரி!

பெரியார்

அண்ணா

கருணாநிதி

தி.மு.க.

தி.க.

மீனாட்சிபுரத்திற்கு யார் யார் காரணம் எனக்கூறி, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி - இந்தக் குற்றவாளிகளைத் தமிழர்கள் இன்னமும் பொறுத்துக்கொண்டு அமைதியாக இருக்கிறார்களே என்றும் அங்கலாய்த்துக் கொண்டு "சண்டே" இதழில் தனது கட்டுரையை முடித்திருக்கிறார்.

இந்தியாவின் வடபகுதியில் பல இடங்களில் நடைபெற்றுள்ள மத மாற்றங்களுக்கும்- தி.க.வும், தி.மு.க.வும்தான் காரணம் என்று சோ சொல்லப்போகிறாரோ என்னவோ தெரியாது! ஒரு பெருங்கூட்டத்துடன் டாக்டர் அம்பேத்கார் புத்த மதத்தை தழுவினாரே; அதற்குக் காரணம் இந்து மத ஆதிக்கமா? அல்லது வேறு ஏதாவது சோ அவர்கள் கண்டு பிடித்து எழுதப்போகிறாரா? தி. க., தி.மு.க. ஆகிய இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் மத மாற்றங்கள் ஏற்பட்டதற்குக்கூட அப்போது பிறக்காமலிருந்த பெரியாரும், அண்ணாவும், கருணாநிதியும், தி.க.வும், தி.மு.க.வும்தான் காரணம் என்று கதைக்கப் போகிறாரா?

தி.க.வும்,தி.மு.க.வும் அழிவு வேலை செய்தன? அதற்கு அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் என்கிறார் நண்பர்!

தும்பும்,தூசியும்,ஒட்டடையும், குப்பையும் நிறைந்துள்ள வீட்டில் அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு இல்லத்தைத் தூய்மையாக வைத்திட முயல்வது அழிவு வேலை என்று அவரது அகராதியில் அச்சாகியிருக்கிறது போலும்!

சாதிக்கரையானும், புராண ஆபாசப் பற்றுக்களும், சந்தன தாம்பூலம் பால் பழம் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் என்று நண்பர் வாதிடுகிறாரா?

அவரது கட்டுரையிலேயே பெரியாரைப் பற்றிக் குறிப்பிடும்போது ஈ.வெ.ரா. என்று கூடக் குறிப்பிடாமல் ஈ.வெ.ராமசாமி நாயக்கர்' என்றுதானே ஆரம்பிக்கிறார் ! நாயக்கர் என்ற சாதிப் பெயரைச் சேர்க்காமலே பெரியார் என்றால் எல்லோருக்கும் தெரியக்கூடிய பெயர் தானே? அப்படியிருந்தும் அந்தச் சாதியுணர்வு



மீனாட்சிபுரம் மத்ரஸா புகைப்படங்கள்


சோவுக்குப் போகவில்லையே! ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிஷாருக்குப் புகழ் பாடியதாம்-அதற்கும். மீனாட்சிபுரத்திற்கும் என்ன தொடர்பு? இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமே; அந்த மகாகவி பாரதியார்கூட பிரிட்டிஷ் இளவரசரைப் புகழ்ந்து வரவேற்பு வாழ்த்துக்கவி பாடியவர் தான்! அதையேன் 'சோ' மறந்துவிட்டார்! ஆரம்பத்தில் காங்கிரசே கூட உத்தியோகங்களில் இந்தியர்களுக்கு அதிக இடம் கோரித்தான் ஆரம்பிக்கப்பட்டது! அதனால் தான் தாழ்த்தப்பட்ட பிற்பட்ட வர்களைப் பின்தள்ளிவிட்டு மிக உயர் சாதிக்காரரர்கள் "கருங்குழிப் பார்சல்"களைப் பற்றியெல்லாம்கூடக் கவலைப்படாமல் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பதவிகளைப் பெற்றுப் பரவசமுற்றனர்! பிரிட்டிஷ் காரனாலேயே தொடங்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம் பின்னர் அவனிடமிருந்தே விடுதலை கோருகிற இயக்கமாக உருவெடுத்துப் போராட வில்லையா? அந்தப் போர்ப்படைத் தளபதிகளில் ஒருவராக பெரியார் விளங்கிட வில்லையா? பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு தேவை என்ற தனது கருத்துக்கு அன்றைய காங்கிரஸ் தலைவர்களான ராஜாஜி போன்றவர்கள் இடம் தராததாலும்-வ.வே.சு. அய்யர் அவர்கள் சேரமாதேவியில் நடத்திய குருகுலத்தில் சமபந்தி உணவுக்கு மாணவர்களை அனுமதிக்காத காரணத்தாலும் - பெரியார் அவர்கள் போர்க்குரல் எழுப்பிக் காங்கிரசைவிட்டு வெளியேறிய வரலாற்றை நாடு மறந்துவிடவில்லையே!

"சேரமாதேவியில் சேர்க்கமாட்டோம் சமத்துவக் கொள்கையை" என்று செப்பியவர்களின் செயலால் மீனாட்சிபுரத்து உணர்வுகள் ஏற்பட்டனவா? அல்லது அன்றைக்கே அந்த சாதிவெறிச் சண்டாளத்தனத்தை எதிர்த்துச் சங்கநாதம் செய்த தந்தை பெரியார் செயலால் மீனாட்சிபுரங்கள் ஏற்பட்டனவா?

**அன்புள்ள,**

**மு. க.**


இஸ்லாமிய நாகரிகம்




**ஆசிரியர்:** முஸ்தபா அல்ஸிபாஈ
**பக்கம்:** 208 பக்கங்கள்
**விலை:** 130/-

"


நமது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் எத்துணை கீர்த்திமிக்கது என்பதை இங்கே இயன்ற மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.

நமது நாகரிகத்தின், பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் இங்கே சுட்டிக்காட்டுவது என்பது இயலாத ஒன்றுதான். நான் தொடங்கி வைத்திருக்கின்றேன். நீங்கள் தொடருங்கள்; முடித்தும் வையுங்கள்.

- முஸ்தபா அல்ஸிபாஈ

8072773868

Vergal Pathippagam | 8148129887



# முதல் சிலுவைப்போர் வெற்றி வீரர் சுல்தான்

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி(ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர்(ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095இல் போப் அர்பன்-2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப் போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப் பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம் களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த

வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப் படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த,சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹூத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து “எழுந்திரு, ஸலாஹூத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் ‘பிறையை சிலுவை’ வெற்றி கொண்டு விட்டது” என்று வெறிகொண்டு கூறியதிலிருந்து ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும்.

கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

### சென்ற தொடரின் தொடர்ச்சி.....

கனவில் நபி(ஸல்) அவர்கள் தோன்றி, “நீர் இங்கேயே தங்கி சுகம் காண ஆரம்பித்து விட்டீரா? ஜிஹாதையும் இஸ்லாத்தின் எதிரிகளுடன் போர் செய்வதையும் தவிர்த்து கொண்டீரா?” என்று கேட்டு மறைந்தார்கள். விழித்த நூருத்தீன் அவர்கள் பதறிப்போய் உடனடியாக மொசூலை விட்டு திரும்பினார்.

### ஹிஜ்ரி 567 கி.பி.1172

நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஸலாஹூத்தீன் அய்யூப் அவர்களிடம் ஒரு செய்தியை அனுப்பினார்கள். அந்நேரத்தில் ஸலாஹூத்தீன் அவர்கள் எதிர்ப்பதற்கு எதிரிகள் எவருமின்றி பெரும் பலத்துடன் இருந்தார்கள். எகிப்தின் ஆட்சியாளர் அல்அதீத் அவர்கள் பலவீனமாகி விட்டிருந்தார்.

### வெள்ளிக்கிழமை பிரசங்கத்தில் அப்பாசிய கலீஃபா

அக்கால கட்டத்தில் வெள்ளிக்கிழமைகளில் அல்அதீத் அவர்களை உயர்த்தி பேசுவதும் அவர்களுக்காக துவா செய்வதும் வழமையாக இருந்து வந்தது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை நிறுத்தி விட்டு அப்பாசிய கலீஃபாக்கள் குறித்து பேசும் படியும் அவர்களுக்காக துவா செய்யும் படியும் உத்தரவிட்டிருந்தார். அது தான் செய்தியாக வந்திருந்தது. ஆனால் இதனை செய்வதற்கு ஸலாஹூத்தீன் மிகுந்த தயக்கம் காட்டினார். தான் அவ்வாறு செய்யும் போது மக்கள் அதற்கு ஆமின் என்று சொல்லாமல் போய் விட்டாலோ அல்லது இதன் காரணமாக தனக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்து விட்டாலோ என்ன செய்வது என்று

எண்ணலானார். எனவே, இதனை அவர் செய்ய வில்லை. இவ்வாறு செய்யாமல் விட்டதற்கான காரணத்தை நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு அனுப்பி மன்னிப்பும் கோரினார்.

ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இதனை எல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, "என் உத்தரவை நிறைவேற்ற போகிறீர்களா? இல்லையா?" என்று கேட்டு செய்தி அனுப்பினார். இப்போது ஸலாஹூத்தீனுக்கு வேறு வழியே இல்லை. ஆனாலும் தயக்கம் ஒரு பக்கம். அவர் முதல் முயற்சியாக அல் அதீத் அவர்களை உயர்த்தி பேசுவதையும் அவர் களுக்காக துவா செய்வதையும் நிறுத்தினார். இந்த நிலையில் அல் அதீத் அவர்கள் நோய் வாய்பட்டார்கள். இப்போது ஸலாஹூத்தீன் அவர்கள் தன் தளபதிகளை வரவழைத்து அப்பாசிய கலிபாவை உயர்த்தி பேசி அவருக்காக துவா செய்வதை குறித்து ஆலோசனை கேட்டார். சில தளபதிகள் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். வேறு சிலர் இதனை எதிர்த்தார்கள். ஸலாஹூத்தீனுக்கு நூருத்தீன் அவர்களின் ஆணையை நிறைவேற்றுவதை தவிர வேறு வழி கிடையாது.

இந்த நேரத்தில் அரபி அல்லாத ஒருவர் அல்அமீருல் அளீம் என்பவர் எழுந்து நின்று பேச ஆரம்பித்தார். இவர் எகிப்திற்கு அடிக்கடி வரக் கூடியவர். இவர் ஒரு ஆலோசனையாளர். முக்கியமான விஷயங்களில் ஆலோசனை கூற கூடியவர். மற்ற தளபதிகள் அப்பாஸிய கலீபாவை உயர்த்தி பேசுவதற்கும் பிரார்த்தனை செய்வதற்கும் தயக்கம் காட்டிய நிலையில் இந்த காரியத்தை தான் முடித்து தருவதாக அந்த சபையில் அரபி அல்லாத அந்த நபர் கூறினார்.

அதற்கு அடுத்த வாரத்தில் வந்த வெள்ளிக்கிழமையில் அவர் பிரசங்கம் செய்பவர் பிரசங்க மேடைக்கு செல்வதற்கு முன்னால் வேகமாக முன்னால் சென்று அப்பாஸிய கலீபா அல்முஸ்ததி பிஅம்ருல்லாஹ் அவர்களை உயர்த்திப் பேசி அவர்களுக்காக பிரார்த்தனை செய்தார். யாரும் அவரை எதிர்க்கவோ விமர்சனம் செய்யவோ இல்லை. எனவே இது ஒரு தொடக்கமாக மாறிவிட்டது. அதற்கு அடுத்த வாரத்தில் சலாஹுதீன் அவர்கள் பிரசங்கம் செய்யும் மற்றவர்களுக்கும் இதேபோல அப்பாஸிய கலீஃபாக்களை உயர்த்திப் பேசி அவர்களுக்காக பிரார்த்தனை செய்யும்படி உத்தரவிட்டார்.

பிரசங்கம் செய்பவர்கள் இப்போது எந்தவித தயக்கமுமின்றி அப்பாசிய கலீஃபாவுக்காக பிரார்த்தனை செய்தனர். இதன் பின்னர் எகிப்து முழுவதும் இதே போல செய்யும்படி உத்தரவிடப்பட்டது.


## அல் அதீத் அவர்களின் மரணம்

இதற்கிடையில் அல் அதீத் அவர்களின் நோய் தீவிரமானது. அவரின் குடும்பத்தார் இப்போது நடப்பது குறித்து அவரிடம் எதையும் கூறவில்லை. அவருடைய உடல்நிலை தேறி வந்தால் அவரே இதனை தெரிந்து கொள்ளட்டும், அல்லது ஒருவேளை அவர் மரணமடைந்தால் இந்த செய்தியின் காரணமாக அவர் மனவேதனை கொள்ளாமல் மரணம் அடையட்டும் என்று அவர்கள் விட்டு விட்டனர். அல்அதீத் அவர்கள் இந்த செய்தி எல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே ஆஷூரா தினத்தில் மரணமடைந்தார்கள். அவர் தனக்கு பின்னால் யாரையும் ஆட்சியாளராக தேர்வு செய்யாமல் இறந்து போனதன் காரணமாகவும் ஸலாஹூத்தீன் அவர்களின் கீழ் அனைவரும் கட்டுப்பட்டதன் காரணமாகவும் அல் அதீத் வம்சத்தின் ஆட்சி அத்துடன் முடிவடைந்தது.

## மக்கள் அனைவருக்கும் முக்கிய செய்தி

இதன் பின்னர் நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஷிஹாபுதீன் அபூ அல் மாலி அல் முதஹ்ஹர் இப்னு அபீ அஸ்ருன் என்பவரை பாக்தாத் நகருக்கு அனுப்பி ஒரு செய்தியை அனைவருக்கும் முன்னிலையில் படிக்கச் சொன்னார். பாக்தாத் நகர் மட்டுமல்லாமல் இதே செய்தியை நாட்டிலுள்ள அனைத்து நகரங்களுக்கும் நூருத்தீன் அனுப்பி அனைவர் முன்னிலையிலும் அந்த செய்தியை படிக்க சொன்னார்.

அந்த செய்தி பின்வருமாறு, "நாம் இந்த செய்தியை பொதுவாக அனைத்து இஸ்லாமிய பகுதிகளுக்கும் அல்லாஹ் நமக்களித்துள்ள வெற்றிகளையும் அதைத் பெறுவதற்கான வழி முறைகளை முன் வைத்து அனுப்பியுள்ளோம். அப்பாசிய தலைமையை அதன் வழி காட்டுதலை எகிப்தின் நகரங்கள் அனைத்திற்கும் நாம் அங்கீகரித்துள்ளோம். தங்களின் முன்னோர்களை குறித்து தற்பெருமை கொள்வது பெரிய கவுரவமாக கருதப்படுகிறது. எகிப்தை வெற்றி கொள்வதற்கும் அதில் அப்பாசிய கலீஃபாவின் நடைமுறைகளை



ஏற்படுத்துவதற்கும் பல மன்னர்கள் முயற்சித்து விரக்தியடைந்து விட்ட நிலையில் நாம் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளோம். புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே. நாம் வெற்றி கொள்ளும் வரை இது தீயவர்களின் அதிகாரத்தின் கீழ் கடந்த 280 ஆண்டுகளாக இருந்தது. தீயவர்களின் ஆட்சி ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாகவும் உற்சாகத்தின் காரணமாகவும் சிலுவைப்படையினர் இதனை கைப்பற்ற எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அவர்களை தடுக்கவும் விரட்டவும் சக்தியளித்தான். இந்த நாட்டிற்கு எதிராக தற்போது இறை நிராகரிப்பு (குஃப்ர்), புதுமை (பிதாஅத்) என்ற இரண்டு எதிரிகள் கைகோர்த்துள்ளன. இன்னும் எல்லாம் வல்ல இறைவன் அவைகளை கட்டுப்படுத்தவும் இஸ்லாமிய கடமைகளிலிருந்து விலகி நிற்கும் நாத்திகத்திலிருந்தும் புதுமைகளிலிருந்தும் (இறை தூதர் காட்டித்தராத புதிய வழிகளை இஸ்லாத்தின் பெயரால் மேற்கொள்வது) மக்களை பாதுகாக்கவும் நமக்கு சக்தியளித்துள்ளான்".

இந்த செய்தியை அவர் அனுப்பியதற்கு முக்கிய காரணமிருந்தது. ஃபாத்திமி கலீஃபாவின் வழி வந்தவர் என்று சொல்லிக் கொண்ட பனு உபைதின் கோத்திரத்தார் எகிப்தை கைப்பற்றி எண்ணற்ற அநியாயங்களை செய்து கொண்டிருந்தனர். பனு உபைத் ஒரு மந்திரவாதி. உபைதின் தந்தை ஒரு யூதர். அவர் லெவான்தின் ஸலாமியா பகுதியை சேர்ந்தவர். உபைதின் உண்மையான பெயர் சயீத். அவர் அதனை உபைதுல்லாஹ் என்று மாற்றிக் கொண்டு தன்னை அலீ(ரலி) அவர்களின் வாரிசு என்று கூறிக் கொண்டார். மேலும் தன்னை ஒரு ஃபாத்திமித் கலீஃபா என்றும் அழைத்துக் கொண்டார். பின்னர் தன்னைத் தானே மஹ்தி என்றும் அழைத்துக் கொண்டார். அவரை பின் பற்றுபவர்கள் மொராக்கோவில் தனிப்பிரிவாக அல்மஹ்தியா என்று அழைக்கப்பட்டனர்.

பனூ உபைதிற்கு பின்னால் பதினான்கு பேர் ஆட்சி செய்தனர். அதில் மூன்று பேர் ஆப்ரிக்காவிலும், 11 பேர் எகிப்திலும் வாழ்ந்தனர். இவர்கள் உண்மையில் யூத பரம்பரையினராக இருந்தாலும் மந்திரவாதிகள் என்ற போதும் பாமர மக்கள் இவர்களை

ஃபாத்திமிகள் என்றே நம்பினர். இந்த பதினான்கு பேர்களும் ஒருவரை காட்டிலும் மற்றவர் மோசமானவர்களாகவே இருந்தனர். இவர்களுடைய ஆட்சி காலத்தில் உண்மையான முஸ்லிம்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். உமர்(ரலி) அவர்களையும் அபூபக்ர்(ரலி) அவர்களையும் ஆயிஷா(ரலி) அவர்களையும் இழிவுப்படுத்தினர். அவர்களை உயர்த்தி பேசிய முஸ்லிம்களின் தலைகள் வெட்டப்பட்டன. தன்னைத் தானே மஹ்தி என பிரகனப்படுத்திக் கொண்ட இவர்கள் பல நேரங்களில் நபி(ஸல்) அவர்களையும் நிந்தித்தனர்(நவூதுபில்லாஹ்). நேர்வழியில் இருந்த முஸ்லிம்களின் நாவுகளும் வெட்டப் பட்டன. உமையத்கள் ஆட்சியில் 91 வருடங்கள் இருந்தனர். பனூ உபைத்தின் கோத்திரத்தாரின் ஆட்சி 268 ஆண்டுகள் இருந்தன. இவர்கள் உண்மையில் இறை நம்பிக்கையற்றவர்கள். பல்வேறு புதுமையான செயல்களை இஸ்லாத்தின் பெயரால் நிகழ்த்தி வந்தவர்கள்.

ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களின் தலைமையின் கீழ் எகிப்தை தன் வசம் கொண்டு வந்தவுடன் இவர்களின் கொட்டங்கள் அடங்கின. பலர் தங்களின் வீட்டை விட்டு வெளியே வரக்கூட முடியாத நிலை ஏற்பட்டது. பலர் எகிப்தை விட்டே வெளியேறினர். இந்த செய்திகள் நாட்டில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மக்கள் பலர் இந்த செய்தியை பல்வேறு இடங் களுக்கும் கொண்டு சென்றனர். நாடெங்கிலும் இந்த செய்தி பரவலாயிற்று. அதன் காரணமாகவே நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன் செய்தியை நாடெங்கும் படிக்க ஆணை யிட்டார். இதன் காரணமாக தீயவர்களும் அவர்களை பின்பற்றியவர்களும் அடங்கி ஒழுங்காக இருக்க வேண்டியதாயிற்று.

### கட்டளையை மீறினார் ஸலாஹுத்தீன்

ஏற்கனவே நூருத்தீன் அவர்கள் வெள்ளிக்கிழமை பிரசங்கத்தில் அப்பாசிய கலீஃபா குறித்து உயர்த்தி பேசவும் அவருக்காக துவா செய்யவும் கொடுத்த உத்தரவை மக்கள் கிளர்ச்சி செய்வார்களோ என நினைத்து தயக்கம் காட்டி இருந்தார். அதனை ஏற்றுக்கொள்ளாத நூருத்தீன் அவர்கள் தன் உத்தரவை உடனடியாக நிறைவேற்றும்படி சற்று கடுமையாகவே கட்டளையிட்டிருந்தார். அப்போதே அவர் ஸலாஹுத்தீன் மீது சற்று கோபம் கொண்டிருந்தார். தற்போது ஸலாஹுத்தீன் அவர்கள் செய்துவிட்ட இன்னொரு காரியத்தின் காரணமாக கடுமையாக அவர் மீது கோபம் கொண்டார் நூருத்தீன். எந்த அளவிற்கு அவர் கோபம் கொண்டார் என்றால் தன்னுடைய படைகளை எகிப்தை நோக்கி படை நடத்த ஆரம்பித்து விட்டார். அப்படி என்ன தான் செய்தார் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள். இந்த படை எடுப்பிற்கு காரணம் என்ன? இது முஸ்லிம்களுக்கு இடையேயான போராக மாறிவிடுமா? ஸலாஹுத்தீன் அய்யூபி நூருத்தீன் ஸங்கியிடமிருந்து தப்பிப்பாரா?...

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

**அபூ அப்ரஹ்**

## வாசகர் எண்ணங்கள்

வைகறை வெளிச்சம் ஜனவரி 2022 இதழில் “காந்திஜி கொலையில் சாவர்க்கரும் - காங்கிரசும்” கட்டுரை காங்கிரசில் இருந்த சர்தார் படேல் போன்ற இந்துத்துவவாதிகள் சதிகளை மிகச்சரியாக அம்பலப்படுத்தி யுள்ளது. தொடரட்டும் உங்கள் பணி.

அன்புடன்,
செ.நடேசன்,
விஜய் ஆனந்த் பதிப்பகம்,
ஊத்துக்குளி ஆர்.எஸ்.

ஜனாப் மு.குலாம் முஹம்மது அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

மயிலின் தோகை அழகுபோல், அது தோன்றும் ஒவ்வொரு இறகின் அழகுபோல் தங்கள் இதழாம், “வைகறை வெளிச்சம்” மயிலின் சாயலாக எம்மை மயக்குகிறது. அல்ஹம்துலில்லாஹ்! தனி ஒருவராக அல்லது குழுவினரோடு தாங்கள் ஆற்றிவரும், “அன்பகம்” எனும் அரிய சேவைகள் அளப்பரியன. அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானக! ஆமின்.

நன்றி

இ.பக்ருத்தீன்

# இதென்ன இப்படி ஒரு சிலை?






## நமது வீர ஹிஜாபி சகோதரிகளுக்கு அர்ப்பணம்!

உஸ்மானிய்யா பேரரசு வீழ்ந்த பிறகு பிரெஞ்சு படை துருக்கியின் மர்அஷ் என்ற நகரத்திற்குள் நுழைந்தது.அந்த நகரத்தில் பெண்கள் அனைவரும் ஹிஜாப் அணிந்திருந்தனர்.

இதனை கண்ட பிரெஞ்ச் படையின் தலைமை அதிகாரி அந்த பெண்களிடம் "இஸ்லாமிய ஆட்சி நிறைவடைந்து விட்டது.இப்போது நீங்கள் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் உள்ளீர்கள்.எனவே உங்களது ஹிஜாபை கழற்றுங்கள்" என்று கூறினார்.ஹிஜாபை கழற்ற அந்த பெண்கள் மறுத்தனர்.

இதனால் அந்த பிரெஞ்சு கயவன் ஹிஜாபை பிடித்து கழற்ற முயற்சி செய்தான்.அதிகாரிக்கு அருகிலிருந்து இதனை கண்ட சூதுஜு என்ற பால்வியாபாரி,.தன் கண் முன்னே முஸ்லிம் பெண்மணியின் மானம் பறிபோவதை பொறுக்க இயலாமல் அந்த அதிகாரியின் துப்பாக்கியை சட்டென்று உருவி அவனை கொன்று விட்டார்.

இந்த நிகழ்வின் விளைவாக பிரஞ்ச் படையை எதிர்த்து மிகப்பெரிய புரட்சியை மர்கஷ் நகரத்து மக்கள் மேற்கொண்டனர். இதனால் இந்த நகரத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் பிரஞ்சு படைக்கு ஏற்பட்டது.மர்அஷ் மீண்டும் சுதந்திரமான நகரமாக உருமாறியது.

இதன் நினைவாகவே இந்த நகரத்தில் அந்த அதிகாரி ஹிஜாபை இழுப்பது போலவும் அந்த பால் வியாபாரி அந்த அதிகாரியை சுடுவது போலவும் சிலை வைக்கப் பட்டிருக்கிறது.


இந்த பால்வியாபாரியின் நினைவாக சூதுஜு என்ற பெயரில் ஒரு பல்கலைக் கழகமும் இயங்கி வருகிறது.இன்னும் பல்வேறு சமூக சேவை அமைப்புகளுக்கு இந்த நபரது பெயரையே வைத்துள்ளனர்.

المصدر

تاريخ الدولة العثمانية

தமிழில்:

மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி




# ஆரவாரமில்லாமல் ஓர் ஆட்சிக்கவிழ்ப்பு

செய்தி நிறுவனங்கள் மீது வருமான வரி சோதனை, பாரதீய ஜனதா கட்சியின் மீது அரசியல் விமர்சனம் செய்பவர்களின் வீடுகளில் அமலாக்கத்துறை ரெய்டு - முன்பெல்லாம் மக்களின் கவனத்தைப் பெறும் இது போன்ற செய்திகள் இன்றைய காலத்தில் சர்வ சாதாரணமாகி விட்டன. எந்த அளவுக்கு என்றால் அரசியல் லாபத்திற்காக பாதுகாப்பு நிறுவனங்களை ஏவி விட்டு துஷ்பிரயோகம் செய்வதை காணும் மக்கள் இது ஒரு நித்திய நிகழ்வு என்பது போல் கடந்து செல்கின்றனர்.

அது மட்டுமா? காவல் துறையால் நடத்தப்படும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், விளிம்புநிலை சமுதாயங்களின் மீது தினம் தினம் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் இவற்றை அறிந்து வைத்திருப்பவர்களை கூட அதிர்ச்சி அடைய செய்யக் கூடியது ஜோஷி ஜோசபின் The Silent Coup - A History of India's Deep State (ஆரவாரமில்லாமல் ஓர் ஆட்சிக்கவிழ்ப்பு - இந்திய இரகசிய அதிகார அமைப்பின் வரலாறு) என்ற புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் தகவல்கள்.

தீவிரவாத தாக்குதல்களை தடுத்திட இயலாத காவல்துறையினர் தங்களுடைய இயலாமையை மறைப்பதற்காக முஸ்லிம்களை கைது செய்து சித்ரவதை செய்கின்றனர். பொய்யான கதை களங்களை கற்பிக்கின்றனர். வகுப்புவாத மோதல்களை உருவாக்க தீவிரவாத சதித் திட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவை அனைத்தையும் தங்களுடைய அரசியல் தலைவர்களின் ஏவல்படி செயல்படுத்துகின்றனர். ஆனால் எந்த நிலையிலும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நாட்டில் நடக்கும் செயல்களுக்கு பொறுப்பேற்று கொள்வதில்லை என்பதை தன்னுடைய புத்தகத்தில் விவரித்துள்ளார் ஜோசப்.

Scroll.in இணையதளத்திற்கு அவர் கொடுத்த பேட்டியில் பின்வரும் கருத்துக்களை விவாதிக்கிறார்.

ஜனநாயக அமைப்பை ராணுவம் தான் சீர்குலைக்க வேண்டும் என்றில்லை. ராணுவத்தை தவிர ஜனநாயக அமைப்பில் இயங்கும் மற்ற நிறுவனங்கள் அதை செய்ய முடியும். இந்தியாவில் இதுதான் தற்போதைய நிலைமை. இந்தியா ஜனநாயக நாடு என்று நாம் பெருமிதம் கொள்கிறோம். அதில் பெரும்பாலும் உண்மை இல்லை. சாதாரண குடிமக்களின் நிலை என்ன?. அவனிடம் அரசு காட்டும் கெடுபிடிகள் என்ன?. இத்தகைய அமைப்பில் இருந்து கொண்டு பயன் பெறுவதை காட்டிலும் அதனால் பாதிக்கப்படுபவர்கள் இங்கே அதிகம்.

கந்தகார் விமான கடத்தல், 9/11 இரட்டை கோபுர தாக்குதல் சம்பவங்களுக்கு பின் இந்தியாவில் நடைபெற்ற தீவிரவாத செயல்களில் அரசின் பங்கு இருக்கின்றதா என்ற கேள்வியை ஆழ்ந்து சிந்திக்கும்போது நம்முள் எழுப்புகின்றன.

2001 நாடாளுமன்ற தாக்குதலின்போது காஷ்மீர் காவல்துறை அதிகாரி தேவிந்தர் சிங்கின் பெயரும் அடிபட்டது. அப்சல் குருவும் தன்னுடைய வழக்கறிஞருக்கு எழுதிய கடிதத்தில் தேவிந்தர் பெயரை குறிப்பிட்டார். ஐஎஸ்ஐ, பாகிஸ்தான் அல்லது சைனா இவரை பயன்படுத்தியதா அல்லது மாநிலத்தில் இயங்கும் குற்றவாளிகள் இவரை பயன் படுத்தினார்களா என்பது குறித்து எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. (இவர்தான் தீவிரவாதிகளுக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் ஜனவரி 2020 இல் கைது செய்யப்பட்டார்). பீமா கொரேகான் வழக்கில் என்ன நடந்தது? கைது செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர்களின் கம்ப்யூட்டரில் ஏற்கனவே ஆதாரங்கள் ஹேக்கரால் (Hacker) திணிக்கப்பட்டன. அப்படி திணிக்கப்பட்ட கடிதங்கள் மோடியை கொலை செய்ய சதி செய்ததாக கூறின.

இந்தியாவில், குறிப்பாக வட இந்தியாவில் தொடர்ச்சியாக போலி என்கவுண்டர்கள் நடந்துள்ளன. பெரும்பாலும் அவை நரேந்திர மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது நடந்தவை. இதில் அப்பாவிகள் அல்லது சந்தேகிக்கப்படும் குற்றவாளிகள் மாநில அரசின் என்கவுண்டரினால் பலியாகி உள்ளனர் என்பதை தெளிவுபடுத்துகின்றன.

கந்தகார் நிகழ்வுக்குப் பின் தான் இந்தியாவில்

இந்நிலைமை உருவானது என்று கூறிட முடியாது. பஞ்சாபில் போராளிகளுக்கு எதிரான காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளில் இன்றும் பல பஞ்சாபி குடும்பங்கள் நீதி எதிர்பார்த்து நிற்கின்றன. மணிப்பூரிலும் நிலைமை இதுதான். நூற்றுக்கணக்கான மக்களை காவல்துறை கொன்றுள்ளது. 2000 என்கவுண்டர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.

இந்தியாவில் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் போலி என்கவுண்டர்கள் நடத்தப்படுவதற்கு முன் முதலில் பொய்யான கதைகள் கூறப்படும். மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது நடைபெற்ற தொடர்ச்சியான என்கவுண்டர்கள் போலியானவை என்று விசாரணைக்கு பின்பு தெரியவந்தன. எல்லாவற்றுக்கும் மோடியை கொல்ல தீவிரவாதிகள் சதி செய்கின்றனர் என்ற கதையே கூறப்பட்டது. காவல்துறையைக் கொண்டு அப்பாவிகளை கொலை செய்திட முடியும் என்பதை இது காட்டுகின்றன. போலி என்கவுண்டர்கள், பொய்யான கதை களங்கள், போலியான உளவுத் தகவல்கள் இவை இல்லாமல் நமது பாதுகாப்பு நிறுவனங்கள் இயங்குவது இல்லை என்றாகிவிட்டது.

காவல்துறைக்கு தகவல் கொடுப்பவர்களுக்கு (Informants) பெருமளவில் பணங்களை வாரி இறைக்கின்றன காவல் துறையும் உளவுத் துறையும். ஆனால் அவர்களால் தரப்படும் தகவல்களை சரி பார்ப்பது கூட கிடையாது. ஆனால் அவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவில் Deep State எனப்படும் ரகசிய அதிகார அமைப்பு வளர்ந்துள்ளது. மாநில நிர்வாகத்தில் இருந்து கொண்டு, அமலில் இருக்கும் நிர்வாக கட்டமைப்பை அழித்தொழிக்கும் வேலையை செய்யும் ரகசிய அமைப்புகளையே Deep State என்கிறோம்.

என்னதான் ராணுவம் ஜனநாயக அமைப்பின் கீழ் இருந்தாலும் ராணுவத்தை அரசியல் தலைவர்கள் தங்களின் ஆணைக்கு செயல்படும் வண்ணம் ஒரு கட்டமைப்பை உருவாக்கி உள்ளனர். இப்படி இருந்தால் சாலைகளில் பணிகளில் நிற்கும் காவல்துறை அடியாட்களாகவே செயல்படுவர். அரசுக்கு எதிராக விமர்சனங்கள் தொடுப்பவர்களை மவுனம் ஆக்குவதற்கும், அச்சுறுத்துவதற்கும் சிபிஐ, அமலாக்கத் துறை, வருமானவரி துறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஜோஷி ஜோசப்பின் கணக்கின்படி 40 லட்சம் பேர் மேற்கண்ட துறைகளில் இந்தியா முழுவதும் பணிபுரிகின்றனர் இவர்களை கொண்டே எதிர் கருத்துக்கள் உடையவர்களை நசுக்குவதற்கும், சுதந்திரமாக செயல்பட வேண்டிய மீடியாக்களை அச்சுறுத்துவதற்கும், எந்தக் கருத்தை திணிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதை திணிப்பதற்கும் மாநில, மத்திய அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனர்.

ராணுவ பீரங்கிகள் நகர்ப்புறங்களில் நுழைவது, அவர்கள் ஒளிபரப்பு நிலையங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது போன்றவை நடைபெறும் ஆட்சிக் கவிழ்ப்பு முறையிலிருந்தும் வேறுபட்டது ஆரவார மில்லாத ஆட்சிக் கவிழ்ப்பு (Silent Coup). எந்த சலனமும் இல்லாமல் மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அரசியல் புள்ளிகளுக்கு உதவி செய்து ஜனநாயக முறையை நிலைகுலையச் செய்கின்றன. இப்புத்தகத்தில் அனைத்தையும் விளக்க முடியவில்லை. எனினும் அமலாக்கத் துறை, வருமான வரித்துறை அவர்களால் நடத்தப்படும் நடத்தப்பட்ட ரெய்டுகளை ஆய்வு செய்து அதன் இறுதி முடிவுகளையும் ஆய்வு செய்திட நாம் முன்வர வேண்டும். Deep State எனப்படும் ரகசிய அதிகார அமைப்பில் நடைபெறுபவற்றை துணிச்சலான பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் எழுத முன்வர வேண்டும். அந்நிறுவனங்களின் செயல்களுக்கு அவர்களை பொறுப்பேற்க செய்ய வேண்டும். அரசியலில் இருப்பவர்களின் அடியாட்களாக இவர்கள் மாறிவிடக் கூடாது.

மாலேகான் குண்டு வெடிப்பு நடந்த அடுத்த நாள், DNA பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் ஜோஷி ஜோசப் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில், மகாராஷ்டிராவில் ஹிந்துத்துவ பின்புலங்களை கொண்டவர்கள் சிறிய ரக குண்டுகளை தயாரிப்பது உட்பட வன்முறை சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எழுதியுள்ளார். அவர் இப்படி எழுதியதற்கு பின், அவரை ஒரு மூத்த காவல்துறை அதிகாரி நேரில் ஆஜராக கேட்டுள்ளார். பரேலவிகளுக்கும், தியோபந்திகளுக்கும் இடையே பிரச்சினை. அதனால்தான் குண்டுவெடிப்பு நடந்துள்ளது அதற்கான ஆதாரம் உள்ளது என்று ஜோசப்பிடம் அந்த அதிகாரி கூறியுள்ளார். இப்படி ஒரு மூத்த காவல்துறை அதிகாரி வேண்டுமென்றே திசை திருப்ப வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டால், இதற்கு பின்னால் இருந்து இயங்குபவற்றை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது என்று தன் சொந்த அனுபவத்தை பகிர்ந்துள்ளார் ஜோசப்.

மும்பையில் ஆசிரியராக பணிபுரிந்த வாஹித் தீன் முஹம்மது ஷேக் என்பவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை எடுத்துக் கூறி இந்தியாவில் Deep State என்கிற ரகசிய அமைப்பு எப்படியெல்லாம் செயல்படுகிறது என்பதையும் புத்தகத்தில் விளக்கியுள்ளார். (ஆதாரம் : scroll.in <http://scroll.in/>)

- அபூஹாசின்



# ஐமான் ஐக்கிய அமீரக நிறுவனர்

# அப்துல் வஹாப் மறைந்தார்

ஐமான் அப்துல் வஹாப் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்.

அப்துல் வஹாப்,மக்கள் மன்றத்தில் ஐமான் அப்துல் வஹாப் என அறியப்படும் பெருந்தகை!

கல்வித் தொண்டில் அளப்பரிய ஆர்வம் காட்டியவர். வெறும் ஆர்வம் என்பதோடு நின்றுவிடாமல் ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்களை வகுத்து கல்வி நிறுவனங்களை இந்தியாவிலும்,கடல்கடந்தும் நிறுவியவர்.

அவரது கல்வித் தொண்டின் கனியை மக்கள் நுகர்ந்து மகிழ்வதைக் கண்ணாரக் கண்டு நெஞ்சம் நிறைவடைந்தவர்.

தொழுகைக்காக மஸ்ஜிதுகளை நிறுவுவதிலும் அவருடைய ஆர்வமும், அக்கறையும் நிலையானது.

அதேபோல்,பொதுவான சமுதாயப் பணிகளில் யார் யார் உண்மையானவர்கள், சாதிக்கின்றார்கள் என்பதைக் கண்டறிந்து,தன்னால் இயன்ற உருப்படியான உதவிகளைச் செய்தவர். அவர்களால் விளையும் சமுதாயப் பணிகளைப் பார்த்து அகம் மகிழ்பவர்.ஊக்கமும் உற்சாகமும் தருபவர்.

அவருடைய அடுத்த தலைமுறையினர் ஆரவாரமில்லாமல் அதைத் தொடருகின்றார்கள். சமுதாயத்தின் ஒரு பெரிய புரவலரை இழந்தோம். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் அவர்களுக்கு நிரம்ப நற்கூலிகளை நல்கிடுவானாக! சுவர்க்கத்தில் உயர்ந்த இடங்களைத் தருவானாக!

தமிழ்நாட்டில் ஆயப்பாடி என்ற ஊரில் பிறந்து ஆரம்பக் கல்வியை உள்ளூரில் படித்து பிறகு உயர்நிலை பள்ளி கல்வியை ஜமால் முகமது கல்லூரியில் படித்து அதன் பிறகு பட்டப்படிப்பு அழகப்பா பல்கலைக்கழகத்தில் படித்தவர்.

இந்தியன் ஏர்லைன்ஸில் இந்தியாவில் சிறிது காலம் வேலை செய்து பின் பகரைன் கல்ப் ஏர் நிறுவனத்தில் 1978 வேலைக்கு சேர்ந்தார் .

பின் படிப்படியாக முன்னேறி அபுதாபி இன்வெஸ்ட்மென்ட் அத்தாரிட்டியில் பணியில் சேர்ந்தார்.

இவர் ஐக்கிய அரபு அமீரகத்தில் பணியில் இருந்தபோது தமிழகத்திலிருந்து பலர் அந்நாட்டில் வருவதற்கு உதவியாகவும் இன்னும் அங்கு வரும் நபர்களுக்கு அரசு சம்பந்தப்பட்ட அலுவலக உதவியையும் செய்து வந்தவர்.

இவர் செய்த கல்வி தொண்டு முஸ்லிம் சமூகத்திற்கு அளப்பரியது என்றால் மிகையாகாது.

ஜமால் முகம்மது முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளராக கிட்டத்தட்ட 35 ஆண்டு இருந்தவர். அந்த நேரத்தில் அவர் படித்த ஜமால் முகமது கல்லூரிக்கு வெளிநாட்டு உதவியை பெற்று தந்ததோடு பல மாணவர்கள் கேம்பஸ் தேர்வில் வெளிநாட்டு வேலை பெற காரணமானவர்.

2002ல் ஐமான் மகளிர் கல்லூரி திருச்சியில் இவர் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஆயிரத்து 500 பெண்கள் கல்லூரி படிப்பை பெறுகின்றனர் என்றால் அதற்கு இவர்தான் ஆணிவேர்.

மேலும் அரபி தமிழ் குர்ஆன் ஆடியோ முதன்முதலாக தமிழகத்தில் வெளியிட்டது இவரது அமைப்புதான். அப்துல் பாசித் தமிழில் குரல் தந்தவர். திருவை அப்துர்ரஹ்மான் ஆவார்.

இவர் வெளிநாட்டில் பணியாற்றியபோது வேலை தேடி வந்தவர்களுக்கு வேலை வாங்கித் தந்ததோடு அவர்களுக்கு தகுந்த ஆலோசனை தந்தவர். பின்னும் அங்குள்ள தமிழர்களின் குறைகள் அரசுக்கு எடுத்துச் சொல்லுவதில் பாலமாக இருந்தவர்.

இன்னும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் எதிர்ப்புறத்தில் பள்ளிவாசல் ஒன்று நிறுவியதோடு அங்கு படிக்கும் மாணவர்களுக்கு விடுதி அமைத்துத்தந்தவர்.

இன்று அந்தப் பள்ளிவாசலில் அண்ணா பல்கலைக்கழகத்தை சேர்ந்த முஸ்லிம் மாணவர்களும், தொழுகைக்காக வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமுதாயம் கல்வி ஒன்று பெறுவதன் மூலமே முன்னேற்றமடையும் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டு அதற்காக அரும்பாடு பட்டவர் பல ஊர்களில் கல்வி நிறுவனங்கள் உருவாவதற்கு ஆலோசனை தந்தவர்.

வசதி அற்ற இஸ்லாமிய பெண் பிள்ளைகள் கல்லூரிப்படிப்பை பெறுவதற்கு இவருடைய ஆய்வு நிறுவனம் பெரும் உதவிகளை செய்துள்ளது அது இன்றும் தொடர்கிறது.

இவருக்கு மூன்று மகள்கள் அதில் ஒருவர் மருத்துவர் அபுதாபியில் பணியாற்றுகிறார் ஒரு பொறியியல் பட்டதாரி மற்றொருவர் பட்டதாரி.


இவரது மகன் பொறியியல் பட்டதாரி தற்போது பிரான்ஸ் நாட்டில் பணிபுரிகிறார்.

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**






இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# துனீஸியாவில் ஆட்சி மாற்றம்

இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு மரண தண்டனை தந்ததன் மூலம் மன நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தார் ஹபீப் போர்கிபா.

இந்த நிம்மதி சில மணி நேரங்களே நீடித்தது. துனீஸியாவில் இஸ்லாமிய இயக்கத்தவர்களுக்கு மரண தண்டனை தரப்பட்டுள்ளது என்ற செய்தி அறிந்ததும் உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் கொதித்தெழுந்தன. துனீஸிய இஸ்லாமிய வீரர்களை விடுதலை செய்யக்கோரி ஹபீப் போர்கிபாவுக்குத் தந்திகள் பறந்தன.

"துனீஸிய இஸ்லாமிய இயக்கத்தவர்களின் அறிவைக் கொண்டு பலன்பெற விரும்ப வில்லையென்றால் அவர்களை எங்கள் நாட்டுக்கு அனுப்பிவிடுங்கள்.. நாங்கள் அவர்களை பயன்படுத்திக் கொள்வோம்" என முஸ்லிம் நாடுகள் பல செய்தியனுப்பின. இப்படி ஆயிரக்கணக்கில் பறந்த தந்திகள் ஹபீப் போர்கிபாவின் நிம்மதியைக் கலைத்தன.

ஆயினும் இதுபோன்ற தந்திகள், வேண்டு கோள்கள் வரும் என்பதை அவர் ஓரளவுக்கு எதிர்பார்க்கவே செய்தார். ஆகவே இந்தத் தந்திகளால் அவர் அவ்வளவாகக் கதிகலங்கிப் போகவில்லை. இந்தத் தந்திகளைப் புறக்கணித்துவிட்டார். ஆனால் இந்தத் தந்திகளோடு இன்னும் சில தந்திகள் வந்தன. அந்தத் தந்திகளை அவ்வளவு எளிதாக அவரால் புறக்கணித்திட முடியவில்லை. அந்தத் தந்திகள், இன்னும் சில நாடுகளிலிருந்து வந்த தூதுவர்கள், இவையெல்லாவற்றின் சுருக்கம் இதுதான்:

"இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களைத் தூக்கில் போட்டு தியாகிகளாக்கிவிட வேண்டாம். அப்படிச் செய்தால் இந்த இஸ்லாமிய விழிப்பும், எழுச்சியும் உலகெங்கிலும் வேகமாகப் பரவத் தொடங்கிவிடும்!"

எகிப்திலே ஆட்சி செய்த ஏகாதிபத்திய அடிவருடிகள் இக்வானுல் முஸ்லிமூன் எனும் இஸ்லாமிய இயக்கத்தவர்களை 1960-1970களில் தூக்கிலே தொங்கவிட்டு எகிப்து நாட்டில் இஸ்லாமிய இயக்கத்தை அழித்துவிடலாம் எனத்திட்டம் தீட்டினார்கள். அதற்கேற்ப மாபெரும் இஸ்லாமிய அறிஞர்களான செய்யது குதுப், அப்துல் காதிர் அவ்தா ஆகியோரை கொடூரமான முறையில் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

இதன் பிறகும் எகிப்தில் இஸ்லாமிய தீபம் அணைந்துவிடவில்லை. கொழுந்துவிட்டு எரிந்தது. இன்று உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய வீரர்கள் இஸ்லாத்திற்காக உயிர் தந்த இக்வான்களின் பெயரைக் கேட்டாலே புதுத்தெம்பும் புது உணர்வும் பெறுகின்றனர்.

இதேபோல் துனீஸிய இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களைத் தூக்கிலே போட்டால் பல கோடி இஸ்லாமிய இளைஞர்கள் ஊட்டம் பெறுவார்கள். உத்வேகமடைவார்கள். இஸ்லாமிய எழுச்சி அலை உலகின் பல பாகங்களை ஈர்க்கத் தொடங்கிவிடும். ஆகவே இஸ்லாமிய வாதிகளைத் தூக்கிலே போடுவது பிரச்னையைத் தீர்த்துவிடாது என்று ஹபீப் போர்கிபாவுக்கு புரியும்படி எடுத்துச் சொல்லப்பட்டது.

இதற்கிடையில் துனீஸிய மக்கள் ஒன்று திரண்டு ஒரே அணியில் நின்று "இஸ்லாம், இஸ்லாம்" என குரல் கொடுக்க ஆரம்பித்தனர்.

இது கண்டு அதிர்ந்து போன எதிர்கட்சிகள் ஓடோடி சென்று ஹபீப் போர்கிபாவிடம் ஒரு விண்ணப்பத்தைத் தந்தனர். அதில் இஸ்லாமிய இயக்கவாதிகளை இஸ்லாத்திற்காக உயிரைத் தந்த தியாகிகளாக ஆக்கிவிடவேண்டாம். அவர்களை ஷஹீத்களாக்கினால் துனீஸியா, இஸ்லாமியமயமாவதை யாராலும் தடுக்க முடியாது என எச்சரிக்கை செய்தனர்.

துனீஸிய எதிர்கட்சிகளில் ஒன்றான Socialist Democratic Party மக்களுடமை ஜனநாயக கட்சியின் தலைவர் அஹமத் மெஸ்ஷரி, பிரான்சுக்கே ஓடி பிரான்சு அதிபரிடம் முறையிட்டார்.

பிரான்ஸ் அதிபர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இஸ்லாமியவாதிகளைத் தியாகிகளாக்கும் காரியத்தைத் தடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஹபீப் போர்கிபா செய்வதறியாமல் திணறினார்.

பக்கத்துநாடான அல்ஜீரியாவும் இதேபோல் முறையிட்டது. அவர்களை ஷஹீத் ஆக்கினால் அல்ஜீரியாவும் இஸ்லாமிய மயமாகிவிடும் என்று ஒப்பாரி வைத்தது.

இதற்கிடையில் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்த உத்மான் பின் மஹ்மூத் என்பவர் ஷஹீதாக்கப்பட்டுவிட்டார். மக்களும், மாணவர்களும் வெகுண்டெழுந்தனர். வேறு வழியின்றி இஸ்லாமியவாதிகளுக்குத் தரப்பட்ட மரண தண்டனை, கடின உழைப்புடன் கூடிய ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. ஆனாலும் கொந்தளித்து எழுந்த மக்கள் பிரளயத்தை ஆட்சியாளர்களால் சமாளித்திட இயலவில்லை.

கொதித்துத் திரண்டு வரும் உலையில் சிறிது நீரை ஊற்றித் தணிப்பதைப்போல், ஆட்சி மாற்றம் என்றொரு நாடகத்தை அரங்கேற்றினர்.

ஹபீப் போர்கிபாவுக்கு பைத்தியம் என அறிவித்துவிட்டு பிரதம அமைச்சர் ஜெய்னுல் ஆப்தீன் பென்அலீ ஆட்சியைப் பிடித்தார். ஜனாதிபதியானார்.

ஆட்சி மாற்றம் வந்ததும் பென் அலீ எங்கே இஸ்லாமியவாதிகளை வளரவிட்டு விடுவாரோ என்று எல்லா நாட்டுப் பத்திரிகைகளும் ஒப்பாரி வைத்து தலையங்கங்கள் தீட்டின.

இந்தியாவில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு தனது தலையங்கத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றது:

"...It is in domestic affairs that Mr. Ben Ali's policies will be watched closely. He is in for instance reported to be inclined to be less harsh towards the Islamic fundamentalists than Mr. Bourguibha. It remains to be seen what lattitude Mr. Ben Ali will give them to take part legally in Tunisian politics. Even if he adopts a conciliatory ttitude towards them purely for tactical reasons he cannot rule out the possiblity of their trying to put the clock back by agitating for the abolition of the extensive social reforms which have distinguished Tunisias from most of the Islamic countries."

(Indian Express, Nov 11, 1987)

அதாவது,

“உள்நாட்டு விவகாரங்களில்தான் பென் அலீ அவர்களின் அணுகுமுறைகளை உன்னிப்பாகக் கவனித்திட வேண்டும். எடுத்துக்காட்டாக அவர் (பென்அலீ) இஸ்லாமிய இயக்கத்தவர் களிடம் ஹபீப் போர்கிபாவைவிட கடினக் குறைவாக நடந்து கொள்வதாகக் கூறப்படுகின்றது. துனீஸியாவின் அரசியலில் இஸ்லாமியவாதிகள் சட்டப்படி பங்கெடுத்திட அனுமதிப்பார் என்பதைக் கண்டுதான் சொல்லவேண்டும். இராஜதந்திரம் என்ற அடிப்படையில் அவர் (பென் அலீ) இஸ்லாமிய வாதிகளிடம் ஒரு மிதமான போக்கை மேற்கொண்டாலும், அவர்கள் (இஸ்லாமிய இயக்கத்தவர்கள்) துனீஸியாவை ஏனைய இஸ்லாமிய நாடுகளிலிருந்து தனியாக காட்டுகின்ற அளவில் ஹபீப் போர்கிபா மேற்கொண்ட ஏராளமான சீர்திருத்தங்களை அழித்துவிட முடியும்...”

எக்ஸ்பிரஸ் ஏடு குறிப்பிடுகின்ற துனீஸியாவை ஏனைய நாடுகளிலிருந்து பிரித்துக் காட்டுகின்ற ஏராளமான சீர்திருத்தங்கள் எவை தெரியுமா?

பர்தா அணிந்து வந்த பெண்களின் பர்தாவைக் கிழித்தது. தாடி வைத்திருந்தவர்களின் தாடியைச் சிரைத்தது; பலதார மணத்தைத் தடை செய்தது; நோன்பிருக்க வேண்டாம் என அறிவுரை கூறியது இவைதான்.

இவையெல்லாம் முஸ்லிம் நாடுகளில் இன்னும் நடைபெறவில்லை. ஆகவே துனீஸியாவில் ஹபீப் போர்கிபா கொண்டுவந்த “சீர்திருத்தங்கள்” துனீஸியாவை ஏனைய நாடுகளிலிருந்து பிரித்துக் காட்டிவிட்டது.

எக்ஸ்பிரஸ் ஏடு காட்டும் ஆதங்கத்திலிருந்து துனீஸிய இஸ்லாமிய இயக்கம், துனீஸியாவை மட்டுமல்ல, உலகையே ஓர் உலுக்கு உலுக்கியது என்பதை அறியலாம்.

**துனீஸியாவை உலுக்கிய**

**இஸ்லாமிய இயக்கம் - நூலிலிருந்து**



# இங்கிலாந்தின் ராணியே கண்டு அஞ்சிய முஸ்லிம் விதவை பெண்!

இஸ்லாம் பரவிய பண்டைய இந்தோனேசிய ராஜ்ஜியங்களில் முதன்மையானது ஆச்சே என்ற நகரமாகும், இந்த நகரமானது உஸ்மானிய்யா பேரரசுடன் வலுவான உறவை கொண்டிருந்தது, ஆனால் போர்த்துகீசியர்களின் வணிகக் கட்டுப்பாட்டினாலும், டச்சு ஆக்கிரமிப்பின் தொடர்ச்சியான முயற்சி களினாலும் இந்த நகரம் தாக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.

இந்த நகரத்தில் மலஹயாதி என்ற முஸ்லிம் பெண் வாழ்ந்து வந்தாள்.இவளது தந்தை ஓர் கப்பற்படை அதிகாரி.இவளுக்கும் கப்பற்படை அதிகாரியாக வேண்டும் என்று ஆசை. பைத்துல் முகத்தஸ் இராணுவ கூடத்தில் கல்வி பயின்றாள்.

பெரும்பாலும் உஸ்மானிய்யா பேரரசின் இராணுவ வீரர்களே இங்கே பயிற்சியாளர்களாக இருந்தனர்.இங்கே கல்வி கற்ற பின்பு திருமணமும் செய்து கொண்டாள்.

ஆனால் கணவனோடு ஒன்றாக வாழ்வது நீண்ட காலம் நீடிக்கவில்லை. சுமத்ரா தீவில் உள்ள ஹரோ விரிகுடாவில் போர்த்துகீசிய படையெடுப்பாளர்களுக்கு எதிரான கடற்படைப் போரில், ஆச்சே படைகள் வெற்றி பெற்ற போதிலும்,ஆச்சே நகரம் தனது ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்தது, அவர்களில் மலாஹதியின் கணவரும் இருந்தார்.

மனைவி தன் கணவனை நினைத்து வருந்தினாள், ஆனால் அவள் சோகம் அவளைத் தோற்கடிக்க அனுமதிக்கவில்லை, இதற்கு தக்க பதிலடியை கொடுத்தே ஆகவேண்டும் என்று உறுதி ஏற்றாள்,தன்னைப் போல கணவனை இழந்த பெண்களை எல்லாம் ஒன்று திரட்டினாள்.பிறகு மன்னரிடம் சென்று, போர்த்துகீசிய நாட்டை எதிர்த்து நாங்கள் போர் செய்ய விரும்புகிறோம் என்றும்,அதற்கு பிரம்மாண்டமான ஒரு போர் துறைமுகம் நிறுவப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தாள்.மன்னரும் அனுமதியளித்தார். விதவை பெண்கள் எதிரிப்படையை எதிர்க்க ஆயத்தமானார்கள்.

பிரம்மாண்டமான துறைமுகம் நிறுவப் பட்டது. அதற்கான தலைமை அதிகாரியாக பொறுப்பேற்றது வீர மங்கை மலஹயாதி.

பீரங்கிகளும் நவீன ஆயுதங்களும் பொருத்தப்பட்ட 100 பெரிய போர்க் கப்பல்களைக் கொண்ட ஒரு கடற்படையை நிறுவினாள், இவை அனைத்தையும் சுமார் 5ஆண்டுகளில் நிறைவுசெய்தாள். பின்னர் பீரங்கிகளால் ஆயுதம் ஏந்திய கோபுரங்களைக் கொண்ட ஒரு பெரிய கோட்டையைக் கட்டினாள்.

கடற்படை, கோட்டை, படைகளை இரட்டிப்பாக்குதல், ஆயுதங்களை வழங்குதல் மற்றும் தொடர்ச்சியான பயிற்சி ஆகியவை இந்தோனேசியா மற்றும் அதனை சுற்றியுள்ள நாடுகளிடையே பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

முதல் போர் கப்பலுக்கு "கடலை அச்சுறுத்திய தாரிக் பின் ஜியாத் என்று பெயரிடப்பட்டது, இரண்டாவது "கடலின் இடி உக்பா பின் நஃபி".

மலஹயாதி தொடர் கடற்படை போர்களுக்கு தலைமை தாங்கினாள். போர்ச்சுகல், இங்கிலாந்து, சீனா ஆகிய நாடுகளின் கடற்படைகள் மற்றும் படைகளை பழிவாங்கினாள், அனைவரையும் தனது கடற் படைக்கு மண்டியிடும்படி கட்டாயப் படுத்தினாள். எந்தளவிற்கு என்றால் இங்கிலாந்து மகாராணி தங்களது நாட்டின் கப்பல்களை ஆச்சே துறைமுகத்தை கடக்க இந்த மகாராணியின் அனுமதியை கோரி கடிதத்தோடு ஆறு யானைகளையும் அனுப்பிவைத்தார்.

அந்த கடிதம் தங்கக் கிண்ணத்தில் மிகச்சிறந்த பட்டுப் போர்வையால் மூடப்பட்டிருந்தது...

ஆறு யானைகளில் மிகப் பெரிய யானையின் முதுகில் ஒரு கருஞ்சிவப்பு வெல்வெட் சோபாவின் மேல் அந்த கிண்ணம் வைக்கப்பட்டிருந்தது.

தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

المصدر:

الجزيرة نت

# மக்களின் குறையை நிறைவுபடுத்திய கலீஃபா உமர்(ரலி) ஆட்சி



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

நபிகள் நாயகம்(ஸல்) ஆட்சிக்குப்பின் அபூபக்ர்(ரலி) கலீபாவாக பொறுப்பு ஏற்று, அன்னார் சுகவீனமுற்று அடுத்து உமரை கலீபாக தேர்வு செய்ய தோழர்களிடம் பரித்துரை செய்தார்கள். தோழர்கள் இது சம்பந்தமாக கருத்து பரிமாறி உமர்(ரலி)யை கலீபாவாக தேர்வு செய்தனர். தேர்வுக்குப்பின் மக்களிடம் பை அத் செய்ய வைக்கப்படனர்.

இஸ்லாமிய ஆட்சித் தலைவர், தலைவர்களால் தேர்வு செய்யப்பட்டு அவர் மக்களிடம் சம்மதம் பெற்று கலீபா பொறுப்பு ஏற்பார். ஒரு நாட்டில் இம்முறையான ஆட்சித்தலைவர் தேர்வு செய்யப்படல் நல்ல ஒழுக்கசீலமான கல்விஞானமிக்க அறிவு நிறைந்த ஆட்சியாளரை நாட்டிற்கு தரும் முறையாகும். இம்மாதிரி கல்வி ஞானமிக்க ஆட்சியாளர் ஒரு நாட்டிற்கு கிடைத்தால் நாடு சுபிட்சம் பெறும்.நாடு அமைதி பூங்காவாகவும் திகழும்.

உலகில் இஸ்லாமிய நாடுகளில் அனேகமாக முடியாட்சி தான் நடைபெறுகிறது. ஒரு சில நாடுகளில் ஜனநாயக ஆட்சி நடைபெற்றாலும் உறுதியற்ற நிலை. அகில உலக இஸ்லாமிய மாநாட்டில் சவூதி அரசருக்கு முன்னால் நம் இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி மௌலானா முகம்மதலி ஜௌஹர் முடியாச்சிக்கும், பிர் அவ்ன் தன்மைக்கும் முடிவு கட்டவே இஸ்லாம் வந்தது என முழங்கிய முழக்கம் உத்வேகமிக்கது.

அமெரிக்க நாட்டு அறிஞர் ஒருவர், உலகில் தாக்கத்தை உண்டாக்கிய 100 பேர் பற்றிய The 100 என்ற நூல் 1977-ம் ஆண்டு வெளிவந்தது. அதில் 51வது -நபராக கலீபா உமர் பற்றி குறிப்பிடும் பொழுது உமருடைய ஆட்சியில் பெருவாரியாக அரபுக்களாக இருந்த முஸ்லிம் ஆட்சியாளருக்கு முஸ்லிமல்லாத குடிமக்கள் ஜிஸ்யா (பாதுகாப்பு வரி) செலுத்த வேண்டும். மற்றபடி அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வித தலையீடுமின்றி அவர்களை அமைதியாக இருக்கவிட்டுவிட வேண்டும். குறிப்பாக அவர்களை கட்டாயப்படுத்தி இஸ்லாத்தில் சேருமாறு செய்யக் கூடாதென்றும் அன்னார் வழிச் செய்தார். (இதிலிருந்து அரபுக்களின் போர் வெற்றிகளுக்கு தேசிய விரிவாக்கம் இருந்ததே தவிர அவை மதம்பரப்பும் புனிதப் போர் அல்ல என்பது மேற்கண்டவற்றிலிருந்து தெளிவாகும் எனக் குறிப்பிட்டிருப்பதில் உமர்(ரலி) ஆட்சியின் மாட்சிமை புரியும்.)

19-7-1939 ஹரிஜன் பத்திரிகையில் தேசப்பிதா காந்தி,அபூபக்ர், உமர் ஆகியோர்களின் மேற்கோள்களை எடுத்துக்காட்ட எனக்கு அனுமதி வழங்குவீர்களாக. இராமன், கிருஷ்ணன் என்னும் பெயர்களாவது வரலாறு தோன்றாத ஆதிகாலத்திலுள்ளவை. வரலாறு வருணிக்கும் மனிதர்ககளைப் பற்றி நான் உதாரணமாக எடுத்து உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன். ரானா பிரதாபும், சிவாஜியும் மிகுந்த

எளிமையான வாழ்க்கையே பின்பற்றி வந்தார்கள். ஆனால் அவர்களுடைய கையில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டபோது என்ன செய்தார்கள்? என்ற பிரச்சினையில் கருத்து வேறு எழவே செய்கிறது. திருநபி (ஸல்) அவர்களும் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும் சம்மந்தப்பட்டமட்டில் அவர்களுடைய விசயத்தில் எப்படிப்பட்ட கருத்து வேற்றுமைக்கும் இடம் இல்லை.அவர்களுடைய காலடியின் கீழ் உலகச் செல்வம் குவிந்து கிடந்தன. அவர்கள் எப்படிப்பட்ட சிரமங்களை சகித்தார்களோ அந்த வகையில் உலக வரலாற்றிலேயே அவர்களுக்கு ஈடான மற்றொருவர் கிடைப்பது மிக மிக அரிது.

ஹஸ்ரத் உமர் அவர்களோ தமது ஆட்சியின் கீழ் உள்ள அதிகாரிகள், மிகத் தொலைவிலிருந்த மாகாண கவர்னர்கள் ஆகியோருக்கு அறிவித்த அரசு சுற்றறிக்கை படி அவர்கள் முரட்டு ஆடைகள், அணியவேண்டும். வாற்கோதுமை, ரொட்டி போன்ற எளிய உணவு வகைகளை உண்ண வேண்டும். எவ்வித ஆடம்பர வாழ்க்கையிலும் ஈடுபடக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக்கடுமையான கட்டளைகளால் மாகாண கவர்னர்கள்,அதிகாரிகள் சகிக்க முடியாத சங்கடங்களை தாங்க வேண்டியது ஏற்பட்டது. உமர் தம்மட்டும் எளிமையான வாழ்வு வாழவில்லை. அவர் தம் கீழ் இருந்த மாகாண கவர்னர்கள் அத்தனை அதிகாரிகளையும் ஏழ்மைமிக்க வாழ்க்கை கடைபிடித்து ஒழுகும்படி செய்தார் எனக் குறிப்பிட்டார். மேலும் நம்நாடு சுதந்திரம் பெற்றால் உமர் (ரலி) உடைய ஆட்சியை நிறுவுவேன் என ஒரு பொழுது காந்திஜி சொன்னாரென்றால் உமர் (ரலி) ஆட்சியின் மாட்சிமை நன்கு விளங்கும்.

அரசியல் நிர்வாகத்திற்கு கலீபாவே தலைவர், கவர்னர்களும் சாதாரண பிரஜைக்குமுரிய உரிமைகளையே பெற்றிருந்தார்கள். தனியாக எந்த உரிமையும், சலுகைகளோ கிடையாது. நாட்டிலுள்ள ஆணும் பெண்ணும் கலீபா,கவர்னர்கள் உயர் அதிகாரிகள் பற்றி வழக்குமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

உமரே! நீர் இறைவனுக்கு பயப்படும்! என்று ஒரு மனிதன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். அங்கிருந்தோர்க்கு இதனால் கோபம் வந்தது. உமர் அவரை தடுக்காமல் தடுக்க வேண்டாம்! சொல்லட்டும்! இவ்வாறு எச்சரிக்கை செய்யும் மக்கள் இருக்கும்வரை ஆட்சி பீடம் இருப்போர் தவறிழைக்க மாட்டார்கள் என பொறுமையோடு பதில் சொன்னார்கள். ஒரு சமயம் பள்ளியில் உபதேசம் செய்து கொண்டிருந்த உமர் (ரலி) யைப் பார்த்து ஒருவர் வாளை உருவி நீங்கள் நேர் வழி நடக்காவிட்டால் இந்த வாள் மூலம் நாங்கள் நேர்வழிப் படுத்துவோம் என்றார். இது கேட்டு உமர் (ரலி) கோபப்படாமல் நான் பிழையாக செல்லுங்கால் என்னை திருத்துகின்ற மக்களும் இருக்கின்றனர். அதற்காக நான் இறைவனை புகழ்கிறேன் என்றார்கள். உமர் (ரலி) ஆட்சியில் கருத்து சுதந்திரம்,இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், கெடுப்பாரிலானும் கெடும் என்ற வகையில் இருந்ததென தெரிகிறது. மக்களாட்சி பற்றி பேசும் நாம், பேச்சு எழுத்து போன்றவற்றில் ஆட்சி நடத்துவோர் குறையைச் சுட்டிக் காட்டினால் நீதிமன்றம் நாடும் செயல் இன்று பார்க்க முடிகிறது.

ஓர் ஆட்சி நாட்டு மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் ஆட்சியாக இருந்தால் அது தான் உண்மையான மக்களாட்சியாகும். அம்மாதிரி உமர் (ரலி) ஆட்சி காலத்தில் மக்களின் உண்மையான குறைகளை அறிய இரவு பகல் மாறுவேடத்தில் சுற்றி வருவார்கள். அவ்வாறு அவர்கள் சுற்றிவரும் பொழுது ஒருமுறை தள்ளாத வயோதிகர் கடைத் தெருவில் பிச்சை கேட்டு அலைந்து கொண்டிருந்தார். அவ்வழியாகச் சென்ற கலீபா உமர் (ரலி) வயோதிகரைப் பார்த்து தாங்கள் என்ன வேலை செய்கின்றீர்! என்று கேட்டார்கள்.வயோதிக காலத்தில் பசித்தணிக்க இது தவிர வேறு வழி இல்லை என்றார். அக்கிழவர் ஓர் யூதர், மதீனாவாசி. இந்தப்பதிலைக் கேட்ட மனித நேயமிக்க கலீபா உமர் (ரலி) அவர்கள் பெரியவரே! நாங்கள் உமக்கு நியாயம் வழங்காத காரணம் உம் நிலை இவ்வாறாகி விட்டது. நீர் வாலிபராக வலிவு மிக்கவராக இருந்தபோது உம்மிடம் ஜிஸ்யாவரி வசூலித்தோம். இன்று நீர் வயோதிகத்தால் தள்ளாடும் நிலை ஏற்பட்டுள்ளது. உம்மை நாங்கள் கேட்பாரற்று விட்டு விட்டோம் என்று கூறியவாறு அம்முதியவரை கையைப் பிடித்து தம்முடன் அழைத்து, தமது இல்லம் வந்து தமக்காக தயார் செய்து வைத்திருந்த உணவை அவருக்குக் கொடுத்து அருந்தச் செய்தார்கள். பிறகு அரசு நிதி காப்பாளரை அழைத்து இவருக்கும் இவர் போன்ற திக்கற்றவர்கட்கும் இவர்கள் குடும்பத்திற்கும் வயோதிக கால நிதி உதவி,அரசு நிதியிலிருந்து வழங்கும்படி கலீபா உமர்(ரலி) உத்தரவிட்டார்கள். இது தான் வயோதிக கால முதியோர் உதவிக்கு முன்னோடி திட்டமென பார்க்கிறோம்.

ஒருமுறை கலீபா உமர்(ரலி) மதீனா நகரை இரவு நேரம் சுற்றி வருகிறார்கள். அச்சமயம் கலீபா பார்வை ஒரு சிறுமி மீது படுகிறது. அச்சிறுமி பசிதாளாமல் எழுந்து நிற்க கூட முடியாமல் மயங்கி கீழே வீழ்ந்து கொண்டிருக்கிறாள். கலீபா கவலையோடு இது யாருடைய குழந்தை எனக் கேட்டார்கள் அருகே இருந்த மகன் அப்துல்லா ரலியிடம். "அமீறுல் முஹ்மினீன்! தாங்கள் இந்த சிறுமியை இனங்கண்டு கொள்ளவில்லையா? என்று வினவினர். இல்லையே! என்றார். கலீபா இது உங்களுடைய மகன் அப்துல்லாவின் பிள்ளை என்றார்கள். ஏன்! இக்குழந்தை மயக்க நிலையில் இருக்கிறதென கேட்க நீங்கள் தான் எங்களைக் கேட்பதில்லையே? என்று கலீபா மைந்தர் முறையிட்டார். உடனே கலீபா, "மகனே! இறைவன் மீது ஆணையாக! மற்ற முஸ்லிம் பிரஜைகளுக்கு எந்தப்பங்கு கிடைக்கிறதோ அதற்கு

மேல் அதிகமாக உங்களுக்ககென விசேச சலுகைகள் செய்ய முடியவில்லை உமக்கு போதுமா? போதாதா? என்பது பிரச்சினையல்ல. அல்லாஹ்வின் திருவேதம் எனக்கும் உங்களுக்கும் மத்தியில் எதைச் சொல்கிறதோ அதுப்படி செயலாற்றுகிறேன் என்றார்கள். ஆட்சி என்று வரும்போது நாட்டு மக்களைப் போன்றே தம் குடும்பத்தாரையும் பாகுபாடின்றி நடத்திய பார்வை என்றும் ஆள்வோர் கடைபிடிக்க வேண்டிய முன்மாதிரியாகும்.

ஒருவர்த்தக குழு மதீனா நகரில் வந்திறங்கியது. அக்குழுவில் பெண்கள், பிள்ளைகளும் இருந்தனர். இவர்கள் டெண்டில் தங்கினர். இதனைக் கண்ணுற்ற கலீபா உமர் (ரலி) தன் தோழர் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) யிடம் இவ்வர்த்தக குழுவை நாம் இருவரும் நபில் தொழுதவாறு காவல் புரிய தங்களுக்கு சம்மதமா? எனக் கேட்டு இருவரும் காவல் புரிந்தனர்.ஒரு குழந்தை அழுகுரல் கேட்டு கலீபாவும், தோழரும் நிலை கொள்ள முடியவில்லை. அழும் குழந்தைப்பற்றி கலீபா, குழந்தையின் தாயிடம் பெண்ணே! குழந்தையை ஏன்? அழுக விடுகிறாய் சமாதானப்படுத்து. அல்லாஹ்வை அஞ்சு எனக் கூறி விட்டு திரும்பினார்கள். தொடர்ந்து குழந்தை அழுது கொண்டிருந்ததால் இக்குழந்தை அழுகுரலை நிறுத்த நீ முயற்சிக்கவில்லையே எனக் குழந்தையின் தாயிடம் கலீபா கடிந்து சொன்னார்கள். கலீபா என்பதை அறியாத குழந்தையின் தாய் இக்குழந்தைக்கு பால்குடி மறக்கச் செய்கிறேன். குழந்தைக்கு எத்தனை வயதென? கேட்டார்கள் கலீபா. ஏழு அல்லது எட்டு மாத குழந்தையென குழந்தையின் தாய் கூறினாள். ஏன்? பால்குடி மறக்கச் செய்கிறாயென கலீபா கேள்வி கேட்டார்கள் கலீபா உமர்(ரலி). பால் குடி மறந்த குழந்தைகளுக்குத்தான் அரசு சார்பாக நிதி உதவி செய்யப்படுகிறது. அதனால் தான் பால் குடி மறக்கச் செய்கிறேன் என்றாள் குழந்தையின் தாய்.

கலீபா சுபுகு தொழுகைக்குச் சென்றபோது, தொழுகையின் போது கிராஅத் ஓதமுடியாமல் தேம்பி தேம்பி அழுதார்கள். என்னால் எத்தனை குழந்தைகள் சாகடித்தேனோ என புலம்பியவாறு அரசு அதிகாரியை அழைத்து அரசு சார்பாக அறிக்கை வெளியிடச் செய்தார்கள்.

தம் குழந்தைகளுக்கு பால் குடி மறக்கச் செய்வதில் துரிதப்படாதீர்கள் இன்றிலிருந்து நாம் முஸ்லிம் இல்லங்களில் பிறந்த குழந்தைகளுக்கும் உபகார நிதி வழங்கி வருவோம். இச்சட்டம் நாடுபூராவும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. பெண்ணின் முறையீடு கேட்டு கலீபா எவ்வளவு துரிதமாக அரசு சார்பாக நடவடிக்கை எடுத்தார்கள். தன் ஆட்சியில் தவறு ஏற்பட்டு விட்டதோ என இறையச்சம் கொண்டு குடிமக்கள் குறையை நிவர்த்திக்க செயல்பட்ட பாங்கு ஆட்சியாளருக்கோர் முன்மாதிரியாகும்.

கலீபா உமர் (ரலி) ஓர் இரவு,நகர் சுற்றி வரும் பொழுது ஊரைச் சுற்றி வெளிப்புற கிராம மக்களின் நிலமைகளை ஆராய சென்றபோது ஓர் இடத்தில் நெருப்பு வெளிச்சம் பார்த்த உமர்(ரலி) இங்கு ஒரு குழுவினர் தங்கியிருக்க வேண்டுமென யூகித்து அவர்களைப் பார்த்துவிட்டு வரலாம் என என்னை (கலிபா பணியாள் அஸ்லம்) அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு பெண்ணும் அவளைச் சுற்றி சின்னஞ்சிறு குழந்தைகளும் சுற்றியிருந்தன. பசித்தாங்காமல் குழந்தைகள் கதறி அழுத வண்ணம் இருந்தன. அடுப்பில் ஒரு பானை ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. கலீபா அவர்கள் ஸலாம் கூறி இங்கு தங்க காரணம் என்ன? எனக் கேட்டார்கள். எங்கள் பயண வழியில் குளிர் தாங்க முடியாமல் இங்கு தங்கினோம். பானையில் என்ன வேகிறது? ஒன்றுமில்லை வெறும் தண்ணீர், குழந்தை இதைப் பார்த்து ஆறுதலடைந்து தூங்கிவிடட்டும் எனக் கருதி பானையை அடுப்பில் ஏற்றினேன் என்று கூறியவாறு அல்லாஹ்தான் எங்களுக்கும்,கலீபா உமருக்கும் மத்தியில் தீர்ப்பளிக்க வேண்டும் என பெருமூச்செறிந்தாள்.

இறைவனின் நல்லடியாளே! பாவம் உமருக்கு உங்கள் நிலைகள் என்ன தெரியும் அவரைப் பற்றி முறையிடுகிறாய்? என உமர் (ரலி) கேட்டார்கள். இந்த உரையாடல் முடிந்ததும் கலீபா, பணியாளாகிய என்னை அழைத்துச் சென்று அரசு மாவு கிடங்கிலிருந்து ஒரு மூடை மாவு கொஞ்சம் கொழுப்பு மாமிசம், ஒரு பணிப் பெண் சகிதம் ஆயத்தமானோம். மூடையை நான் சுமக்கிறேன் என கலீபா சொன்னபோது,நான் சுமக்கிறேன் என பணியாளிடம் மறுத்ததோடு நாளை மறுமையில் என் சுமையை நீர் சுமப்பீரா எனச் சொல்லிவிட்டு கலீபா மாவுமூடை சுமந்து அந்த பெண் இருக்கும் இடம் வந்தோம். சாமான்கள் இறக்கப்பட்டு உணவு சமைக்க பெண்ணிடம் ஏற்பாடு செய்து அடுப்பில் கலீபா தீயினை பற்றவைத்து தீ ஊதியபோது கலீபா அவர்களின் பெரியதாடி வழியாக புகை கிளம்பிய காட்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். கஞ்சி தயாறானதும் ஊற்றி ஆற வைத்து குழந்தைகளுக்கு கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். இப்பணி செய்த பெண் நன்றி உணர்ச்சியுடன் அமீறுல் முஹ்மினாக இருப்பதற்கு நீங்கள் தான் பொருத்தம்,உமர் இதற்கு தகுதியானவரல்ல என்றாள்.

மனிதாபிமானமிக்க மக்களின் குறையை நிவிர்த்தி செய்த ஆட்சியை கலீபா ஆபூபக்கர், ஹஸ்ரத்உஸ்மான், ஹஸ்ரத் அலீ, உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஸலாஹுத்தீன் ஐயூபி, உலமாக்கள் - இமாம்கள் சூபிஞானிகள் வரலாறுகளிலும் மனிதாபிமான மக்கள் குறையை நிறைவு செய்த நிகழ்வை பார்க்கலாம். மக்களுக்கு மக்களால் மக்களுக்காக, மக்களுக்கு வேண்டி செய்யும் ஆட்சி தான் மக்களாட்சி என்பர். இம்மாதிரி உண்மையாக நடைபெற்ற ஆட்சியில் நடைபெற்ற சில நிகழ்வு இங்கே குறிப்பிட்டுள்ளேன். ஓர் உண்மையான மக்களாட்சி என்பது மக்களின் குறையை போக்கும் ஆட்சியேயாகும்.

# முஸ்லிம்களே விழித்தெழுங்கள்!

தலையங்கம்

ஸ்பெயினில் 780 ஆண்டுகள் ஆட்சி நடத்திய முஸ்லிம்களை, ஒரு முஸ்லிம் கூட இல்லாத அளவிற்கு ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தங்கள் நீண்டகாலத் திட்டத்தாலும்,தொடர் சூழ்ச்சிகளாலும் முஸ்லிம்கள் மட்டுமல்ல அவர்களுடைய அடையாளச் சின்னங்களைக்கூட விட்டுவைக்காமல் அழித்தொழித்தார்கள். இதே வழிமுறைகளில் இந்நிலையிலும் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்க ஃபாஸிஸ்ட்டுகள் இந்தத் திட்டங்களைத் தீட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் கூட்டாக வாழும் பகுதிகளில் கலவரங்கள் நடத்தி முஸ்லிம்களை கொன்று குவித்ததோடு அல்லாமல், தங்கள் சொந்த இடங்களில் அகதிகளாக வாழும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். பல விதமான கலாச்சாரம், பண்பாடு, மதங்களைக் கொண்ட இந்தியாவில் முஸ்லிம்களை மற்ற சமூகத்தினரிடம் இருந்து தனிமைப்படுத்துவதற்காக வெறுப்பு பிரச்சாரங்களிலும்,செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். முஸ்லிம்கள் இந்தியாவின் குடிமக்களே கிடையாது, இந்தியாவின் சுதந்திரத்திலும்,வளர்ச்சியிலும் முஸ்லிம்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது என்று வரலாற்றை மாற்றிக் கூறுகிறார்கள்.

"NRC, CAA" போன்ற சட்டங்களைக் கொண்டு முஸ்லிம்களை அகதிகளாக்க வேண்டுமென துடித்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் தங்கள் ஷரீயாவை பின்பற்றக்கூடாது என்பதற்காக முத்தலாக் திருமணச் சட்டம், இப்போது பர்தாவிலும் கை வைத்துள்ளார்கள்.

சொல்லப்போனால் இன்று வெளிப்படையாகவே, “நாங்கள் இந்தியாவில் இந்து ராஷ்டிராவை கொண்டு வருவோம் அதற்காக எத்தனை முஸ்லிம்களின் உயிரை வேண்டுமானாலும் நாங்கள் எடுக்கவும் தயார், இந்தப் பணியில் எங்கள் உயிரை கொடுக்கவும் தயார்” என பகிரங்கமாகக் கூறுகிறார்கள். இன்னமும் இந்த இஸ்லாமிய சமூகம் விழித்தெழவில்லை என்றால் நமக்கு முன் விழித்தெழாத சமூகங்களில் வீழ்ச்சிகளின் படிப்பினைகள் இருக்கின்றன,அதே நிலை நமக்கும் ஏற்படும் அல்லாஹ் நம்மை காப்பாற்ற வேண்டும்.

இந்நிலை மாற வேண்டும் என்றால் நம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும்.

“எந்த ஒரு சமுதாயத்தவரும் தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில் அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை.” *(அல்குர்ஆன் 13:11)*

மக்களின் துயரங்களைக் கண்டு துயரப்படக்கூடிய, துயரங்களில் இருந்து மக்களை மீட்க வேண்டும் என உண்மையாக முயற்சிக்கக்கூடிய,தன்னுடைய பொறுப்புகளுக்கு நாளை மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என அஞ்சக்கூடிய தலைமையை ஏற்க வேண்டும். இப்படிப்பட்ட தலைமைக்கு முழுமையாகக் கட்டுப்படக்கூடிய மக்களாக நாம் இருக்க வேண்டும்.

நிச்சயமாக கூட்டமைப்பு இன்றி இஸ்லாம் இல்லை, தலைமைத்துவம் இன்றி கூட்டமைப்பு இல்லை, கீழ்படிதல் இன்றி தலைமைத்துவம் இல்லை. - ஸீனன் அத்தாரமி.

“ஆடுகளுக்கு ஓநாய் எப்படிப் பகைவனாக உள்ளதோ,தம் மந்தையைவிட்டு விலகித் தனியாக நிற்கும் ஆடுகளை எப்படி இலகுவாக ஓநாய் வேட்டையாடி இரையாக்கிக் கொள்கின்றதோ அதேபோன்று ஷைத்தான் மனிதனுக்கு ஓநாயாக இருக்கின்றான். மக்கள் ஒரு கூட்டமைப்பாக வாழாவிட்டால் அவன் அவர்களை தனித்தனியாக மிகவும் இலகுவாக வேட்டையாடிவிடுகின்றான். எனவே மக்களே குறுகலான பாதையில் நடக்காதீர்கள், மாறாக நீங்கள் ஜமாஅத் அமைப்புடனும், முஸ்லிம் பொதுமக்களுடன் இணைந்து வாழுங்கள்.” *(முஸ்னத் அஹமத்)*

இன்று நாம் செய்யக்கூடிய அர்ப்பணிப்புகள் நாளை நம் சந்ததிகளுக்கான நற்காலங்கள். விழித்தெழுவோம், ஒன்றுபடுவோம்,போராடுவோம் இன்ஷா அல்லாஹ் வெற்றி பெறுவோம்!


Maulana Syed Abul Hasan Ali Nadwi, Chairman of the Board of Trustees

# இந்திய ஆலிம்கள் எழுதிக்குவித்த அரபு நூல்கள்



மூலம்:
**அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)**

தமிழில்:
**மௌலவி. நியாசுதீன் புகாரி நத்வீ**

அல்லாமா மஹ்மூத் ஹசன் கான் டோான்க்(ஹி1366) அவர்கள் எழுதிய நூலான முஅஜமுல் முஸன்னிஃபீன். 60 பாகங்களை கொண்ட கலைக்களஞ்சியத்தை போன்ற மிகப்பெரிய நூல். 20,000 பக்கங்களையும், 40,000 எழுத்தாளர்களுடைய வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய பிரம்மாண்டமான நூல். அஹமத் என்ற பெயரில் மட்டும் 2000 எழுத்தாளர்களது வாழ்க்கை குறிப்பை பதிவு செய்திருப்பதை கொண்டு இந்த நூலின் பிரம்மாண்டத்தை விளங்கிக் கொள்ளலாம்.

1500க்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து தகவல்கள் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய ஆரம்ப கால கட்டத்திலிருந்து ஹிஜ்ரி 1350 வரை அரபு மொழியில் எழுதிய எல்லா எழுத்தாளர் களது வாழ்க்கையையும் பதிவு செய்திருக்கிறார். ஒரு புத்தகத்தை அரபு மொழியில் எழுதியவரது வாழ்க்கை கூட இதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த புத்தகத்தின் நான்கு பாகங்கள் மட்டும் ஹைதராபாத் அரசாங்கத்தின் செலவில் பைரூத்தில் அச்சடிக்கப்பட்டது.

இதே காலகட்டத்தில் வாழ்ந்த மிகப்பெரிய எழுத்தாளர்களில் ஒருவர் அல்லாமா சையது சுலைமான் நத்வி (ஹி1373) இஸ்லாமிய ஷரீஅத், வரலாறு, நபி (ஸல்)அவர்களது வரலாறு, இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.இவர் எழுதிய அனைத்தையும் ஒன்று திரட்டினால் அது 6 ஆயிரம் பக்கங்களின் அளவை அடையலாம். பல பத்திரிகைகளில் இவர்

எழுதிய கட்டுரைகள், குறிப்புகள், விமர்சனங்கள், பதில்கள்,ஃபத்வாகள் தவிர்த்து இந்த எண்ணிக்கை.

இன்னும் குறிப்பாக இந்தியாவில் உருது மொழியில் வெளியாகிய மிகப் பிரபல்யமான பத்திரிக்கையான மஆரிஃப் பில் எழுதிய வற்றையும் இதனோடு இணைத்தால் அதன் எண்ணிக்கை இன்னும் அதிக அளவை அடையும்.

இந்தியாவின் மிகப் பெரிய எழுத்தாளராக இவரை கருதவும் கிழக்குத் பகுதியின் ஆய்வாளராக, திறன் ஆய்வாளராக கருதுவதற்கும் இதுவே போதுமானது.

மிகப்பெரிய எழுத்தாளர்களில் மற்றுமொருவர் சிறந்த எழுத்தாற்றலும், துறை சார்ந்த ஆழமான அறிவும், பல்துறைகள் குறித்து விசாலமான அறிவும் கொண்டவருமான அல்லாமா மனாஸிர் அஹ்ஸன் கீலானி(ஹி1375) இவர்கள் எழுதிய நூல்கள் அந்நபியுல் காதிம்,தத்வீனுல் ஹதீஸ், நிஜாமுல் இஸ்லாமில் இக்திஸாதி, நிஜாமுத் தஃலீமி வத்தர்பிய்யதி இவையனைத்தும் இவரது மிகச் சிறந்த நூல்கள். இன்னும் இவர், தான் எழுதிய பல நூல்கள் உள்ளடக்கிய ஒரு நூலகத்தையே விட்டுச் சென்றிருக்கிறார்.

மார்க்க கல்வியின் மீது தீராத ஆர்வம் கொண்ட விஷயத்தில் இந்திய உலமாக்கள் பிரபல்யமானவர்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தின் இறுதியிலிருந்து ஹதீஸ் கலைச் சார்ந்த பாடங்களை நடத்துவதிலும், நூல்களை எழுதுவதிலும், பல ஹதீஸ் தொகுப்புகள் மற்றும் மூல நூல்களுக்கு விளக்கவுரை எழுதுவதிலும், இவர்களே தலைமை வகித்தனர்.

மனார் பத்திரிக்கையை துவங்கிய அறிஞர் ரஷீத் ரிளா அவர்கள் மிஃப்தாஹு குனூஸிஸ் சுன்னாஹ் என்ற தனது நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்:

"இந்தக் காலகட்டத்தில் ஹதீஸ் கலையில் இந்திய உலமாக்கள் கவனம் செலுத்தியிருக்காவிட்டால் கிழக்குப் பகுதியில் ஹதீஸ் அழிந்து போயிருக்கும். ஹிஜ்ரி 10ஆம் நூற்றாண்டிலேயே ஷாம், எகிப்து, ஈராக்,ஹிஜாஸ் ஆகிய பகுதிகளில் ஹதீஸ் கலை வீழ்ச்சி அடைய துவங்கிவிட்டது."

ஆனால் இதே காலகட்டத்தில் ஹதீஸ் கலைச் சார்ந்து இந்திய உலமாக்களினால் எழுதப்பட்ட பல்வேறு நூல்களும், குறிப்பாக ஹதீஸ் நூல்களில் தாய் நூல்களாக விளங்கக்கூடிய நூல்களுக்கு எழுதிய விளக்கவுரைகளும் மார்க்க அறிஞர்களிடையே மிகப் பெரிய அங்கீகாரத்தை பெற்றது.

அஷ்ஷைகு முஹம்மத் அஷ்ரஃப் அத்தயானவி அவர்களால் எழுதப்பட்ட அவ்னுல் மஅபூத், அஷ்ஷைகு கலீல் அஹ்மத் ஸாஹரான்பூரி அவர்களால் எழுதப்பட்ட பத்லுல் மஜ்ஹூத் இவையிரண்டும் அபூதாவூத் ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல்கள். அல்லாமா அப்துர் ரஹ்மான் அல்முபாரக்ஃபூரி அவர்களால் எழுதப்பட்ட துஹ்ஃபதுல் அஹ்வதி இது திர்மிதீ ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல்.அஷ்ஷைகு ஷபீர் அஹ்மத் அத்தியோபந்தி அவர்களால் எழுதப்பட்ட ஃபத்ஹுல் முல்ஹிம் இது முஸ்லிம் ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல். ஆனால் இது முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. அஷ்ஷைகு முஹம்மத் ஜகரிய்யா காந்தலவி அவர்களால் எழுதப்பட்ட அவ்ஜஸுல் மஸாலிக் இது முஅத்தா ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல்.

அல்லாமா அன்வர் ஷா காஷ்மீரி அவர்களால் எழுதப்பட்ட ஃபைலுல் பாரி இது புகாரி ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல்.ஹதீஸ் துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு இத்துறையின் மூலம்

மேற்கோள் நூலாக இன்றும் இது விளங்குகிறது.

ஷைகுல் ஹதீஸ் அல்லாமா உபைதுல்லாஹ் முபாரக் ஃபூரி அவர்களால் எழுதப்பட்ட மிர்ஆதுல் மஃபாதீஹ். இது மிஷ்காத் ஹதீஸ் கிரந்தத்திற்கு எழுதப்பட்ட விளக்கவுரை நூல். நான்கு பாகங்களாக வெளிவந்தது.

அடுத்ததாக அல்லாமா லஹீர் அஹ்ஸன் அந்நீமவீ அவர்களால் ஹனஃபி மத்ஹபின் வழிமுறையை வலுப்படுத்தும் விதமாகவும், ஹதீஸ்களை திறனாய்வு செய்யும் விதமாகவும், எழுதப்பட்ட நூலான ஆஸாருஸ் சுனன். ஹதீஸ் கலை சார்ந்து இந்திய அறிஞர்களால் எழுதப்பட்ட மற்ற நூல்களைக் காட்டிலும் அதிகப்படியான தகவல்களை உள்ளடக்கிய பரிபூரண நூலாக இது விளங்குகிறது. துரதிர்ஷ்டவசமாக இது நிறைவு செய்யப்பட வில்லை. அதற்கு இந்நூலின் ஆசிரியரது ஆயுள் துணை நிற்கவில்லை. ஒருக்கால் நிறைவுச் செய்யப்பட்டிருந்தால் ஹதீஸ் திறனாய்வு துறையிலும், ஹனஃபி மத்ஹபின் கண்ணோட்டத்தை வலுப்படுத்தும் விதத்திலும், எழுதப்பட்ட மிகப்பெரிய படைப்பாக இது விளங்கியிருக்கும்.

இஸ்லாமிய உலகில் அனைத்து அறிஞர்களின் கவனத்தைப் பெற்ற இந்திய உலமாக்கள் எழுதிய இன்னும் சில முக்கிய நூல்கள் உள்ளது. இந்தத் துறையில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல்களாக மார்க்க அறிஞர்கள் இவற்றைக் கருதுகிறார்கள். அந்த வரிசையில் காஜி ஸனாஉல்லாஹ் பானிபட் அவர்களால் எழுதப்பட்ட அத்தஃப்ஸீருல் முல்ஹிரி இந்த தஃப்ஸீரானது கடைசி காலகட்டத்தில் ஹனஃபி மத்ஹப் சார்ந்த உலமாக்களால் எழுதப்பட்ட மிகச் சிறந்த தஃப்ஸீராக கருதப்படுகிறது. இந்த நூலின் பெரிய பாகங்கள் மரக்கட்டைகளில் (அ) கற்களிலோ செதுக்கப்பட்டது (அச்சு கோர்வை கண்டுபிடிப்பதற்கு முன்னால்)

அதேபோல அஷ்ஷைகு ரஹ்மதுல்லாஹ் கீரானவி (ஹி-1309) அவர்களால் எழுதப்பட்ட இரண்டு மிகச் சிறந்த நூல்கள். அதில் ஒன்று இள்ஹாருல் ஹக் மற்றொன்று இஸாலதுல் அவ்ஹாம். இந்த இரு நூல்களுமே பைபிளின் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டை விமர்சனம் செய்யும் விதமாகவும், கிறிஸ்துவ கொள்கைக்கு எதிரான சரியான தகவல்களை தெளிவான சான்றுகளுடன் உள்ளடக்கிய நூலாகவும், விவாதங்களில் எதிர் தரப்பினருக்கு தகுந்த பதிலடிகளை உள்ளடக்கிய நூலாகவும் விளங்குகிறது.

இன்னும் இந்தத் துறையில் எழுதப்பட்ட நூல்களில், தனித்துவம் வாய்ந்த நூலாகவும். இந்த நோக்கத்தில் எழுதப்பட்ட நூல்களிலேயே தன்னிகரற்ற நூலாகவும் விளங்குகிறது.

இந்த வரிசையில் அடுத்ததாக காஜி கராமத் ஹுஸைன் (ஹி1335) அவர்களால் எழுதப்பட்ட ஃபிக்ஹுல் லிஸான் என்ற நூல். இந்த நூலானது

தத்துவவியலிலும், சட்டத் துறையிலும் நிபுணராக இருந்தும் இன்னும் பல சட்ட துறைகளிலும், பல அரசாங்க துறைகளிலும் பணியாற்றுபவராக இருந்தும் கூட மொழியியல் தத்துவத்தில், மொழியியலில் மற்றும் சொற்பிறப்பியல் எவ்வளவு ஆழமான அறிவு உடையவராக இந்த நூலின் ஆசிரியர் திகழ்கிறார் என்பதை பறைசாற்றுகிறது.

அடுத்ததாக ஹமீதுத்தீன் ஃபராஹி (ஹி1349) அவர்களால் எழுதப்பட்ட அல்இம்ஆன் ஃபி அக்ஸாமில் குர்ஆன் மற்றும் ஜம்ஹரதுல் பலாகா.

இன்னும் திருக்குர்ஆனின் சில சூராக்களுக்கு இவரால் எழுதப்பட்ட தஃப்ஸீர். இவரது தஃப்ஸீரின் சிலப் பகுதிகளை உள்ளடக்கிய இந்த தொகுப்பிற்கு நிளாமுல் ஃபுர்கான் வத் தஃவீலுல் குர்ஆன் பில் குர்ஆன்.

இந்த நூலானது ஆசிரியரது ஆழமான சிந்தனையையும், அவரது நுட்பமான

பார்வையையும், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் அவரது விசாலமான வாசிப்பையும் உணர்த்துகிறது. இதோடு அரபுமொழி அகராதியில், அணி இலக்கணத்தில், ஜாஹிலியா காலத்து கவிதைகளில், அவர்களது பேச்சு நடை முறைகளை அறிவதில், சொற்களின் ஆழமான அர்த்தங்களை அறிவதில், இவர் எத்துணை நிபுணத்துவம் வாய்ந்தவர் என்பதை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

அடுத்ததாக அஷ்ஷைகு அப்துல் மாஜித் அத்தர்யாபாதி அவர்களால் எழுதப்பட்ட அத்தஃப்ஸீருல் மாஜிதி. பிற மதக் கொள்கைகளை வரலாற்றை,அறிவியலை, ஒப்பீட்டாய்வு செய்வதில் இது மிகப் பிரபல்யமான படைப்பு.

பிற மதத்தின் நூல்களிலிருந்து பல்வேறு ஆதாரங்களை எடுத்துரைக்கிறது. இந்த நூலில், முன் இறங்கிய வேதங்கள் பற்றியும் குர்ஆனைப் பற்றியும் அதில் குறிப்பிட்ட இடங்கள்,ஆளுமைகள், வரலாற்று உண்மைகள் இவை அனைத்தையும் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அகழ்வாராய்ச்சியின் மூலம் ஆதாரத்தோடு குர்ஆனின் அற்புதத்தை நிரூபிக்கிறது.

அடுத்ததாக இந்தியாவின் முதல் கல்வி துறை அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களால் எழுதப்பட்ட தர்ஜுமானுல் குர்ஆன் இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட இந்த நூலானது, உயர்தரமான இலக்கிய நடையிலும், அபூர்வமான ஆய்வுகளையும் சிறந்த கருத்துக்களையும் கொண்டு எழுதப்பட்ட நூல் ஆனால் இது நிறைவு செய்யப்படவில்லை.

**இன்ஷா அல்லாஹ்**

தொடரும்....

# "சிறையில் எனது நாட்கள்"

**மதிப்புரை!**

சிங்கப்பெண் ஜெய்னப் அல் கஸ்ஸாலியை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக! இப்படி ஒரு தியாக பெண்மணி இருப்பதை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்திய ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களின் பணிகளுக்கு அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் நற்கூலி வழங்குவானாக.

இந்த புத்தகத்தை படிக்கும்போது என்னுள் ஏற்பட்டவை, முதலில் - அல்லாஹ்வின் உதவி ஜெய்னப்க்கு எப்போது வரும்? இத்தனை கொடுமைகள் நடந்தும் ஓர் உயிர் இவ்வளவு காலம் நீடிக்குமா? சில இடங்களில் அழுகை வந்தது. சில இடங்களில் மேனிகள் சிலிர்த்தது. சில இடங்களில் நம் கவனத்திற்கு இவை எல்லாம் ஏன் கொண்டுவரப்படுகின்றது என்ற பயம்! இத்தனை உணர்வுகளும் இந்த நூலை நான் வாசிக்கும்போது எனக்கு ஏற்பட்டது. சில இடங்களில் இப்படியெல்லாம் கொடுமைகள் இந்த காலத்திலும் நடக்குமா என்ற ஆச்சரியமான சந்தேகம் கூட என் உள்ளத்தில் வந்தன!

ஒரு ஆணை விஞ்சிய மன வலிமையை எங்கிருந்து பெற்றார்! நானும் இப்படி இருக்க ஆசைப்படுகின்றேன் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ்வின் திருபொருத்தத்திற்கும் சொர்க்கத்திற்கும் ஆசைதான். அதை அடைய அல்லாஹ் வகுத்துள்ள பாதை கரடுமுரடானது என்கிறார் ஜெய்னப். நானும் அல்லாஹ்வின் பாதையில் அவன் பொருந்திக்கொள்ளும்படி செயல்பட முயற்ச்சிக்கிறேன். அதற்கான வலிமையையும், ஆற்றலையும் அவனிடமே வேண்டி நிற்கிறேன். இன்ஷா அல்லாஹ்.

**- ஹஸீனா பர்வீன்**



மருத்துவம் தொடர்...

# பெண்களை வதைக்கும் தைராய்டு தொல்லை!

பட்டாம்பூச்சியை எல்லோருக்கும் பிடிக்கும். அதுபற்றி ஆர்வத்துடன் பேசுவோம். ஆனால், அந்தப் பட்டாம்பூச்சியின் வடிவத்தில் நம் உடலில் இருக்கும் ஒரு சுரப்பி பற்றி பலரும் கவலையுடன் பேசுவார்கள். நமது கழுத்தின் முன்பகுதியில் இரு பக்கங்களிலும் இருக்கும் தைராய்டு சுரப்பிதான் அது. இந்த சுரப்பி அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சுரக்கும்போது, தைராய்டு தொல்லை பெண்களை வதைக்கிறது. குறிப்பாக முதுமையில் பெண்களைத் தாக்கும் முக்கிய நோயாக இது இருக்கிறது. தைராய்டு பற்றிய அடிப்படைகளை நாம் புரிந்துகொண்டால், இந்தத் தொல்லையை சமாளிப்பது சுலபம்.

நமது உடலில் சில சுரப்பிகள் உள்ளன. அவற்றில் சுரக்கும் ஹார்மோன்கள் நேரடியாக ரத்தத்துடன் கலந்து, உடல் இயக்கத்துக்குத் துணை புரிகின்றன. இப்படி ஹார்மோன்களை சுரப்பவை நாளமில்லாச் சுரப்பிகள் எனப்படுகின்றன. அவற்றுள் பிட்யூட்டரி, கணையம், தைராய்டு ஆகிய சுரப்பிகள் மிகவும் முக்கியமானவை.

இவற்றில் தைராய்டு சுரப்பி, 'தைராக்சின்' எனும் ஹார்மோனை சுரக்கிறது. தைராய்டு சுரப்பி சிறியதுதான். ஆனால் இது சுரக்கும் ஹார்மோன், நம் உடலின் இயக்கத்தில் மிகப்பெரிய பங்கை வகிக்கிறது. இது சுரக்கும் நீர் நம் உடலில் உள்ள செல்களுக்குச் சென்று, அவை சரியாகச் செயல்பட உதவுகிறது. வாகனத்துக்கு பெட்ரோல் போல, மனித உடலுக்கு தைராக்சின் அவசியம். கிட்டத்தட்ட நம் உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் இது தேவை.

தைராய்டு சுரப்பி தைராக்சின் ஹார்மோனை அதிகமாகச் சுரந்தால் 'தைரோடாக்சிகோஸிஸ்' என்னும் தொல்லையும், குறைவாகச் சுரந்தால் "மிக்ஸ்சோடிமா" என்னும் தொல்லையும் ஏற்படும்.

வயதான காலத்தில் பலருக்கு தைராக்சின் ஹார்மோன் குறைவாகச் சுரப்பதால் மிக்ஸ்சோடிமா (Myxoedema) என்ற நோய் ஏற்படுகிறது. இந்த நோயின் பல தொல்லைகள் முதுமையின் விளைவாக இருப்பது போலவே தோன்றும். உதாரணம்: உடல் சோர்வு, மந்த நிலை, மனச் சோர்வு, சதை வலிமை இழத்தல், மலச்சிக்கல், காது கேளாமை. இதனால் இத்தொல்லையை எளிதில் கண்டறிய முடியாது.

இந்த நோய் ஆண்களைவிட பெண்களுக்கே அதிகமாக வரும். உடல் சற்று பருமன் அடையும். தோல் கடினமாகவும் வறட்சியாகவும் மாறும். வியர்வையும் குறையும். நாக்கு சற்று தடித்துக் காணப்படும். அதனால் பேச்சு இயல்பான நிலையிலிருந்து மாறி கரகரப்பாக இருக்கும். மந்த நிலை உருவாவதால் எல்லா வேலைகளையும் மெதுவாகச் செய்வார்கள். கை, கால்களில் மரத்த உணர்ச்சியும், நடை தள்ளாடுவதும் ஏற்படும். இவர்களால் குளிர்காலத்தில் குளிரைத் தாங்க முடியாது. முகமும் பருத்துக் காணப்படும். கை, கால் தசைகளில் இறுக்கமான பிடிப்பும் தோன்றும். மூட்டுவலியும், மலச்சிக்கலும் வரும் வாய்ப்பு அதிகம் உண்டு. இவர்களுக்கு மாரடைப்பு, உயர் ரத்த அழுத்தம், ரத்த சோகை, இதயம் வலிமை இழத்தல் போன்ற தொல்லைகள் வரலாம்.

தைராய்டு கோளாறு இல்லையென்றாலும் இந்தப் பிரச்சனைகள் முதுமையில் எல்லோருக்கும் வரும் என்றாலும், குறிப்பிட்ட சில வித்தியாசங்களை பெண்கள் உணர முடியும். குறிப்பாக நாக்கு தடிப்பது, பேச்சு மாறுவது, முகம் பருத்துவிடுவது போன்ற தொல்லைகள் பெண்களுக்கு ஏற்பட்டால், இது மிக்ஸ்சோடிமாவாக இருக்கலாம் என்று சந்தேகப்பட வேண்டும். உடனடியாக மருத்துவரின் உதவியை நாடவேண்டும்.

இந்த நோயை உறுதி செய்ய சில இரத்தப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். உதாரணம்: T3, T4, TSH. கழுத்துப் பகுதியில் தைராய்டு கட்டி வீக்கம் இருந்தால் அதை கண்டறிய ஸ்கேன் மற்றும் பயாப்சி போன்ற பரிசோதனைகள் தேவைப்படலாம்.

இந்த நோயைச் சரிப்படுத்த தைராக்சின் என்னும் மாத்திரையைத் தொடர்ந்து நிறுத்தாமல் சாப்பிட வேண்டும். இந்த மாத்திரையை காலையில் வெறும் வயிற்றில் எடுத்துக் கொள்ளவேண்டும். மருத்துவரின் ஆலோசனையின்றி மாத்திரையின் அளவை மாற்றக்கூடாது. இரத்தப் பரிசோதனையின் முடிவுகளை வைத்து, மருத்துவர்களை தேவைப்படும்போது மாத்திரையை குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ செய்வார்கள். தைராக்ஸின் மாத்திரையை பல வருடங்களுக்கு தொடர்ந்து எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

சிலருக்கு தைராய்டு சுரப்பி தைராக்சின் ஹார்மோனை அதிகமாகச் சுரக்கும். இதனால் 'தைரோடாக்சிகோஸிஸ்' எனும் தொல்லை ஏற்படும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் மிகவும் மெலிந்து இருக்கும். பசி அதிகமாக எடுக்கும். ஆனால் உடல் மட்டும் இளைத்துக் கொண்டே போகும். அடிக்கடி வயிற்றுப்போக்கும் ஏற்படும். எப்பொழுதும் ஒருவித பதற்றத்துடனே இருப்பார்கள். அதிகமாகப் பேசுவார்கள். கண்கள் இரண்டும் வெளியே தள்ளியது போல் பெரிதாகக் காணப்படும். கைகளில் நடுக்கம் அதிகம் இருக்கும். உடல் வெப்பம் சற்று மிகுதியாக இருக்கும். இவர்களால் கொஞ்சம் வெப்பம் அதிகரித்தாலும் தாங்க முடியாது. கோடைக்காலத்திலும் தவித்துவிடுவார்கள். உடல் அடிக்கடி வியர்த்துக் கொட்டும்.

இந்நோய் உள்ளவர்களுக்கு தைராய்டு சுரப்பி (கழுத்தின் முன்பகுதி) சற்று வீங்கி இருக்கும். அல்லது அந்த சுரப்பியில் பல கட்டிகள் இருக்கலாம். சிலருக்கு தைராய்டு சுரப்பி வீக்கம் ஏதும் இல்லாமலேயே தைரோடாக்சிகோஸிஸ் தொல்லை இருக்கலாம். இந்நோயை ரத்தப் பரிசோதனை மூலமும், தைராய்டு ஸ்கேன் பரிசோதனை மூலமும் எளிதில் கண்டறிய முடியும்.

இந்தப் பிரச்னை இருக்கும் பலருக்கு மருந்துகள் மூலமே குணமளிக்க முடியும். சிலருக்கு மட்டும் அறுவை சிகிச்சை அல்லது ரேடியம் அணு கதிரியக்க சிகிச்சை தேவைப்படும்.

தைராய்டு கோளாறுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதற்கு தரமான சிகிச்சையை மருத்துவரால் தற்போது அளிக்க முடியும். அந்த அளவுக்கு சிகிச்சைகள் மேம்பட்டுள்ளன. எனவே. தைராய்டு தொல்லையை பற்றி இனி பெண்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. அறிகுறிகளை உணர்ந்துகொண்டு, உடனடியாக மருத்துவரை அணுகும் விழிப்புணர்வே நமக்குத் தேவை.


**டாக்டர் ஜி.எஸ்.சாந்தி**

**முதியோர் நல மருத்துவர்**
**தலைவர் - புரவலர், முதியோர் நல மருத்துவப் பிரிவு,**
**சென்னை இராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை.**



# மலச்சிக்கல்

இயற்கை மருத்துவம் என்பது நம் வாழ்க்கை முறையை சரியான பாதையில் கொண்டு செல்வதே. இப்போதைய அவசரமான வாழ்வியல் சூழ்நிலையில் நல்ல உறக்கமில்லாமல் இருப்பதும், சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ளாமல் தவிர்ப்பதும், நம் உடலிலிருந்து நச்சுக்கள் சரியாக வெளியேறாமல் இருப்பதும் பல நோய்களுக்கான அறிகுறிகள்தாம்.

நம்முடைய நோய்களுக்கு காரணமே நம் உடலில் உள்ள கழிவுகள்தாம். அதை இயற்கையாக வெளியேற்றுவதற்கான எளிய முறைகளைக் காண்போம்.

### உணவுகள்

நாம் சாப்பிடும் உணவு வகைகளில் நார்ச்சத்து நிறைந்த பழுப்பு அல்லது சிவப்பு அரிசி, கேழ்வரகு, தினை, வரகு, கொள்ளு போன்ற முழு மற்றும் சிறுதானியங்கள் மலச்சிக்கலை தவிர்க்க உதவும்.

பழங்கள் மலச்சிக்கலுக்கு ஒரு சிறந்த தீர்வாகும். குறிப்பாக கொய்யா, ஆப்பிள், மாதுளை, பப்பாளி, மாம்பழம் போன்ற பழங்களில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கலுக்கு நல்ல பலனை அளிக்கும்.

பச்சை நிறக் காய்கறிகள், வாழைத்தண்டு, மொச்சை கொண்டைக்கடலை, பொட்டுக் கடலை போன்ற பருப்புகள், கீரைகள், கொட்டைகளை நம் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு வாழைப்பழம் சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. வாழைப்பழத்தைவிட கொய்யாப்பழமானது குடலை நன்கு குணப்படுத்தி, சிக்கல் மீண்டும் வராமல் பார்த்துக் கொள்ளும். வில்வ பழம் அல்லது மர ஆப்பிளும் மலச்சிக்கலுக்கு ஒரு நல்ல தீர்வாகும்.

### நீர்

தினமும் இரண்டரை முதல் மூன்று லிட்டருக்கு குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். காலை எழுந்ததும் வெதுவெதுப்பான நீர் அருந்தலாம். இளநீர், பழச்சாறுகளை அதிகம் அருந்த வேண்டும். காபி, தேநீர், மென்பானங்களைத் தவிர்த்து சுடுநீர், நீராகாரம் போன்றவற்றை குடித்து மலச்சிக்கலை தவிர்க்கலாம்.

### மூலிகைகள்

இசாப்கோல் உமி தூள் - இது இயற்கை மலமிளக்கியாக அறியப்படுகிறது. இந்த உமியிலுள்ள சைலியம் மொத்தமாக உருவாகும். மலமிளக்கியாகும். அதாவது குடலில் உள்ள தண்ணீரை உறிஞ்சி, புடைத்து, இதனால் மலத்தை மென்மையாக்கி மற்றும் குடலில் கடந்து செல்வதை எளிதாக்குகிறது.

கடுக்காய், திரிபலா போன்ற மூலிகைகளும் மலச்சிக்கலுக்கு தீர்வாகும்.

இயற்கையின் வாயிலாக எல்லா சிக்கலுக்கும் தீர்வு கண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்!

**டாக்டர் எஸ்.அபிராமி பிரேம்நாத்**

**இயற்கை மருத்துவம் மற்றும் யோகா நிபுணர்.**

**நன்றி : முதுமை எனும் பூங்காற்று.**



# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## எஸ்.எம்.முஷ்ரிப்

**மல்லேஸ்வரம் (பெங்களூர்) பி.ஜே.பி அலுவலக குண்டுவெடிப்பு -2013**

*மல்லேஸ்வரம் (பெங்களூர்) பாரதிய ஜனதா தலைமை அலுவலக குண்டுவெடிப்பு ஏப்ரல் மாதம் 17ம் தேதி 2013ம் ஆண்டு அதாவது கர்நாடக சட்டசபை தேர்தலுக்கு முன்னால் நடந்தது. ஒரு மொபைல் போன் சிம் கார்டை பயன்படுத்தி இந்த குண்டுவெடிப்பை நடத்தியுள்ளனர். அந்த சிம் கார்டு கர்நாடக-கேரள எல்லையிலுள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ். தலைவருடையது. ஆனால் அந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் இந்த குண்டுவெடிப்பு நடப்பதற்கு ஒரு நாள் முன் தன்னுடைய மொபைல் போன் தொலைந்துவிட்டதாக விசாரணையின் போது தெரிவித்தார். ஒரு புகார் கூட காவல் நிலையத்தில் கொடுக்கப்படவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*ஆனால் போலீஸாரோ இவருடைய வாய்மொழி வாக்கு மூலத்தை ஏற்றுக் கொண்டு இவரை அப்பாவி என்றும் வழியனுப்பி வைத்தனர். அது மட்டுமல்ல இந்த குண்டுவெடிப்புக்கும் வலதுசாரி தீவிரவாத அமைப்புக்கும் எந்த தொடர்புமில்லை என்றும் ஆணித்தரமாக விலக்கிவிட்டனர். (தி ஹிந்து, பெங்களூர் 11.05.2013, மராத்தி டெய்லி மற்றும் மஹாராஷ்ட்ரா டைம்ஸ், புனே. 12.05.2013)*

பத்திரிகை நிருபர்கள் இந்த குண்டு வெடிப்புக்கும் ஆர்.எஸ்.எஸ். தலைவருக்கும் உள்ள தொடர்பைப் பற்றி போலீஸாரிடம் கேள்வி எழுப்பிய போது, போலீஸார் பதில் சொல்ல மறுத்ததோடு மட்டுமல்லாமல் யார் அந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் என்பதையும் சொல்லவேயில்லை. ஆனால் விசாரணை சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று மட்டும் கூறினர்.

போலீஸார் கூறிய விசாரணையின் 'சரியான பாதை' என்பது எப்படி வலதுசாரி தீவிரவாத அமைப்பை இந்த வழக்கிலிருந்து கழட்டிவிடுவது என்பது தான். அதே சமயம், இந்த வழக்கில் தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த கிச்சான் புகாரி என்பவரை 16 சிம் கார்டுகளோடு கைது செய்தனர். அதில் ஒரு சிம் கார்டு ஆர்.எஸ்.எஸ். தலைவருடையது. அந்த ஆர்.எஸ்.எஸ். தலைவரை முழுமையான பாகு பாடற்ற விசாரணை மேற்கொண்டிருந்தால் உண்மையான சதித்திட்டம் வெளிவந்திருக்கும்.

## புத்தகயா (பீகார்) குண்டுவெடிப்பு - 2013

பீகாரிலுள்ள புத்தகயாவில் 2013ம் ஆண்டு ஜூலை மாதம் 7ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தொடர் குண்டுவெடிப்பு நடந்தது. கோவில் வளாகத்தினுள் கிடைத்த பேக்கை அடிப்படையாகக் கொண்டு போலீஸார் கயாவில், பராசாட்டி பிளாக்கைச் சேர்ந்த 30 வயது இளைஞன் வினோத் மிஸ்ரியை கைது செய்தனர். இந்த புலனாய்வில் கிடைத்த உண்மைகளை கீழே காணலாம். (தி ஹிந்து, 8.7.2013, ஹிந்துஸ்தான் டைம்ஸ் 8.7.2013. டெக்கான் ஹெரால்டு,8.7.2013)

- கோவில் வளாகத்தினுள் கிடைத்த பேக்கில் வினோத் மிஸ்ரியின் வாக்காளர் அடையாளஅட்டை, சாமியார்கள் உபயோகப்படுத்தும் கயிறு மற்றும் ஒரு பேப்பரில் எழுதப்பட்டிருந்த சில மொபைல் போன் நம்பர்கள்.

- போலீஸாரின் விசாரணையில் வினோத் மிஸ்ரி சாமியார் அல்ல என்பது தெரிய வந்தது.

- பேக்கில் இருந்த துண்டுச் சீட்டில் இருந்த செல்போன் எண்களை ஆய்வு செய்தபோது அந்த எண்கள் டெல்லியைச் சேர்ந்தவை என்பதும் சில எண்கள் அதிகாலை 1 மணி முதல் 4 மணிக்குள் (07.07.2013) தொடர்பு கொள்ளப்பட்டவை என்பதும் தெரியவந்தது. அதாவது, குண்டுகள் வெடிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு தொடர்பு கொள்ளப்பட்டவை. மேலும் இந்த மொபைல் எண்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக போலீஸார் கூறினர்.

- புத்தகயாவிலுள்ள கோவில் நிர்வாகம் சமீபமாக தன்னை ரதயாத்திரைக்கு ரதம் செய்ய சொல்லி கேட்டுக் கொண்டதாக வினோத் மிஸ்ரி தெரிவித்தார். ஆனால் போலீஸாரின் விசாரணையில் இவன் ஒரு சாதாரண (தச்சு வேலை பார்க்கும்) ஆசாரி என தெரியவந்தது.

- இவன் குடியிருந்த பரசாட்டி, மாவோயிஸ்ட் கலகக்காரர்கள் மிகுதியாக வசிக்கும் பகுதி. இவனுடைய தந்தையும் நக்ஸல் பின்புலம் கொண்டவர்.

**போலீஸார் மேலே சொன்ன தகவல்களின் அடிப்படையில் இன்னும் சில விசாரணைகளை செய்ய வேண்டி உள்ளது.**

- ஒரு சாதாரண சிறிய தச்சரான வினோத் மிஸ்ரி உண்மையிலேயே கோவில் நிர்வாகத்தால் ரதம் செய்வதற்காக நியமிக்கப்பட்டானா?

- அப்படியானால் சாமியாரால் உபயோகப்படுத்தப்படும் கயிறை இவன் ஏன் எடுத்து வந்தான்? (இவன் ஒரு சாமியாராக இல்லாத போது!)

➢ இவனுடைய கைப்பையின் துண்டுச் சீட்டில் இருந்த டெல்லியைச் சேர்த்த மொபைல் எண்கள் யாருடையவை?

➢ மிக முக்கியமாக குண்டுகள் வெடிப்பதற்கு முன் அதிகாலை 1 மணி முதல் 4 மணிக்குள் இவன் ஏன் போன் செய்தான்?

➢ நக்ஸல் அமைப்போடு இவனுக்கு ஏதேனும் தொடர்பு உள்ளதா?மேற்கண்ட கேள்விகளுக்கெல்லாம் வினோத் மிஸ்ரியை கடுமையான விசாரணை மூலம் விடை தேட வேண்டிய என்.ஐ.ஏ. (தேசிய புலனாய்வு நிறுவனம்) மத்திய உளவுத்துறை (ஐபி)யின் உடனடி தூண்டுதலின் பேரில் அப்பட்டமாக ஏழு முஸ்லிம் இளைஞர்களை கைது செய்தது. இந்த ஏழு பேரும் இந்தியாவின் அல்கொய்தா என்றழைக்கப்படும் ஜமாத் அல்-தவ்ஹீத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் இந்த புத்தகயா குண்டுவெடிப்புக்கு பொறுப்பேற்றுக் கொள்வதாக ஊடக தகவல் துறைக்கு ஒரு கடிதம் மூலம் இவர்களே (ஜமாத் அல் தவ்ஹீத்) தெரிவித்ததாகவும் ஆதாரமற்ற தகவலை தேசிய புலனாய்வு நிறுவனம் (என்.ஐ.ஏ) கூறியது. கைது செய்யப்பட்ட ஏழு முஸ்லிம் இளைஞர்களில் ஒருவன் சிறுவன். இவனை தனியே சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரணையை மேற்கொண்டதாகவும்,மேலும் ஒருவன் குண்டு வெடிக்கும்போதே இறந்து விட்டதாகவும் போலீஸார் தெரிவித்தனர். மீதமுள்ள ஐந்து பேரையும் என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தியதற்குக் காரணம் இந்த வழக்கிற்குத் தேவையான 12 சாட்சிகளின் அடையாளங்களை கூட மறைத்து வைத்தது. இறுதியாக இந்த ஐந்து முஸ்லிம் இளைஞர்களுக்கும் குற்றவாளிகள் என நிரூபித்து ஆயுள் தண்டனை பெற்றுத்தந்தது. என்.ஐ.ஏ. (தி இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே. 2.06.2018, தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே 2.06.2018)

**இன்ஷா அல்லாஹ்**

**தொடரும்....!**





இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!

80727 73868

Vergal Pathippagam



# வெயிலை விரட்டும் வழிகள்!

கொளுத்தும் வெயிலிலிருந்து தப்பிக்க, ஏ.சி. போட்டு வீட்டை ஜில் ஆக்குவது எல்லோருக்கும் வாய்க்காது. அப்படியே ஏ.சி வீட்டில் இருந்தாலும், மின்பற்றாக்குறையும், லோ வோல்டேஜ் பிரச்சனையும் அதை ஓடவிடாமல் செய்துவிடுகின்றன. குறிப்பாக கோடைக்காலத்தில் இந்தப் பிரச்சனை ரொம்பவே அதிகம் என்பதால், இருந்தும் இல்லாத நிலைமைதான்!

கொஞ்சம் முயற்சி செய்தால், ஏ.சி இல்லாமலே வீட்டை ஜில் ஆக்கலாம்...

வீட்டை அனலின் தாக்கம் இல்லாமல் பாதுகாக்க விரும்புகிறவர்கள், முதலில் கவனிக்க வேண்டியது மொட்டை மாடியைத்தான்! அந்தக்காலத்தில் சுண்ணாம்பு குழைத்துக் கட்டிய பிரம்மாண்ட வீடுகள், சிறிய ஓடு கோர்த்த வீடுகள், கீற்றுக்கூரை வீடுகள் ஆகியவை வெயிலுக்கு இதமானவை. கான்க்ரீட் வீடுகள் கோடைக்கு ஏற்றவை அல்ல. அவை பகலில் வரும் சூரிய வெப்பத்தை அப்படியே தேக்கி வைத்து, மாலையிலும் இரவிலும் வீட்டுக்குள் பரப்பும்.

இதைத் தவிர்க்கவே மொட்டை மாடியில் செங்கல்,ஜல்லி, சுண்ணாம்பு, கடுக்காய் கலந்து பரப்பி, அதன்மீது ஓடு பதிக்கிறார்கள். முன்பு இதற்கு, சாதாரண ஓடுகளே பதித்தார்கள். இப்போது வெயிலை பிரதிபலிக்கும் வகையிலான நவீன டைல்ஸ்கள் வந்துவிட்டன. வீட்டில் ஜன்னல்கள் வைத்து முறையான காற்றோட்ட வசதிகள் செய்திருக்கவில்லை என்றால், இதன்பிறகும் அனலாக இருக்கும்.சிலர் மொட்டை மாடியில் இப்படி ஓடு பதிக்க மாட்டார்கள். இன்னும் ஒரு மாடி கட்டும் உத்தேசத்தில் இருப்பவர்கள், அப்போது இதை உடைத்து அகற்ற வேண்டியிருக்கும் என்பதால் போடாமல் விடுவார்கள்.

இவர்களுக்கும் சில வழிகள் உண்டு..

**1.** வெயில் நாட்களில் மொட்டை மாடியில் கண்ணாம்பு அடித்துவிடலாம். வெயிலின் உக்கிரத்தை அப்படியே பிரதிபலித்துவிடும் தன்மை கொண்டது வெள்ளை நிறம். அதனால் வீட்டுக்குள் வெப்பம் கசியாது.

**2.** மாலை நேரத்தில் மொட்டை மாடியில் தண்ணீர் தெளித்துவிடலாம். பகல் முழுக்க காய்ந்த வெயிலின் கடுமையை அது உறிஞ்சிக் கொள்ளும்.

**3.** மொட்டை மாடியில் கீற்றுப் பந்தல் போடலாம். இதன்மூலம் மொட்டை மாடி கான்க்ரீட்டில் வெயில் நேரடியாகப்படுவது தடுக்கப்படும்.இதில் இன்னொரு நன்மையும்

உண்டு. இரவில் பவர் கட்டாகி வீட்டுக்குள் தூங்க முடியாது போனால்,இந்தப் பந்தலுக்குள் கொசு வலையைக் கட்டிக் கொண்டு 'நிம்மதியாகத் தூங்கலாம். பகல் முழுக்க வெயிலில் காய்ந்த மொட்டை மாடித் தரை ஏதோ கேஸ் ஸ்டவ் போல அனல் தகிக்கும். அதில் படுத்துத் தூங்க முடியாது.ஆனால் கீற்றுப்பந்தல் இருந்தால் தூங்கலாம்.

*4.* மொட்டை மாடியில் மணல் பரப்பி தோட்டம் அமைப்பது இப்போது பல ஊர்களில் பிரபலமாகி வருகிறது. இப்படி தோட்டம் அமைப்பதால், அந்தச் செடி களுக்குத் தண்ணீர் விடுகிறோம். அதனால் பரவும் ஈரப்பதம், வெயிலின் கடுமையைக் குறைக்கும்.

*5.* வீட்டின் சுற்றுப்புறம்தான் வீட்டை குளிர்ச்சியாக வைக்க காரணமாகிறது. இருக்கும் மொத்த இடத்தையும் வளைத்து வீடு கட்டி விடுகிறார்கள் இப்போது. தோட்டம் அமைக்கவோ, மரங்கள் நடவோ மனசில்லை. இருக்கும் மரங்களையும் இலைகள் உதிர்ந்து வீட்டை குப்பையாக்குகிறது,சுத்தம் செய்து மாளவில்லை என்று காரணம் சொல்லி வெட்டி விடுகிறார்கள். மரத்தின் நிழல் ஏசியை விட சிறந்தது. வீட்டின் மொட்டை மாடியில் மரங்கள் நிழல் பரப்புவதும், கொடிகள் படர்ந்து வெயிலைத் தடுப்பதும் இனிமையானது. ஏற்கனவே முதிர்ந்த மரத்தின் நிழல் எந்த வீட்டின் மீது விழுகிறதோ அதுவே ஆசிர் வதிக்கப்பட்ட வீடு என ஒரு பொன்மொழி உண்டு.

*6.* சுற்றுச்சுவருக்கும் வீட்டுக்கும் இடையே இடம் விட்டிருந்தாலும், அதையும் சிமெண்ட் பூசி கான்கிரீட் தளமாக்கி இருப்பார்கள் சில வீடுகளில்... அந்தத் தரையில் படும் வெப்பம், அப்படியே வீட்டுக்குள் நுழையும். வெயில் நாட்களில் அந்தத் தரைகளில் சூரிய வெளிச்சம் விழாதபடி கீற்றுப்பந்தல் போட்டு வைப்பது நல்லது.இந்தப் பந்தல் மீதும் வீட்டைச் சுற்றிலும் மாலை நேரத்தில் குளிர்ந்த தண்ணீர் தெளித்து வைத்தால் வீடு ஜில்லெலன இருக்கும்.

*7.* வீட்டைச் சுற்றிலும் மண் தரை இருந்தால்,அங்கு செடிகளை நட்டு தண்ணீர் ஊற்றுங்கள்.

*8.* மண்ணில் பரவும் தண்ணீர், வீட்டையும் குளிரவைக்கும். எப்போதோ அபூர்வமாகப் பெய்யும் கோடை மழையின்போது தண்ணீர் மண்ணுக்குள் இறங்கி சூழலையே குளிரச் செய்யும்.

*9.* “தேங்காய் நார் தரை” அமைத்தும் வீட்டை குளிரச் செய்யலாம்.வீட்டை ஒட்டிய மண் தரையில்,ஒரு அடி ஆழம் நான்கு அடி அகலத்துக்கு பள்ளம் தோண்ட வேண்டும். இதில் தேங்காய் நாரைப் பரப்பி,மேலே மணல் கொட்டி மூட வேண்டும். இது வெளிப்புற வெப்பத்தை வீட்டுக்குள் நுழைய விடாமல் தடுக்கும். வீட்டுக்கும் குளிர்ச்சி தரும்.செலவு அதிகம் என்றாலும், உங்கள் கரண்ட் பில் கட்டணத்தை கணிசாகக் குறைக்கும்.

*10.* வீட்டின் ஜன்னல்களை பகலிலும், மாலை நேரத்திலும் திறந்தே வைக்க வேண்டும். குறிப்பாக தென்றல் வரும் தென்திசை ஜன்னலும், மேலைக்காற்று வரும் மேற்பக்க ஜன்னலும் திறந்திருக்க வேண்டும். கொசுத்தொல்லைக்குப் பயந்து மூட வேண்டாம்.மெல்லிய வலைகள் இப்போது விற்பனைக்கு வந்துள்ளன.


*11.* ஜன்னலில் வெட்டிவேர் கட்டி வைத்து, மாலை நேரத்தில் அதில் தண்ணீர் தெளித்து விடுவதும் வீட்டுக்குள் குளிர்ச்சி தரும். வெட்டி வேரால் பின்னப்பட்ட ஜன்னல் சீலைகளும் இப்போது ரெடிமேடாகக் கிடைக்கின்றன.

*12.* வீட்டுக்கு அடர்நிற வண்ணம் பூச வேண்டாம்; ஏற்கனவே பூசியிருந்தாலும், அடுத்த முறை பூசும்போது வெண்மை நிறத்துக்கு மாற்றிவிடவும். வண்ணங்கள் வீட்டுக்குள் வெப்பத்தை கடத்துகின்றன. உட்புறத்திலும் மென்மையான வண்ணங்கள் பூசவும். திரைச்சீலைகளும் அடர் வண்ணங் களில் வேண்டாம்.

*13.* படுக்கையறை நன்கு காற்றோட்ட மானதாக இருக்க வேண்டும்.மரக்கட்டில்கள் வெப்பத்தை உள்வாங்காது. பருத்தி விரிப்புகளை பயன்படுத்துவது நல்லது.

*14.* சமைக்கும்போது எழும் வெப்பம்,வீடு முழுக்கப் பரவுகிறது. சமையலறையை ஒட்டி படுக்கையறை இல்லாமல் பார்த்துக்கொள்வது நல்லது. அப்படி இருந்தால் சமைக்கும்போது படுக்கையறை கதவை மூடி வைக்கவும். எக்சாஸ்ட் ஓடவிட்டு,அனலை வெளியேற்றவும்.

**நன்றி : முதுமை எனும் பூங்காற்று**



# கோடையும் குழந்தைகளும்!

**MGM**

> கோடை வெயிலில் இருந்து தப்பிக்க வாய்ப்புகள் உடையோர் கோடை வாசஸ்தலங்களை நோக்கி பயணங்களை மேற்கொள்வார்கள்.
>
> பாட்டாளி மக்களும், பட்டினிச் சாவுகளும் அதிகரித்துவரும் ஒரு நாட்டில், உல்லாசப் பயணங்கள் ஒருபெரும் ஆடம்பரம்தான் என்றாலும் முடிந்தவரை செலவு குறைந்த இடங்களுக்குப் போய்வருவது சிறந்தது.

## குழந்தை வளர்ப்பு தொடர்.....

வாழ்க்கை ஓட்டத்தில் ஒரு கல்வியாண்டை கடத்து விட்டார்கள் மழலைகள். அவர்களை அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தாக்கிய டென்ஷன் (அழுத்தங்கள்) முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அடுத்த டென்ஷன் (அழுத்தம்) தொடங்குமுன் அகப்பட்டது ஓர் ஓய்வு.

கோடை தன் வெம்மையைக் காட்டிடத் தொடங்கிவிட்டது. மழலைகள் அதிகமான நேரம் வெளியில் விளையாடிட விரும்புவார்கள். ஆனால் அவர்களை அவ்வாறு வெளியில், வெயிலில் விடுவது முறையாகாது என்கின்றார்கள் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

அவர்கள் கடும் வெயிலில் தொடர்ந்து அதிக நேரம் விளையாடினால் சருமங்கள் பாதிக்கப்படும். தொடர்ந்து வரும் கோடைகளிலும் அவர்கள் இதையே தொடருவார்கள் என்றால் அது பயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத்துமாம்.அந்தப் பின் விளைவுகளுள் ஒன்றாக தோல்புற்றுநோய் கூடவரலாம் என்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஏனெனில் மழலைகளின் தோல்கள் தொடர்ந்து கடும்வெயிலில் படும்போது, அவை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகுமாம். அதனுடய தாக்கம் "Cumulative" அதாவது காலம் போகப்போக அதிகரித்துக் கொண்டே போகுமாம்.

இந்தக் கோடையில் ஏற்படும் தாக்கம் அப்படியே தோல்பகுயில் தங்கிவிடுகின்றது. பின்னர் அஃது அடுத்த கோடையில் அதிகப்படுகின்றது. இப்படி கோடைக்குக் கோடை மிகைப்பட்டுக் கொண்டே செல்லுமாம்.இறுதியில் அஃது ஒரு பொல்லாத நோயாகப் புலப்படுமாம். இந்தத் தாக்கம் வாழ்க்கை முழுவதும் இருக்குமாம்.இதை இன்னும் விளக்கமாய் இப்படிச் சொல்லலாம் :

ஒரு குழந்தையின் வாழ்கையில் முதல் 18 ஆண்டுகளை எடுத்துக் கொள்வோம். இதில் 80% அந்தக்குழந்தை சூரியஒளி படும்படியாக இருந்தால் அஃது பிற்காலத்தில் தோல் புற்றுநோய்க்கு ஆளாகிடும் வாய்ப்புகள் உண்டு. தேமல், தோளில் தொய்வு ஏற்படுதல், கண்களில் நிரந்தரப் பாதிப்பு என பல சேதங்களுக்கு ஆளாகலாம்.

இதனால் தாம் நமது குழந்தைகளை நேரடியாக

வெயில் படாமல் பாதுகாத்து வைத்திட வேண்டும். குறிப்பாக காலை 10 முதல் மாலை 4 மணி வரை இதைச் செய்திட வேண்டும். அதேபோல் கோடையில் குழந்தைகளுக்கு அணியும் ஆடையிலும் அதிகமாகக் கவனம் செலுத்திட வேண்டும். தலையை மறைக்கும் தொப்பி ஒன்று ஆடை அணிவகுப்பில் நிரந்தரமாக இருக்கட்டும். மெல்லிய வெள்ளை நிற ஆடைகள் மிகவும் பொருத்தமானவை. கருப்பு நிறம், அதேபோல் அடர்த்தியான நிறமுடைய ஆடைகளை அணிய வேண்டாம்.

சிலர் வெள்ளை நிறத்தவர்கள்தாம் கடும் வெயிலில் பாதிக்கப்படுவார்கள் என்பது போன்ற ஒரு தவறான எண்ணத்தில் இருக்கின்றார்கள். இது உண்மையல்ல. கருப்பு நிறத்தை உடையவர்களும் சமமாகவே பாதிக்கப்படலாம். ஆக எந்த நிறத்தையுடைய குழந்தையாக இருந்தாலும், கடும் வெயிலில் வெளியே வராது இருப்பதே சிறந்தது.

வெயில் நேரங்களில் பால்குடி குழந்தைகளுக்கு அடிக்கடி பால் கொடுப்பது நல்லது.பால்குடி பருவத்தைத் தாண்டிய குழந்தைகளுக்கு பழச்சாறுகள், பாங்கான உணவு, வசதியற்றோர் சுத்தமான தண்ணீரை அடிக்கடி பருகத்தருவது நலம். கண்ணுக்கு குளுமை தரும் கண்ணாடியையும் அணியலாம்.

இப்படி நாமெடுக்கும் அனைத்து வகை எச்சரிக்கைகளையும் விஞ்சி தோல் சேதப்பட்டு போனால், தண்ணீரில் துணியை நனைத்து எரிச்சல் வரும் இடங்களில் சிறிது நேரம் வைக்கலாம். பின்னர் சிறியதொரு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தண்ணீரில் நனைத்த துணியை வைக்கலாம். இப்படி இரண்டொரு தடவை தினமும் செய்யலாம். அரிப்போ, எரிப்போ ஏற்பட்டால் மருத்துவரை அணுகுவதே சிறந்தது.

இப்படி நாம் குழந்தைகளை கோடையின் வெயிலிலிருந்து பாதுகாத்திட வீட்டுக்குள் வைத்திருந்தால் தொலைக்காட்சிகளை பார்த்து கண்ணை கெடுத்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கோடை வெயிலில் இருந்து தப்பிக்க வாய்ப்புகள் உடையோர் கோடை வாசஸ்தலங்களை நோக்கி பயணங்களை மேற்கொள்வார்கள்.

பாட்டாளி மக்களும், பட்டினிச் சாவுகளும் அதிகரித்துவரும் ஒரு நாட்டில், உல்லாசப் பயணங்கள் ஒருபெரும் ஆடம்பரம்தான் என்றாலும் முடிந்தவரை செலவு குறைந்த இடங்களுக்குப் போய்வருவது சிறந்தது.

அவ்வாறு நாம் பயணங்களைச் செய்யும்போது அந்தப் பயணங்களையும் படிப்பினைகள் தருவனவாக எடுத்துக்கொள்ளவேண்டும். இறைவன் இதையே வலியுறுத்துகின்றான். நாம் பூமியில் விரிந்து விசாலமாய் பயணம் செய்வதை வலியுறுத்தும் இறைவன் அவை தரும் படிப்பினைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றான்.

இதற்கு முன்னால் எத்தனையோ சமுதாயங்கள், படைத்தவன் - இறைவன் ஒருவன்தான் என்பதை புறக்கணித்தன. அனைவரையும் படைத்த இறைவன் ஒருவனே என்பதைப் பிரச்சாரம் செய்த இறைவனின் தூதர்களையும் புறக்கணித்தன. ஆணவம் கொண்டு அலைந்தன. அவையெல்லாம் இன்று மண்மூடிக் கிடக்கின்றன.

நாம் கண்டுகளிக்கும் இயற்கையும், எழிலும், வனங்களும் அவை வெளிப்படுத்தும் வனப்பும், இறைவன் இருக்கின்றான் ; அவன் ஒருவன். அவனே நம்மையெல்லாம் படைத்து பரிபாலித்து வருபவன். என்பனவற்றைப் பறைசாற்றுபவை என்பதை பக்குவமாய் எடுத்துச் சொல்லிட வேண்டும். அவனே இந்த உலகை ஒரு முடிவுக்கும் கொண்டு வருவான். அந்த நாளே இறுதிமுடிவு நாள்.

அவன் அப்போது நாம் இந்த உலக வாழ்க்கையில் செய்த நன்மைகள், தீமைகள் இவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவான்.

நாம் செய்த நன்மைகள் அதிகமானால் நல்ல சொர்க்கம் கிடைக்கும். தீமைகள் அதிகமானால், நாம் இப்போது தப்பிக்க நினைத்து உல்லாசப் பயணம் மேற்கொண்டு இருக்கின்றோமே, அதனையும் விஞ்சும் "சுடுதழலில்" சேருவோம்! என்பனவற்றைக் குழந்தைகளுக்குச் சொல்வோம். இப்போதே அவர்களை நேரான வழியில் செலுத்துவோம்!

அநியாயம் செய்த எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம் - அவற்றின் முகடுகள் மீது அவை விழுந்து கிடக்கின்றன; எத்தனையோ கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன; எத்தனையோ வலுவான மாளிகைகள் (பாழ்பட்டுக் கிடக்கின்றன). (அல்குர்ஆன் : 22:45)

அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், (நல்லவற்றைச்) செவியேற்கும் காதுகளும் உண்டாகியிருக்கும், நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாகவில்லை; எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடாகின்றன. (அல்குர்ஆன் : 22:46)

மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் : 40:21, 40:82 ,30:9,35:44,29:20

**Courtesy : TNIE 25.04.2005**

# இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்




# "ஹிஜாப்"
# எங்கள் இறைவன் எங்களுக்கு கொடுத்த கட்டளை

**- நூர்**

*2014ம் ஆண்டுக்கு பிந்தைய, தற்போதைய மோடியின் பாசிச ஆட்சியில், வட மாநிலங்கள் முழுமையாக பாஸிஸ்டுகளின், இந்துத்துவவாதிகளின் கூடாரங்களாக மாறி நிற்கின்றது. நித்தம் ஒரு கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் என நாள்தோறும் பாஸிஸ்டுகள் தங்கள் வெறியாட்டத்தை வெளிப்படையாக நிகழ்த்தி கொண்டிருக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல்கள், கும்பல் வன்முறைகள், படுகொலைகள், மாட்டின் பெயரால் கொலை செய்யப்படுவது என, இந்தியாவின் வடமாநிலங்கள் முஸ்லிம்கள் வாழ்வதற்கு பாதுகாப்பற்ற பகுதிகள் என்று பேசப்படக்கூடிய அளவிற்கு அங்கே முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது.*

*இந்தியாவின் வட மாநிலங்களின் நிலைமை இப்படியிருக்க, "இஸ்லாம் எங்கே அதிகமாக எதிர்க்கப்படுகிறதோ, அங்கேதான் அது வேகமாக வளரும்" என்ற வரலாற்றுக்கு ஏற்ப பாஸிஸத்தின் கூடாரமாக திகழும் இந்தியாவின் வட மாநிலங்களில் இஸ்லாத்தை நோக்கி மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.*

*ஏதோ, சாதாரணமாக இங்கொன்றும், அங்கொன்றுமாக இல்லாமல், படித்த சிந்திக்கும், இளைஞர்கள், பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அப்படி இந்த கோரமான, மோசமான இந்தியாவின் பாஸிச ஆட்சியில் வட மாநிலங்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் அனுபவங்களை இனி பதிவு செய்வது என முடிவெடுத்துள்ளோம். அதன்வழி சகோதரி நூர் தனது அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்....!*

### நூர்

என்னுடைய பெயர் நூர். நான் முற்றிலும் இந்து மதத்தை மையமாக கொண்ட குடும்பத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவள். என்னுடைய குடும்பம் தீவிரமாக இந்துமதத்தை பின்பற்றக் கூடியதாக இருந்ததால் என்னுடைய வாழ்க்கையும் அப்படியே இருந்தது. ஒரு பெண் தன்னுடைய வாழ்க்கையில், திருமணம் செய்து கொண்டு, குழந்தைகளை பெற்றுக்கொண்டு கணவனுக்கு சேவைகள் செய்ய வேண்டும் என்று எனக்கு கற்பிக்கப்பட்டது. அவன் நல்லவனாக இருந்தாலும் சரி, தீயவராக இருந்தாலும் சரி. இப்படி பெண்களை ஒடுக்கும் பல விஷயங்கள் இந்து மதத்தில் இருப்பதைக் கண்டேன்.

ஒரு பெண் விதவையாக இருந்தால், அவள் எப்போதும் வெள்ளைப் புடவை அணிந்து, சைவ உணவு உண்ண வேண்டும். தலைமுடியைக் குட்டையாக வெட்ட வேண்டும். மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. மணமகள் எப்போதும் வரதட்சணையை கணவரின் குடும்பத்திற்கு செலுத்த வேண்டும். மேலும் மணமகள் கொடுப்பதில் சிரமம் உள்ளதா என்பதைப் பொருட்படுத்தாமல் கணவர் எதையும் கேட்கலாம்.

அதுமட்டுமல்ல, திருமணத்திற்குப் பிறகு முழு வரதட்சணையும் கொடுக்கமுடியாவிட்டால் அவள் மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் சித்திரவதை செய்யப்படுவாள். மேலும் "சமையலறை மரணத்திற்கு" பலியாக நேரிடும். அங்கு கணவன் அல்லது மாமியார் அல்லது இருவரும் மனைவி சமையல் செய்யும் போது அல்லது சமையலறையில் இருக்கும் போது தீ வைத்து எரிக்க முயல்கிறார்கள். அது ஒரு தற்செயலான மரணம் போல தோற்றமளிக்க முயற்சிக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டு என் தந்தையின் நண்பரின் மகளுக்கும் இதே கதி!

இவை அனைத்திற்கும் மேலாக, இந்து மதத்தில் கடவுள் மனிதர்கள்கைப்போல நடத்தப்படுகிறார்.

இந்துமதக் கொண்டாட்டங்களில் ஒன்றில், திருமணமாகாத பெண்கள் ஒரு குறிப்பிட்ட கடவுளை(ஷிரா) பிரதிநிதித்துவப்படுத்தும் சிலையிடம் பிரார்த்தனை செய்து வழிபடுகிறார்கள். இதனால் அந்த கடவுளுக்கு கிடைத்த கணவர் போன்று தங்களுக்கும் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். என் அம்மா கூட இதைச் செய்யச் சொன்னார்.

இந்து மதம் மூடநம்பிக்கைகள் மற்றும் வெளிப்படையான ஆதாரம் இல்லாத விஷயங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை இதுபோன்ற நம்பிக்கைகள் எனக்கு உணர்த்தியது. மனித சமூகத்தின் சரிபாதி அங்கமான பெண்களை ஒடுக்கும் மரபுகளை மதம் சரியாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தேன்.

### மேலை நாடுகளில் பெண்கள்

அதைத்தொடர்ந்து, நான் இங்கிலாந்துக்கு படிக்க வந்தபோது, குறைந்த பட்சம் இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கும் நாடு. அவர்களை ஒடுக்காத நாடு என்று நினைத்தேன். தாம் விரும்பியதை செய்ய அனைவருக்கும் சுதந்திரம் உள்ள நாடு இது என்று நினைத்தேன்.

அதே கண்ணோட்டத்தில் இங்குள்ள மக்களைச் சந்திக்கவும், புதிய நண்பர்களை உருவாக்கவும், இந்த புதிய சமுதாயத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், மேலும் தன்னை "சமூகப்படுத்திக்கொள்ளவும்" என் நண்பர்கள் சென்ற (பார்கள், நடன அரங்குகள் போன்ற) எல்லா இடங்களுக்கும் செல்ல ஆரம்பித்தேன். நான் நினைத்த, எதிர்பார்த்த "சமத்துவம்" கோட்பாட்டில் இருந்ததைப் போல நடைமுறையில் இல்லை என்பதை நான் உணர்ந்தேன்.

வெளிப்புறமாக, கல்வி, வேலை மற்றும் பலவற்றில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படுவதாகக் காணப்பட்டது. ஆனால் உண்மையில் பெண்கள் இன்னும் வித்தியாசமான, நுட்பமான முறையில் ஒடுக்கப்பட்டனர்.

நான் என் நண்பர்களுடன் அவர்கள் தங்கியிருந்த அந்த இடங்களுக்குச் சென்றபோது, என்னிடம் பேசுவதற்கு அனைவரும் ஆர்வமாக இருப்பதைக் கண்டேன். அது சாதாரணமானது என்று நினைத்தேன்.

ஆனால் பிறகுதான் நான், இவர்கள் எவ்வளவு அற்பத்தனமானவர்கள் என்பதை உணர்ந்தேன். மேலும் இவர்கள் உண்மையில் எதைத்தேடுகிறார்கள் என்பதையும் உணர்ந்தேன்.

நான் நானாக இல்லாதது போல் விரைவில் சங்கடமாக உணர ஆரம்பித்தேன்: மக்கள் என்னை விரும்புவதற்காக நான் ஒரு குறிப்பிட்ட ஆடைகளை அணிய வேண்டியிருந்தது. மேலும் அவர்களைப் பிரியப்படுத்த ஒரு குறிப்பிட்ட வழியில் பேச வேண்டியிருந்தது.

நான் மேலும் மேலும் அசௌகரியமாக உணர்ந்தென், மேலும் என்னை நானே குறைவாக உணர்ந்தேன். இந்த உணர்வுகளிலிருந்து என்னால் வெளியேற முடியவில்லை.

அந்த வாழ்க்கை முறையில் பெண்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அந்த ஆண்கள் தங்களில் மகிழ்ச்சிக்காக ஒரு குறிப்பிட்ட ஆடைகளை பெண்களை அணிய வைக்கிறார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் எனக்கு சில முஸ்லிம் அறிமுகங்கள் இருந்தாலும் இஸ்லாத்தைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. ஆனால் நான் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் இருக்க தான் வாழும் வாழ்க்கை மரியாதைக்குரியதாக இருக்க ஏதேனும் ஒன்றைக் கண்டுபிடிக்க நான் உண்மையிலேயே ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

மற்றவர்களுடன் சேர்ந்து வேடிக்கை பார்ப்பது ஒருவரின் நம்பிக்கை என்றால், அவர்கள் இதைச் செய்கிறார்கள்.

பணம் சம்பாதிப்பது ஒருவரின் நம்பிக்கை என்றால், அதை அடைய அவர்கள் எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

குடிப்பழக்கம் வாழ்க்கையை அனுபவிக்க ஒரு வழி என்று அவர்கள் நம்பினால், அவர்கள் அதைச் செய்கிறார்கள்.

ஆனால் இவை அனைத்தும் எங்கும் செல்லாது என்று நான் உணர்கிறேன். யாரும் உண்மையிலேயே திருப்தி அடையவில்லை. மேலும் பெண்கள் தேடும் மரியாதை இந்த வழியில் குறைந்துதான் வருகிறது.

"சம உரிமைகள் வழங்கப்பட்ட சமூகம்" என்று அழைக்கப்படும் இந்த நாடுகளில், உங்களுக்கு ஒரு ஆண் நண்பன் இருக்கவேண்டும். மேலும் உங்களது திருமணத்திற்கே முன்பே நீங்கள் உங்கள் கன்னித்தன்மையை இழந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இவைகளும் பெண்களுக்கு எதிரான ஒருவித அடக்குமுறைதான். பல பெண்கள் உணர்வதில்லை.

### இஸ்லாத்தில் பெண்கள்

இஸ்லாம் ஒரு அடக்குமுறை மதம் என்றும், அங்கு பெண்கள் தலை முதல் கால் வரை மறைக்கப்படுவார்கள் என்றும், அவர்களுக்கு எந்த சுதந்திரமும் உரிமையும் இல்லை என்றும் பலருக்கு தவறான கருத்து உள்ளது.

உண்மையில், இஸ்லாத்தில் பெண்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் சில மேற்கத்திய மற்றும் வேறு சில சமூகங்களில் முஸ்லிம் அல்லாத பெண்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் ஒரேயொரு உரிமையுடன் ஒப்பிடுகையில், கடந்த *1400* ஆண்டுகளாக இஸ்லாத்தில் பெண்களுக்கு அது வழங்கப்பட்டிருக்கும்.

முஸ்லிம் பெண்களுக்கு வாரிசுரிமை உண்டு. அவர்கள் தாங்கள் சொந்தமாக வர்த்தகம் மற்றும் வணிகம் செய்ய உரிமை உண்டு. கணவனுக்கு எந்த உரிமையும் இல்லாத தங்களது மஹர் உரிமை. தனக்கு பிடிக்காத திருமண பந்தத்திலிருந்து வெளியேற முஸ்லிம் பெண்களுக்கு முழு உரிமை உண்டு. மேலும் அவர்களுக்கு கல்விக்கான உரிமையும், திருமணத்தை மறுக்கும் உரிமையும் உள்ளது.

இறைவனின் வார்த்தையான குர்ஆனிலேயே ஆண்களுக்கு மனைவியிடம் கருணை காட்டவும், பெண்களின் உரிமைகளை வலியுறுத்தும் பல வசனங்கள் உள்ளன.

இஸ்லாம் சரியான விதிகளை வழங்குகிறது, ஏனென்றால் அவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. நம்மைப்படைத்த கடவுளால் உருவாக்கப்பட்டவை. எனவே இது ஒரு சரியான மதம்.

பெரும்பாலும் முஸ்லிம் பெண்களிடம் தலை முதல் கால் வரை ஏன் மூடி வைக்கப்படுகிறார்கள் என்று கேட்கப்படுகிறது. மேலும் இது அடக்குமுறை என்று சொல்லப்படுகிறது. அது உண்மை இல்லை. இஸ்லாத்தில், திருமணம் என்பது வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாகும், எனவே, ஒரு பெண் தன் கணவனுக்கு மட்டும் தான் காட்சிப்படுத்த வேண்டும். தன்னை எல்லோரிடமும் காட்டிக் கொள்ளக் கூடாது. அதேப்போல ஆண் கூட தன் உடலின் சில பாகங்களை தன் மனைவிக்குத் தவிர வேறு யாருக்கும் காட்டக்கூடாது. மேலும் பெண்கள் தங்களுடைய உடலை மறைக்கும் இந்த கட்டளை மனிதர்களிடமிருந்து வந்தவையல்ல. நம்மைப்படைத்த இறைவனிடம் இருந்து வந்தவை.

நபியே! நீர் உம் மனைவிகளுக்கும், உம் பெண்மக்களுக்கும் ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலைமுன்றானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக; அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ்

*மிக மன்னிப்பவன்; மிக்க அன்புடையவன். (33:59.)*

நாம் வேறு எந்த சமூகத்தையும் சுற்றிப் பார்த்தால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்கள் தாக்கப்படுவதும் துன்புறுத்தப் படுவதும் அவர்களின் உடையின் காரணமாக இருப்பதைக் காணலாம்.

நான் கருத்து தெரிவிக்க விரும்பும் மற்றொரு விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தில் இறைவனால் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் பொருந்தும்.

*இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது; இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்; மேலும், (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது; மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்; மேலும், முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.(24:31).*

**ஹிஜாபிற்குள் நான்**

நான் ஹிஜாப் அணிந்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உண்மையில், நான் அதை அணிய விரும்புகிறேன். நான் ஹிஜாப் அணிந்தபோது, மிகுந்த திருப்தியையும் மகிழ்ச்சியையும் உணர்ந்தேன். இறைவனின் கட்டளைக்கு கீழ்படிந்த திருப்தி. மேலும் நான் பாதுகாப்பாகவும் உணர்ந்தேன். உண்மையில் மக்கள் அதற்காக என்னை அதிகம் மதிக்கிறார்கள். என்னிடம் நடத்தையில் உள்ள வித்தியாசத்தை என்னால் உண்மையில் பார்க்க முடிந்தது.

இறுதியாக, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது கண்மூடித்தனமாகவோ அல்லது எந்த நிர்ப்பந்தத்தினாலோ அல்ல என்று கூற விரும்புகிறேன்.

குர்ஆனிலேயே "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் வேண்டாம்" என்று ஒரு வசனம் உள்ளது.

நான் உறுதியுடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். மனித சமூகத்தின் சீர்கேடுகளில் இரு பக்கங்களையும் பார்த்திருக்கிறேன். அதில் இருந்திருக்கிறேன். இப்போது நான் சரியானதைச் செய்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும்.


இஸ்லாம் பெண்களை ஒடுக்கவில்லை, மாறாக இஸ்லாம் அவர்களை விடுவித்து அவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்கிறது. இஸ்லாம் என்பது இறைவன் முழு மனித இனத்திற்காகவும் தேர்ந்தெடுத்த மதம்.

அதை ஏற்றுக்கொள்பவர்கள் உண்மையிலேயே மனித குலத்தில் அடக்குமுறைகளுக்குள்ளான சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

*(சகோதரி நூர் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக முஸ்லிமாக இருந்து, தற்போது **U.K.,** எசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறையில் இளங்கலைப் படிப்பின் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார்.)*

**- http:/www.muslimconverts.com**

**அஷ்ரப் அலீ**



ஷரீஅத்தின் போர்வாள்

மூத்த மார்க்க அறிஞர் மௌலவி

# T.J.M. ஸலாஹுத்தீன் ரியாஜி இறைவனிடம் ஏகினார்.

28.01.2022 வெள்ளிக்கிழமை மௌலானா T.J.M.ஸலாஹுத்தீன் ரியாஜி அவர்கள் இறைவனிடம் ஏகினார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்..

29.01.2022 சனிக்கிழமை திருநெல்வேலி பேட்டை மக்தூம் ஞானியார் பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது.

பெருந்திரளான உலமாக்கள், சமுதாயப் பிரமுகர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், இயக்கங்களின் பொறுப்பாளர்கள் தொழுகையில் பங்கேற்றனர்.

அன்னாரின் அணுக்கமான மாணவர் "வைகறை வெளிச்சம்" துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி ஜனாஸா தொழுகை நடத்தினார்.

பேரன்பாளன் அல்லாஹ் அன்னாரின் மறுமை வாழ்வை சிறப்பாக்குவானாக. அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், மாணவர்களுக்கும் சப்ரூன் ஜமீல் எனும் அழகிய பொறுமையைத் தந்தருள்வானாக. ஆமீன்.

**- வைகறை வெளிச்சம்**

**ஆசிரியர் குழு மற்றும் வாசகர் வட்டம்.**

**மௌலானா ஸலாஹுத்தீன் ரியாஜி வரலாற்றுக் குறிப்பு.**

குன்றாத கம்பீரம், குலையாத மனஉறுதி, குறையாத குரல்வளம் இவற்றை தன் அடையாளமாகக் கொண்ட மௌலானா T.J.M.ஸலாஹுத்தீன் ரியாஜி அவர்கள் 12.12.1942 அன்று திருநெல்வேலி பேட்டையில் ஜைனுல் ஆபிதீன் ஜமீலா பேகம் தம்பதியின் மகனாகப் பிறந்தார்.

உள்ளூர் அரசுப் பள்ளிக்கூடத்தில் ஏழாம் வகுப்பு வரை படித்தார். தன் பதிமூன்றாவது வயதில் உள்ளூரில் ரியாழுல் ஜினான் அரபுக்கல்லூரியில் மார்க்கக் கல்வி கற்றிட நுழைந்தார்.

1963 ஆம் ஆண்டு ஆலிம் பட்டம் பெற்றார். அதே ஆண்டு மதார் பாத்திமா என்ற பெண்ணை மணந்தார். இத்தம்பதிக்கு மூன்று ஆண் பிள்ளைகள், இரண்டு பெண் பிள்ளைகள் பதினான்கு பேரன் பேத்திகள். பேரன்களில் ஒருவர் ஆலிம் பட்டம் பெற்றவர்.

1963 முதல் 1971 வரை தான் கற்ற கல்லூரி யிலேயே பேராசிரியராகப் பணியாற்றினார்.

1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி பேட்டையில் "அல் ஹசனாத்துல் ஜாரியாத்" என்ற அரபுக் கல்லூரியை நிறுவி அதன் முதல்வராக 2012 ஆம் ஆண்டு வரை நீடித்தார்.

அரபுக் கல்லூரிகளின் வட்டாரத்தில் இவரை



“அரபு இலக்கணத்தின் புலி” என்பார்கள்.

இளமைக் காலத்தில் தன் சொந்த ஊரான திருநெல்வேலி பேட்டையில் பல்வேறு நற்பணி மன்றங்களை நிறுவி சமூகப்பணி ஆற்றியிருக்கிறார்.

திருக்குர்ஆன் நற்பணிமன்றம், அஞ்சுமன் ஹிமாயத் இஸ்லாம், நபிகள் நாயகம் நற்பணிமன்றம், இஸ்லாமிய பைத்துல்மால் சங்கம், அல்-அமீன் கல்வி அறக்கட்டளை இவையெல்லாம் அவர் நிறுவி நடத்திய சேவை அமைப்புகள்.

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட சமயத்தில் இவர் ஆற்றிய வீர உரை இவருக்கு “ஷரீஅத்தின் போர்வாள்” என்ற பட்டத்தை பெற்றுத்தந்தது.

1991 முதல் 2002 வரை தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளராக திறம்பட சேவை செய்தார்.

திண்டுக்கல் காசிம் மௌலவி, சென்னை கே.கே. நகர் கமருஸ்ஸமான் மௌலவி ஆகியோர் சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டபோது அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் வீரம் மிக்கவை. அவர்களின் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டினார்.

மனித நீதி பாசறை என்ற நம்முடைய அமைப்பு வீரியமாக செயல்பட்டுக் கொண்டிருந்தபோது அதன் மேடைகளில் வீரமுழக்கம் செய்திருக்கிறார்.

அவர் ஒரு சண்டமாருதப் பேச்சாளர். பழகுதற்கினிய பண்பாளர். நினைவாற்றலில் நிகரற்றவர். இவரின் கால்படாத முஸ்லிம் கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை எனலாம்.

அறுபது ஆண்டுகளாக சொற்பொழிவு மேடைகளில் கோலோச்சியவர். மக்களின் ரசனையும், கேட்கும் திறனும் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மாறிக்கொண்டே வந்தபோதிலும் தலைமுறை தாண்டியும் சொற்பொழிவு மேடைகளை அலங்கரித்தவர்.

தமிழக ஆலிம்கள் ஒரு பாசத் தந்தையை இழந்து நிற்கின்றனர். சொற்பொழிவு மேடை ஒரு நாயகனை இழந்துவிட்டது. இஸ்லாமிய அறிவுலகம் ஓர் ஆசானை இழந்துவிட்டது.

எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ் அன்னாரின் மறுமை வாழ்வை சிறப்பாக்குவானாக. ஆமீன்.

**- நமது நிருபர்**

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?

இந்த நூலை எவ்வளவு பேர் வாசித்துள்ளனர் என்று தெரியவில்லை. தவற விட்டவர்கள் எப்படியாவது வாசித்து விடுங்கள். அவ்வப்போது தனக்கு எதிராக நடக்கும் நிகழ்வுகளால் தூண்டப்பட்டு எதிர்வினையாற்றுவதோடு அமைதியாகி விடும் சமூகமாக.... அல்லது தனக்குள் இருக்கிற குறை பாடுகள் குறித்தே அதீதமாய் கவலைப்பட்டுக் கொள்ளும் சமூகமாக மாறியிருப்பதுடன்...

தன்னை உயர்த்தும் சரியான தீர்வுகளை நோக்கி விரைந்து செல்லவும் தயங்கி நிற்கிறது முஸ்லிம் சமூகம். இந்த உலகை வழிநடத்தும் அறிவு, தொழில், அதிகாரம் சார்ந்த துறைகளில் முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி அறவே இல்லாத அளவிற்கு பின்தங்கிப் போனதன் காரணமும் அதன் விளைவுகளும் என்ன என்பதைப் பற்றி விரிவாகப் பேசியுள்ளார் பெருமானாரின் வம்சாவழி வாரிசான பேரறிஞர். அபுல் ஹஸன் அலி நத்வி(ரஹ்) அவர்கள்.

இந்த நூலிற்கு அணிந்துரை அளித்துள்ள அறிஞர். சைய்யது குதுப்(ரஹ்) அவர்களது பொக்கிஷமான மேற்கோள் ஒன்றை மட்டும் இங்கு பதிவு செய்கிறேன். “மனித இனத்தின் அழிவிற்கும் அதன் விமோஷனத்திற்கும் மனித இனத்தின் சிந்தனைப் போக்கே காரணம் என்பது நூலாசிரியரின் தெளிந்த முடிவு”. (பக்கம்:30)

எவராலும் தீர்க்க முடியாத வகையில் வியாபித்துக் கிடக்கிற இந்த உலகின் சிக்கல்கள் பலவற்றிற்கும் காரணம், சரியான தீர்வுகளை செயல்படுத்தும் அதிகார பீடத்திற்கு தவறான சிந்தனை கொண்ட மனிதர்கள் சென்று அமர்ந்தது தான். இந்தப் பேரண்டம் முழுவதையும் படைத்த இறைவனை நம்புகிற சிறந்த மனித சமூகம் அந்தப் படைப்பாளனின் உயரிய வழிகாட்டுதல்களைப் புரிந்து கொள்வதில், பின்பற்றி வாழ்ந்திடுவதில் தன் சிந்தனை வளங்களைத் தவறவிட்டதாலேயே வீழ்ச்சியின் படுபாதாளத்திற்குள் விழுந்து சிக்கிக் கொண்டது" என்பது இந்த நூலின் இரத்தினச் சுருக்கம்.

இந்த வீழ்ச்சியும் பின்னடைவும் முஸ்லிம் சமூகத்தை மட்டுமல்ல, இந்த உலகையே எவ்வளவு பெரிய இழப்புகளுக்கு ஆளாகச் செய்துள்ளது என்பதை வரலாற்று ஆதாரங்களோடு அறியச் செய்கிறது இந்த நூல்.

நமது சிக்கல்களுக்கான தீர்வுகளை யாரிடம் எதிர்பார்த்து நிற்கிறோமோ அவர்கள் ஒருபோதும் அவற்றை உணரப் போவதுமில்லை. தீர்க்கப் போவதுமில்லை.

“அனைத்திலும் தன்னிறைவு பெற்றிடும் இலக்கை” நோக்கிய பயணத்திற்கு சமூகம் தயாராக வேண்டும். அயராமல் அதனைத் தயார்படுத்தவும் வேண்டும்.

(இது முழுநூல் குறித்த எனது மதிப்புரை அல்ல. அதன் ஒரு துளி மட்டுமே.)

***- Hidhayat Noori***





# உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்





கடந்த 19.02.2022 அன்று மாலை கொள்ளிடம், குத்தவக்கரை மற்றும் பரவங்காடு ஆகிய கிராமங்களில் இஸ்லாமிய அழைப்பு பணி செய்யப்பட்டது. பரவங்காடு கிராமத்தில் அழைப்பு பணி செய்து கொண்டிருந்தபோது அசர் தொழுகைக்கான நேரம் முடிய இருந்தது அங்கேயே நின்று தொழுகை நடத்தினோம் அல்ஹம்துலில்லாஹ்.

இதில் ஜாதி ஒழிந்தது, தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், இஸ்லாத்தை நோக்கி, எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் இன்னும் சில புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

21.02.2022 அன்று கொள்ளிடம் தைக்காலை சுற்றியுள்ள கிராமங்களில் சியாலம் கீழத் தெரு, மேலத் தெரு இன்னும் சில இடங்களில் இஸ்லாமிய அழைப்பு பணி செய்யப்பட்டது. இதில் அல் குர்ஆன் தமிழாக்கம், எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர், தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், ஜாதி ஒழிந்தது, அம்பேத்கர் மதமாற்ற பின்னணி என்ன? போன்ற புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**- அன்பகம் தாஃவ குழு**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**

**தொடர்புக்கு: 8148129887**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002